43

TAMIL MANI KOVAI

BOOK II

FORM V

OFFICE OF THE REGISTRAR OF ...
4 - JAN 1939

BY

VIDWAN C. KUPPUSWAMY ALWAR,
TAMIL PANDIT,
ST. JOSEPH'S HIGH SCHOOL, TRICHY.

1236

E. M. GOPALAKRISHNA KONE
MADURA :: :: MADRAS

Copyright] 1937 [Price As. 14

தமிழ் மணிக் கோவை

இரண்டாம் கோவை

தொகுப்பாசிரியர்:
வித்துவான் சி. குப்புசாமி ஆழ்வார்,
தமிழாசிரியர்,
செயிண்டு ஜோஸப்புக் கலாசாலை, திருச்சிராப்பள்ளி

236
424-8486

*

பதிப்பாளர்:
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்
மதுரை : : சென்னை

பதிப்புரிமை] 1937 [விலை அணா 14

முதற் பதிப்பு
: : 1937 : :

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - JAN 1938
MADRAS

முகவுரை

தமிழ் நாட்டினுள்ள ஆங்கிலக் கலாசாலைகளில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கென்று, தமிழ்ப்பாட புத்தகங்கள் புதியன புதியனவாக வெளி வந்துகொண்டிருக்கின்றன. புதுமை மணங் கமழ, மேலும் பல புதிய புத்தகங்கள் வெளிவருவதைத் தமிழ் வளர்ச்சி கருதும் அறிஞர்கள் ஆதரிப்பார்களென்பது ஒருதலை.

'தமிழ் மணிக் கோவை' என்னும் இப்புத்தகம், சென்னை அரசியலார் பாடத் திட்டத்தின்படியும், எஸ். எஸ். எல். ஸி. தமிழ்ப்பாட புத்தக அமைப்பையொட்டியும், தேசீயம், இலக்கியம், வரலாறு, விஞ்ஞானம் முதலிய பல துறைப் பொருள்களைப்பற்றி ஆராய்ச்சி மிகுந்த அறிஞர்கள் வரைந்துள்ள அருங் கட்டுரைகளைக் கொண்டும் வெளிவருகிறதால், இதனை அனைவரும் ஆதரிப்பரென்று நம்புகிறேன்.

இப்புத்தகத்தில் வெளி வந்துள்ள அரிய கட்டுரைகளைப் பாடங்களாகச் சேர்த்துக்கொள்ள அன்புடன் அனுமதியளித்த அறிஞர்களுக்கும், அன்பர்களுக்கும், எனது மனமுவந்த நன்றி அறிதலை மிக்க தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

'தேசீயக் கவி பாரதியார்,' 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' ஆகிய இரு கட்டுரைகளுக்கும், கட்டுரையாசிரியர்களிடமிருந்து அன்பார்ந்த அனுமதி வாங்கி யளித்த எனது நண்பர் வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியார் அவர்களுக்கும், இப்புத்தகத்தை அன்புடன் ஏற்று வெளியிட முன்வந்த திரு. இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனர் அவர்களுக்கும் எனது உள்ளார்ந்த நன்றி உரியதாகும்.

திருச்சிராப்பள்ளி,
20—11—'37

சி. குப்புசாமி ஆழ்வார்

குறிப்பு

இப்புத்தகத்தில் வெளிவந்துள்ள "இன்ப வாழ்க்கை" என்னும் கட்டுரையும், "பூமியும் சந்திரனும்" என்னும் கட்டுரையும், முறையே, "தமிழ்ப் பொழில்," "கலைமகள்" ஆகிய இரண்டில் வெளிவந்துள்ளனவாகும். இவை, முறையே கட்டுரை யாசிரியரின் அனுமதி பெற்றும், பொழிற்றொண்டராகிய செந்தமிழ்ப் புரவலர் இராவ் சாகிப் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை யவர்களின் அனுமதி பெற்றும், இங்குப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

சி. கு.

பொருளடக்கம்

பொருள்	செய்யுட் பகுதி	பக்கம்
I. வாழ்த்து :		
1. கடவுள் வாழ்த்து	....	1
2. கலை மகள் வாழ்த்து	....	2
3. தமிழ்த்தாய் வாழ்த்து	....	2
II. அறவுரை :		
1. திருக்குறள்	....	3
2. முதுமொழிக்காஞ்சி	....	4
3. திரிகடுகம்	....	5
4. நான்மணிக்கடிகை	....	6
5. சாணக்கிய நீதி	....	7
6. பழமொழி	....	8
7. நாலடியார்	....	9
III. தொடர் நிலைச் செய்யுள் :		
1. பாரத வெண்பா—கண்ணன் தூது செல்லுதல்		11
2. கம்பராமாயணம்—அனுமான் சூளாமணியைப் பெறுதல்	...	19
3. திருவிளையாடற் புராணம்—கிழியறுத்த திருவிளையாடல்	....	27
4. பாகவத புராணம்—குசேலர் வரலாறு	....	36
5. தேம்பாவணி—கருணையன் தனிமையில் உரைத்த புலம்பல்	....	42
IV. சிறு நூல்கள் :		
1. கந்தரந்தாதி	....	48
2. திருவரங்கக் கலம்பகம்	....	48
3. குற்றாலக் குறவஞ்சி	....	48
4. திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	....	49
V. பல்வகைப் பொருள் :		
1. மருத நில வளம்	....	50
2. உடல் நல வழிகள்	....	50
3. தமிழ் மொழியின் சிறப்பு	....	51
4. வருணனை	....	52

பொருள் பக்கம்

5. பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி 53
6. ஏழு வள்ளல்கள் 54

VI. தனிப்பாடல்கள் :

1. வினு வுத்தரம் 56
2. சொல் நயம் 56
3 இராமச் சந்திரக் கவிராயர் சிறப்பு 56
4. முறை மாருகத் தோன்றப் பாடியது 57
5. சீட்டுக் கவி 57

VII. பொன் மொழிகள் :

புற நானூறு 58

உரை நடைப் பகுதி

1. தேசீயக்கவி பாரதியார் 59
[திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள், எம்.ஏ.,பி.எல்.]
2. விளை பொருள்கள் 71
[திரு. ஜே. எஸ். பொன்னையா அவர்கள், எம். ஏ.]
3. கபிலரும் பாரியும் 80
[பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்]
4. எங்கள் நாட்டு ஆடை 90
[வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்]
5. பெருந்தலைச் சாத்தனுர் 97
[திரு. ஆ. கார்மேகக் கோனர் அவர்கள்]
6. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு. 110
[திரு. அ. சிதம்பரநாதஞ் செட்டியார் அவர்கள், எம். ஏ.]
7. ஐரோப்பியர் வருகை 116
[திரு. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்]
8. இன்ப வாழ்க்கை 127
[திரு. ஊ. சா. வேங்கடராம ஐயரவர்கள்]
9. நாடகம் 134
[வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியார் அவர்கள்]
செய்யுட்பாடக் குறிப்புரை 141

தமிழ் மணிக் கோவை

இரண்டாங் கோவை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - JAN 1939
MADRAS

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

கம்பராமாயணம்

1. உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசரண் நாங்களே.

தாயுமானவர் பாடல்

2. கந்துகம தக்கரியை வசமாய்ந டத்தலாம்;
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம்; ஒருசிங்கம் முதுகின்மேற்கொள்ளலாம்;
கட்செவி யெடுத்தாட்டலாம்;
வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்;
வேறொருவர் காணாமல் உலகத்து லாவலாம்;
விண்ணவரை யேவல்கொளலாம்;
சந்ததமும் இளமையோ டிருக்கலாம்; மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாம்;
சலமேல் நடக்கலாம்; கனல்மேல் இருக்கலாம்;
தன்னிகரில் சித்திபெறலாம்;

சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது, சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோம யானந்தமே!

---

2. கலைமகள் வாழ்த்து

சகலகலாவல்லி மாலை

3. தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்;வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே,
சகல கலாவல்லியே! —குமரகுருபர சுவாமிகள்

---

3. தமிழ்த்தாய் வாழ்த்து

மனோன்மணியம்

4. நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.
—பி. சுந்தரம் பிள்ளை, எம். ஏ.

II. அறவுரை

1. திருக்குறள்

பெரியார் சிறியார் தன்மை

1. செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

அன்புடைமை

2. அன்பீனும் ஆர்வ முடைமை; அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

இனியவை கூறல்

3. இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

செய்ந்நன்றியறிதல்

4. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

நடுவு நிலைமை

5. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

மொழியடக்கம்

6. தீயினால் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

பொறையுடைமை

7. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

பயனில்லாதவற்றைச் சொல்லாமை

8. பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல். —திருவள்ளுவர்

---

2. முதுமொழிக் காஞ்சி

சிறந்த பத்து

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்க முடைமை.
2. காதலிற் சிறந்தன்று கண்ணஞ்சப் படுதல்.
3. மேதையிற் சிறந்தன்று கற்றது மறவாமை.
4. வண்மையிற் சிறந்தன்று வாய்மை யுடைமை.
5. இளமையிற் சிறந்தன்று மெய்பிணி யின்மை.
6. நலனுடை மையில் நாணுச் சிறந்தன்று.
7. குலனுடை மையில் கற்புச் சிறந்தன்று.
8. கற்றலில் கற்றாரை வழிபடுதல் சிறந்தன்று.
9. செற்றாரைச் செறுத்தலில் தற்செய்கை சிறந்தன்று.
10. முற்பெரு கலிற்பிற் சிறுகாமை சிறந்தன்று.

அறிவுப் பத்து

1. ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
பேரிற் பிறந்தமை யீரத்தின் அறிப.
2. ஈர முடைமை யீகையின் அறிப.
3. சோரா நன்னட்பு உதவியின் அறிப.
4. கற்ற துடைமை காட்சியின் அறிப.
5. ஏற்ற முடைமை யெதிர்கோளின் அறிப.

6. சிற்றிற் பிறந்தமை பெருமிதத்தின் அறிப.
7. குத்திரஞ் செய்தலிற் கள்வனுதல் அறிப.
8. சொற்சோர் வுடைமையின் எச்சோர்வும் அறிப.
9. அறிவுசோர் வுடைமையிற் பிறிதுசோர்வும் அறிப.
10. சீருடை யாண்மை செய்கையின் அறிப.

—கூடலூர்க்கிழார்

---

3. திரிகடுகம்

நன்மைதரும் நட்பினர் தன்மை

1. தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன் ;
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணுதான் ;
கோளாள னென்பான் மறவாதான் ; இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது.

செல்வத்தை அழிக்கும் ஆயுதம்

2. தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும், இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை.

வன்மையிற் சிறந்த மூன்று பொருள்கள்

3. நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும் ;
அறனை நினைப்பானை அல்பொருள் அஞ்சும் ;
மறவனை யெவ்வுயிரும் அஞ்சும் ; இம்மூன்றும்
திறவதில் தீர்ந்த பொருள்.

குடிமாசிலார்க்குள்ள குணங்கள்

4. கயவரைக் கையிகந்து வாழ்தல் ; நயவரை
நள்ளிருளுங் கைவிடா நட்டொழுகல் ;—தெள்ளி
வடுவான வாராமற் காத்தல் ; இம்மூன்றும்
குடிமாசி லார்க்கே யுள.

நல்வழி கேடாமைக்குக் காரணங்கள்

5. உப்பின் பெருங்குப்பை நீர்படியின் இல்லாகும் ;
நட்பின் கொழுமுளை பொய்வழங்கின் இல்லாகும் ;
செப்ப முடையார் மழையனையர் ; இம்மூன்றும்
செப்பநெறி தூராத வாறு. —நல்லாதனர்

---

4. நான்மணிக்கடிகை

1. மண்ணி யறிப மணிநலம் ; பண்ணமைத்(து)
ஏறிய பின்னறிப மாநலம் ; மாசறச்
சுட்டறிப பொன்னின் நலங்காண்பார் ; கெட்டறிப
கேளிரா லாய பயன்.

தாழ்ந்த குலத்தில் உயர்ந்தோரும் பிறப்பர்

2. கள்ளி வயிற்றில் அகில்பிறக்கும் ; மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் ; பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் ; அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி ?

தீயன சேரின் நல்லன கெடும்

3. மொய்சிதைக்கும் ஒற்றுமை யின்மை ; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியை ; பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையை; குலஞ்சிதைக்கும்
கூடார்கட் கூடி விடின்.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

4. நாற்ற முரைக்கும் மலருண்மை ; கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலம் ; தூக்கின்
அகம்பொதிந்த தின்மை மனமுரைக்கும் ; முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில்.

சிறந்த பொருள்கள்

5. கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை ; கல்வியின்
நுண்ணிய வாய பொருளில்லை ; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை ; ஈன்றாளோ(டு)
என்னக் கடவுளும் இல். —விளம்பி நாகனூர்

---

5. சாணக்கிய நீதி

சுற்றத்தவன்

1. வேந்தர் கடைத்தலையில், வெம்போரில், நல்குரவில்,
ஏய்ந்த துயரில், இடுகாட்டில்—வாய்ந்துவகை
பற்றும் விழாவில் பரிவுகொண்டு நிற்பவனே
சுற்றத் தவனென்று சொல்.

ஒன்றின் பொருட்டு ஒன்றை நீங்குதல்

2. உற்றகுலம் காத்தற் கொருபொருளைக் கைவிடலாம் ;
குற்றமில்லூர் பேணக் குலம்விடலாம்-மற்றொருநா(டு)
உய்யும் படிகாக்க ஊர்விடலாம் ; தன்உயிர்க்கு
வையகமும் கைவிடலாம் மற்று.

நாணம் ஒழித்தற்குரிய இடம்

3. உண்ணும் தொழிற்கண்ணும், ஓதும் தொழிற்கண்ணும்,
எண்ணுதன தானியங்கள் ஈதலினும்—நண்ணுமுறை
பூணும் தொழிற்கண்ணும் புத்திமான் எப்பொழுதும்
நாணம் இலாதிருக்கை நன்று.

எண்ணிய காரியத்தை இயம்பலாகாது

4. செவ்வனுற நெஞ்சகத்தில் சிந்தித்த காரியத்தை
எவ்வெவர்க்கும் வாயால் இயம்பற்க—இவ்வுலகில்
பல்லோர் அறியிற் பழுதாம் ; பயன்படலும்
இல்லையெனச் சொன்னார் எடுத்து.

முழுமனதுடன் முயற்சி செய்யவேண்டும்

5. செய்யும் தொழிலெவையும் திண்ணம் பெறமுயற்சி
செய்து நலமடையும் சிங்கம்போல்—வையகத்தில்
செய்யும் தொழிலைச் சிறிதுபெரி தென்னுது
செய்க முழுமுயற்சி சேர்ந்து.

—சுன்னுகம் குமாரசாமிப் புலவர்

---

6. பழமொழி

கற்ருேர் அருமை கற்ருேரே அறிவர்

1. புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனும்—நலமிக்க
பூம்புனல் ஊர, பொதுமக்கட் காகாதே;
பாம்பறியும் பாம்பின கால்.

புல்லுரைக்கு எதிர் சொல்லாமை

2. ஆய்ந்த அறிவினர் அல்லாதார் புல்லுரைக்குக்
காய்ந்தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார்?—தீந்
முசுக்குத்தி நக்கும் மலைநாட; தம்மைப் [தேன்
பசுக்குத்தின் குத்துவா ரில்.

சான்ருேர் பொறையின் அளவு

3. முன்னும் ஒருகால் பிழைப்பானை ஆற்றவும்
பின்னும் பிழைப்பப் பொறுப்பவோ?—இன்னிசை
யாழின்வண் டார்க்கும் புனலூர; ஈனுமோ
வாழை இருகால் குலை?

சிறியார் பெரியார் குற்றங்கள்

4. கன்றி முதிர்ந்த கழியப்பன் ஞள்செயினும்
ஒன்றும் சிறியார்கண் என்ருனும்—தோன்ருதாம்.
ஒன்ருய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு.

நம்பினவரைக் கைவிடலாகாது

5. எய்ப்புழி வைப்பாம் எனப்போற்றப் பட்டவர்
உற்றுழி ஒன்றுக் குதவலார்—பைத்தொடீ !
அச்சிடை யிட்டுத் திரியின் அதுவன்றே
மச்சேற்றி ஏணி களைவு. —மூன்றுறையரையர்

---

7. நாலடியார்

அறன் வலியுறுத்தல்

1. உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழல்பயந் தாஅங்(கு)—அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

பொறையுடைமை

2. அறிவ தறிந்தடங்கி, அஞ்சுவ தஞ்சி,
உறுவ துலகுவப்பச் செய்து—பெறுவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

நட்பிற் பிழை பொறுத்தல்

3. வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா வொழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்
ஆற்றும் துணையும் பொறுக்க ; பொறானாயின்
தூற்றாதே தூர விடல்.

மனம், மெய், மொழிகளின் தூய்மை

4. தான்கெடினும் தக்கார்கே டெண்ணற்க ; தன்னுடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க;வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

பொருளின் சிறப்பு

5. வடுவிலா வையத்து மன்னிய மூன்றின்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்;
நடுவண தெய்தாதான் எய்தும் உலைப்பெய்(து)
அடுவது போலும் துயர்.

கற்ருர் நட்பும் கல்லார் நட்பும்

6. கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியில் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரில்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரம் இலாளர் தொடர்பு.

நற்குடிப்பிறந்தார் தன்மை

7. ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம்—திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்(கு)
ஒல்கார் குடிப்பிறந் தார்.

சான்ருேர் பெருமை

8. அங்கண் விசும்பின் அகல்நிலாப் பாரிக்கும்
திங்களும் சான்ருேரும் ஒப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும்; சான்ருேர்அஃ தாற்ருர் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

நல்லாரைச் சார்தலின் நன்மை

9. ஊரங் கணநீர் உரவுநீர் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்—ஓரும்
குலமாட்சி யில்லாரும் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

தந்தையைத் தாங்குதல் தனயன் கடமை

10. சிதலை தினப்பட்ட ஆல மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைகண் தோன்றிற்றான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும். —சமண முனிவர்கள்

III. தொடர்நிலைச் செய்யுள்

1. பாரத வெண்பா

[கண்ணன் தூது செல்லுதல்]

கண்ணன் பாண்டவரை வினவுதல்

1. போர்வீரர் தம்மோடும் போந்தரசு கொள்வீரோ?
பார்வீர ரென்னும் பரிசயத்தால்—ஓர்வீர்நீர்
உய்வீராய் முன்னடைந்த வெங்கானம் போவீரோ?
ஐவீருஞ் சொல்லீர் அமர்ந்து.

'விதுரனை வெல்லுவது எங்ஙனம்' என்று தருமன் கேட்டல்

2. வெற்றி விதுரன்கை வில்லிருக்க மேதினியில்
மற்றவனை வெற்றிகொள்ளு மாறுண்டோ?-கொற்றத்
தனிமுரசங் காத்தருளும் தாமரையாள் கோனே!
இனியவரை வெல்வாரை யெண்ணு.

'விதுரனை நகுலன் வெல்லுவான்' என்று கண்ணன் கூறுதல்

3. நகுலன் பரியேறின் நாலொன்று மூன்று
புவனங்க ளேழும் புடைபோய்—இகலும்
அவனுடைய வில்லும் அதிரதரு மெல்லாம்
இவனுடைய முன்னில்லா ஈங்கு.

அசுவத்தாமனை வெல்லுவது அரிது என்று' தருமன் சோல்லல்

4. ஆசா ரியன்புதல்வன் அச்சுவத்தார் கோமாற்குச்
சேனு பதிப்பட்டம் சேர்த்தினல்—மீதவனை
வெல்லப்போர் செய்கைக்கு வெண்டலையில் ஊனுகந்த
செல்வர்க்குந் தானரிதே செப்பு.

‘ அசுவத்தாமனைச் சகதேவன் வெல்லுவான் ’
என்று கண்ணன் கூறுதல்

5. சாதா ரணஞ்செய்யுஞ் சாதேவக் கோமானைச்
சேனு பதிப்பட்டஞ் சேர்த்தினல்—மீதோடி
அச்சுவத்தார் கோமான் அடர்த்துவரும் வெம்போரைச்
சித்திரத்தே ரோட்டிச் செயித்து.

‘ கன்னனை இந்திரனையன்றி யார் வெல்லுவார் ’
என்று தருமன் வினுதல்’

6. உய்ய வுடன்பிறந்த வொண்கவசக் கன்னனுடன்
செய்யுஞ் செருவிற் சிதைக்கவல்லான்—ஐயனே !
இந்திரனே யன்றி இணையாரு மில்லையே
வந்துபோர் செய்வார்கள் மற்று.

‘கன்னனை அபிமன் வெல்வான் என்று’ கண்ணன் கூறுதல்

7. கொற்ற அரவுயர்த்த கோமான் தனித்துணைவன்
பெற்ற கவசம் பிளப்பதற்கு—வெற்றிகொளும்
இந்திரனே யன்றி இளையான் அபிமன்கை
மந்திரவில் லேயதற்கு மாறு.

தருமன் ‘ வீடுமனை வெல்வார் யார் ’ என்றல்

8. மூதாதை கையில் முனிந்துவரும் சக்கரத்தை
வேதா திபனே ! விலக்குதற்கு—யார்தானும்
மற்றுமொரு வீரர் உளரோ ? இம் மண்ணுலகில்
வெற்றிகொள்வார் தம்மை விளம்பு.

கண்ணன் ‘ வீடுமனை வெல்வது என் கடமையன்றே ’ என்றல்

9. வந்தவா காண்குமது மன்னவனே ! மற்றுநீ
சிந்தைமீ தூர்ந்து சிதையாதே—உந்தை
பொரும்போது போர்க்களத்திற் போர்விசயன் தேரில்
இருந்தேமுக் கன்றே இயல்பு.

கண்ணனை நோக்கித்தருமன் 'உற்றுரைக் கோல்வது
தகுதியோ ?' எனல்

10. தந்தையா வானும் தருமம் வளர்ப்பானும்
எந்தையா வானும்நீ எங்களுக்கு-முந்திலங்கை
ஊ ரறுக்க வந்தாய் உரைத்தவர்கள் தம்முயிரை
வேரறுக்க லாமோ ? விளம்பு.

தருமன் கண்ணனை 'நீ தூது செல்லவேண்டும்' என்றல்

11. நின்னைச் செலவிட்டால் நீர்நாடு தாரானேல்
பின்னைப் பொருகை பிழையன்றே-உன்னைக்காண்
மாதவனே! மாயவனே! மாலவனே! மற்றெமக்கோர்
தூதுவனே யாக்கத் துணி.

வீமன் 'துரௌபதி கூந்தல்முடிக்க வேண்டாவோ ?' என்றல்

12. மன்னவையுட் பட்ட மறந்தனையோ ? மாதேவி
மின்னவிரும் நுண்ணிடையாள் மென்கூந்தல்-பின்னி
இருக்கவோ மண்ணாள எண்ணியோ சொல்லாய்
குருக்களே றன்னார் குணம்.

வீமன் 'பகைவர்களைப் போரில் தொலைத்துப்
பழிவாங்கவேண்டும்' என்றல்

13. ஈன்றார்க்கோர் மா துன்பம் இன்னார்க்கோர் இன்னாச்சொல்
சான்றோர்கட் கெல்லாம் தலையிறக்கம்-தோன்றும்
கொடுவிலாள் வாட்டானைக் கொற்றவனே பார்மேல்
வடுவிலாள் பட்ட வடு.

வீமன் 'மன்னவர்கள், மன்னவரை மண் இரக்கும் வழக்கம்
இல்லை' எனல்

14. ஆற்றுவரேல் தோள்வலியால் கொள்வதுவும் ஆற்றாரேல்
தோற்பதுவும் வேந்தர்க்குச் சொல்லியதே-மேற்றானோர்
மன்னவரை மன்னவர்கள் மண்ணிரந்த தில்லைகாண்
என்னவர சாள்கை யிது.

தருமன் சமாதானம் சொல்லுதல்

15. உற்றாரை யெல்லாம் உடன்கொண் டரசாளப்
பெற்றால் அதின்மிக்க பேறுண்டோ ?—வெற்பார்
பனிமருவும் பூந்தொங்கல் பாழியந்தோள் வீமா !
தனிமரமும் தோப்பாமோ தான்.

வீமன் தருமரை வெறுத்தல்

16. சூழ்சபையிற் சூளுற்ற சூளுறவும் அஞ்ஞான்றென்
பாழியந்தோள் பட்ட பரிபவமும்—ஆழியாய் !
நின்னோடே தோற்றுதற்கு நோற்றேனே பாவியேன்
என்னோ டெழுத்தோ இது ?

தருமன் மீண்டும் வீமனுக்குச் சமாதானம் கூறுதல்

17. தாமானங் கூறப் பெறுவரே தம்பிமார்
தீமானஞ் செய்ததனால் தீங்குண்டோ ?—ஆமாகில்
ஆமளவு நட்புகத்தல் அன்றாகில் நின்றதே
தேமருவு தாரோய் ! செரு.

தருமன் கண்ணனுக்குத் தூதுபேசும் விதம் கூறுதல்

18. கார்தோற்றுப் போகக் கொடுக்கும் கரத்தானே !
பார்வேண்டில் பாம்புயர்த்தோன் தான்மறுத்தால்
—ஊர்வேண்டல்
ஆங்கவையும் தான்மறுத்தால் ஐந்துமனை தாம்வேண்டிப்
பாங்குடனே போதாய் பரிந்து.

தருமன் 'ஐந்து வீடுதர மறுத்தானேல் அடுபோர் வேண்டு' என்றல்

19. மன்னவர்க ளெல்லாரும் தாமறியப் பார்வேண்டில்
அன்னவனும் ஐந்தில் மறுத்தானேல்—பின்னைப்
பொருபடைக்கை மாலேநீ போர்வேண்டிப் போதாய்
அரவுயர்த்தோன் தன்பால் அகன்று.

அருச்சுனன் ‘ நாம் நாடு இரப்பின் அரசர் நகைசெய்வார் ’ என்றல்

20. பரமன் திருவருளால் பாசுபதத் தோடு
விரவுதனுக் கொண்டியான் இருக்கக்—குருபதிக்கு
நாமிரந்து சென்றால் நகையரசர் செய்யாரோ ?
தாமிருந்து வாழுந் தலத்து.

‘ கண்ணன் துணையால் போரில் பகைவர்களை நானே கோல்வேன் ’ என்றல்

21. ஆரமருள் தேராழி ஆர்த்து வடிக்கயிறு
போர்மருவு மாமேல்மால் பூட்டுவனேல்—கூரம்பால்
கூடலார் மன்னவரைக் கூற்றின் பகுவாயின்
பாடியிலே யுய்க்கும் படி.

‘ நம்மை அரக்கு மாளிகையில் அழிக்க எண்ணிய அரசர்களை அமரில் அழிப்பேன் ’ என்றல்

22. ஊழிமுதற் காலத் துருத்தெழுந்த தீப்போல
வாழும்வினை கொண்டாடி மற்றெமைத்—தீயில்
அழுத்துவிக்கு மன்னவரை ஆடமருள் வீழ்த்து
முழுக்குவிப்பன் செங்குருதி முன்.

நகுலன் ‘ துரௌபதியின் குழல் முடிப்பதற்கு வேண்டியன செய்ய வேண்டும்’ என்றல்

23. இந்திரன்சேய் போக இனிய இரட்டையரில்
புந்தி நகுலன் புகன்றெழுந்து—வந்தித்தே
அந்நாள் முதலா அரிவைகுழல் கூடாமை
மன்னா ! மறந்தனையோ ? மற்று.

நகுலன் ‘போர்செய்ய வேண்டுமேயன்றி நாடாள எண்ணலாகாது’ என்றல்.

24. வேண்டி விடுப்ப வெறுத்த வெகுளியர்பால்
பூண்ட செருவேண்டிப் போகாமல்—மீண்டுமினி
நாடாள வெண்ணுவதோ நல்வேந்தே! என்றுரைத்
தாதாடு மார்பன் தளர்ந்து. [தான்

சகதேவன், கண்ணனை 'நீ தூது செல்லும் காரணம் எனக்குத் தெரியும்' எனல்

25. மாயா! மணிவண்ணா! மண்ணுலகும் விண்ணுலகும்
தாயாகி நின்றவொரு தற்பரமே!—நீயேகும்
காரணங்க ளெல்லாம் அறிந்தேனே கஞ்சமலர்
வாரணங்காத் துய்த்தாய் மகிழ்ந்து.

கண்ணன் சகதேவனை நோக்கி 'நீ இவ்வாறு சொன்னது ஏன்?' என்றல்

26. தூதாகப் போவேனைச் சொன்ன தகவின்மை
வேதா திபனே! விளம்பிக்காண்—ஏதோதான்
மன்னற்கு நேரிலைய மன்னவனே! யென்னினைவை
இன்னதே யென்றுரையாய் ஈங்கு.

சகதேவன் கண்ணனை நோக்கி 'நீ செல்லுங்காரணம் இன்னது' எனல்

27. அந்தமற மன்னவர்க ளோடே அடியோமைச்
சிந்தப் புடைத்துத் திசையெங்கும்—வந்து
படைபொருத மன்னரையும் பாரதத்தாற் கொல்ல
அடைவுடனே தானினைந்தாய் ஆங்கு.

கண்ணன் சகதேவனை 'என்மாயை அறியின் இது செய்' எனல்

28. ஆயிரக்கால் தானுடைய மண்டபத்தில் யாம்புகுந்(து)
ஆயிரக்கால் தன்னில் அமருவோம்—நீயெந்தம்
சத்திதான் நிற்கும் தனித்தூண் அறிந்தாயேல்
சத்தியவா னாக தலத்து.

கண்ணன் மண்டபத்திற் சென்று மறைதல்

29. சாதேவ னோடும் தருக்கித் துடனெழுந்து
மாதேவன் மண்டபத்தி லேபுகுந்து—சாதேவன்
தானறியா வண்ணம் தனித்தனித்தூண் ஆயிரத்தில்
போயறியத் தானொளித்தான் புக்கு.

சகதேவன் ஆதிதேவனை வெளிப்படுமாறு துதித்தல்

30. அன்றரங் கிரணியனைக் கொல்லவே அத்தூணில்
நின்றுபுறப் பட்ட நெடியோனே!—இன்றென்முன்
போதாய்நீ யென்று புகழ்ந்தேத்தி நின்றானே
சாதேவன் ஆருந் தலத்து.

சகதேவன் துதித்தலும், கண்ணன் 'வரம் வேண்டுக' என்றலும்

31. காற்றும் கனலும் இடியும் கதிரோனும்
தோற்றுஞ் சுடரும் சுருதியுமாய்—நாற்றிசையோ(டு)
எல்லா வுயிருமாய் நின்றாயே நின்குறிப்பைச்
சொல்லாயென் றானே தொழுது.

சகதேவன் கண்ணனை வரங்கேட்டல்

32. அரவுயர்த்தோன் தன்னால் அருங்கான மெய்தி
முரசுயர்த்தோன் பட்டதுயர் தீர—அரவணைமேல்
கண்வளர்ந்தாய்! நாங்கள்மிகக் காசினியை யாள்வதற்கு
மண்ணளந்தாய்! நல்காய் வரம்.

கண்ணன் சகதேவனுக்கு வரமளித்தல்

33. பாராளும் மன்னவன்றன் பால்யாம்போய்ச் சந்துரைத்தும்
நேராக நாடு விடானாகில்—சீராரும்
கொற்றக் குடையும் குருநாடும் கூடஅருள்
வெற்றியுடன் நாந்தருவோம் மிக்கு.

துரௌபதி கண்ணனுக்குத் தன் தலைவிரிகோலத்தைக் காட்டுதல்

34. பங்கயக்கண் மாயன் அடிபணிந்து பாஞ்சாலி
செங்கயற்கண் முத்தந் திகழ்ந்தலைப்பச்—சங்க
வளைநிரைக்கை யாலெடுத்து வாசக் குழலைத்
துளைநிரைக்கைக் காட்டினாள் சோர்ந்து.

துரௌபதி 'நீதூது கூடாது' என்று சொல்லக் கூறல்

35. நீயேயோ தூதுக் கெழுந்தருள்வாய் ஆங்கவற்கு
நீயேயோ சந்தாய் நெறிநிற்பாய்—நீயாகில்
முற்றுவிப்பான் தானேதான் அஞ்சிடுவான் தந்தையோ
விற்றடக்கை மாலே! விளம்பு.

கண்ணன் துரௌபதிக்கு உறுதி கூறல்

36. உன்கருத்தே முற்றுவிப்பேன் ஒண்ணுதலாய்! ஒண்டிறலான்
தன்கருத்தை யான்சென்று சந்தித்தால்—பின்சடையாம்
இக்குழலை நீமுடிக்க ஏந்தெழிலார் தேவிமார்
அக்குழல்கள் தாம்விரிப்பார் ஆங்கு

தருமன் கண்ணனைத் தூது செல்லுமாறு மீண்டும் தூண்டுதல்

37. பெண்டுகளும் பிள்ளைகளும் பித்தர்களும் என்னறிவார்
அண்டர்தொழ நின்றருளும் அச்சுதனே!—மண்ட
எழுந்தவிள நாகக் கொடியோன்பால் ஈண்டன்
எழுந்தருளா யென்றான் எடுத்து.

துரௌபதி தன் கூந்தலை மீண்டும் நினைவூட்டுதல்

38. வெற்றிப் புகழ்த்தருமன் வீமன் அருச்சுனற்கா
அத்திப் பதிக்கே அருள்செய்வோய்!—மெத்த
அழல்புனையும் வாய்மை அரசனைக்கண் டாலென்
குழல்நினைவாய் என்றாள் குறித்து.

கண்ணன் தூதுக்குடன்பட்டு அத்தினபுரிக்குப் புறப்படல்

39. தூதுக் குடன்பட்டுச் சுற்றக் குழாத்தோடும்
ஏதுக்கள் பேசியே யேகினான்—சேதித்து
மாணக மேந்தினான் மாநகர்க்கு வந்தானே
கோணை கனைகிடந்த கோ. —பெருந்தேவனார்

2. கம்பராமாயணம்

[அனுமான் சீதையிடம் கணையாழியைக் கொடுத்துச் சூளாமணியைப் பெறுதல்]

அனுமன் சீதையைக் கண்டு சிந்தித்தல்

1. உண்டுதுணை யென்னஎளி தோஉலகி லம்மா
புண்டரிகை போலுமிவள் இன்னல்புரி கின்றாள்
அண்டமுதல் நாயகன தாவியனை யாளைக்
கொண்டகல்வ தேகருமம் என்றுணர்வு கொண்டான்.

'உன்னை இராமனிடம் சேர்ப்பேன்' என்று சீதையிடம் அனுமன் கூறுதல்

2. கேட்டியடி யேனுரை; முனிந்தருளல்; கேளார்
வீட்டியிடு மேலவனை வேறல்வினை யன்றால்;
ஈட்டியினி யென்பல; இராமனெதிர் நின்னைக்
காட்டியடி தாழ்வென்; இது காண்டி; இது காலம்.

'நான் வெறுங்கையோடு இராமடனிம் செல்லேன்' என அனுமன் கூறுதல்

3. அறிந்திடை யரக்கர்தொடர் வார்களுள ராமேல்
முறிந்துதிர நூறியெதிர் என்சினமு டிப்பென்
நெறிந்தகுழல்! நின்னிலைமை கண்டுநெடி யோன்பால்
வெறுங்கைபெய ரேன்ஒருவ ராலும்விளி யாதேன்.

'இலங்கையோடு பெயர்த்தெடுத்துச் செல்' என்றாலும் அங்ஙனமே செய்வேன் என்றல்

4. இலங்கையொடும் ஏகுதிகொல் என்னினும் இடந்தென்
வலங்கொள்ஒரு கைத்தலையில் வைத்தெதிர் தடுப்பான்
விலங்கினரை நூறிவரி வெஞ்சிலையி னோர்தம்
பொலங்கொள்கழல் தாழ்குவெனி தன்னைபொரு ளன்றால்.

'உன்னைமீட்காத என் அடிமை பயனில்லை' என்றல்

5. அருந்ததியு ரைத்தியழ கற்கருகு சென்றுன்
மருந்தனைய தேவிகெடு வஞ்சர்சிறை வைப்பில்
பெருந்துயரி னேடும்ஒரு வீடுபெற வில்லா(து)
இருந்தனள்எ னப்பகரின் என்னடிமை என்னும்?

'இராமபிரான் நின்னேடு வந்து அரக்கரை
அழிப்பான்' என்றல்

6. இந்துநுதல் நின்னெடிவண் எய்தியிகல் வீரன்
சிந்தையுறு வெந்துயர்த விர்ந்துதெளி வோடும்
அந்தமில்அ ரக்கர்குலம் அற்றவிய நூறி
நந்தலில்பு விக்கணிடர் பிற்களைதல் நன்றால்.

'விரைவில் என்தோள்மீது ஏறுக' என்றல்

7. வேறினிவி ளம்பஉள தன்றுவிதி யாலிப்
பேறுபெற என்கணருள் தந்தருளு பின்போய்
ஆறுதுயர் அஞ்சொலிள வஞ்சியடி யன்தோள்
ஏறுகடி தென்றுதொழு தின்னடிப ணிந்தான்.

சீதை அனுமனுக்கு விடை கூறத் தொடங்குதல்

8. அரிய தன்றுநின் ஆற்றலுக் கேற்றதே
தெரிய எண்ணினை; செய்வதும் செய்தியே;
உரிய தன்றென ஓர்கின்ற துண்டதென்
பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால்.

'என்னை அழைத்துச் செல்லுங்கால் இடையில் ஏதம்
விளையும்' என்றல்

9. வேலை யின்னிடை யேவந்து வெய்யவர்
கோலி வெஞ்சரம் நின்னெடுங் கோத்தபோ(து)
ஆல மன்னவர்க் கல்லையெற் கல்லையால்
சால வுந்தடு மாறுந்த னிமை யோய்!

'அரக்கரைப்போல நீ நினைத்தல் தகாது' என்றல்

10. அன்றி யும்பிறி தொன்றுள தாரியன்
வென்றி வெஞ்சிலை மாசுணும் வேறினி
நன்றி யென்பதம் வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ ?

'இலங்கை எலும்பு மலை ஆகாவிடின்
என் கற்பு விளங்காது' என்றல்

11. பொற்பி றங்கல் இலங்கை பொருந்தலா
எற்பு மால்வரை யாகில தேயெனின்
இற்பி றப்புமொ ழுக்குமி ழுக்கமில்
கற்பும் யான்பிறர்க் கெங்ஙனம் காட்டுகேன் ?

'இராமபிரானது வில்லாண்மை மாசடையும் என்று
இலங்கையை அழிக்காதிருந்தேன்' என்றல்

12. அல்லல் மாக்கள் இலங்கைய தாகுமோ ?
எல்லை நீத்த உலகங்கள் யாவுமென்
சொல்லி னாற்சுடு வேனது தூயவன்
வில்லி னாற்றற்கு மாசென்று வீசினேன்.

'நீ மீண்டு போதலே தகுதி' எனல்

13. ஆத லானது காரிய மன்றைய !
வேத நாயகன் பாலினி மீண்டனை
போதல் காரிய மென்றனள் பூவையக்
கோதி லானும் இனையன கூறினான்.

சீதையின் தன்மை கண்டு அனுமன் வியத்தல்

14. நன்று நன்றிவ் வுலகுடை நாயகன்
தன்று ணைப்பெருந் தேவி தவத்தொழில்
என்று சிந்தை களித்துவந் தேத்தினான்
நின்ற சங்கை இடரொடு நீங்கினான்.

'இராமனுக்குக் கூறும் செய்தியை அருளுவாய்' என்றல்

15. இருளு ஞாலமி ராவண னலிது
தெருளு வாயினிச் சில்பகல் தங்குறின்
மருளு மன்னவற் கியான்சொலும் வாசகம்
அருளு வாயென் றடியி னிறைஞ்சினன்.

'இங்கு ஒரு மாதம் இருப்பேன்; பிறகு உயிர் விடுவேன்'
என்று சீதை கூறல்

16. இன்னும் ஈண்டொரு திங்கள் இருப்பல்யான்
நின்னை நோக்கிப் பகர்ந்தது நீதியோய்!
பின்னை யாவி பிடிக்கின்றி லேனந்த
மன்னன் ஆணை யிதனை மனக்கொள்நீ.

'தன் வீரத்தை எண்ணி என்னை
விடுவிக்கச் சொல்லுவாய்' என்றல்

17. ஆரந் தாழ்திரு மார்பற் கமைந்ததோர்
தாரந் தானல ளேனுந் தயாவெனும்
ஈரந் தானகத் தில்லையென் றாலுந்தன்
வீரங் காத்தலை வேண்டென்று வேண்டுவாய்.

'என்னை மீட்பது இலக்குவர்குக் கடன் என்று கூறு' என்றல்

18. ஏத்தும் வென்றி யிளையவற் கீதொரு
வார்த்தை கூறுதி மன்னரு ளாலெனைக்
காத்தி ருந்தவற் கேகட னென்றிடை
கோத்த வெஞ்சிறை வீடென்று கூறுவாய்.

'என்னை மீட்காவிடில் இறுதிக்கடன் செய்யுமாறு சோல்' என்றல்

19. திங்க ளொன்றினென் செய்தவந் தீர்ந்ததால்
இங்கு வந்தில னேயெனின் யாணர்நீர்க்
கங்கை யாற்றங் கரையடி யேற்குத்தன்
செய்கை யாற்கடன் செய்கென்று செப்புவாய்.

‘நீயாயினும் மாமியர்க்கு என் வணக்கத்தைக் கூறுவாய்’ என்றல்

20. சிறக்கு மாமியர் மூவர்க்கும் சீதையாண்(டு)
இறக்கின் றாள்தொழு தாளெனு மின்னசொல்
அறத்தின் நாயகன் பாலரு ளின்மையால்
மறக்கு மாயினும் நீமற வேலையா!

‘பிற மாதரை எண்ணேன் என்ற வரத்தை
நினைவூட்டுவோய்’ என்றல்

21. வந்தெ னைக்கரம் பற்றிய வைகல்வாய்
இந்த விப்பிற விக்கிரு மாதரைச்
சிந்தை யாலுந் தொடேனென்ற செவ்வரம்
தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்.

‘மறுபிறப்பிலேனும் மணக்கும் வரம் வேண்டினாள்
என்று கூறுவாய்’ என்றல்

22. ஈண்டு நானிருந் தின்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்துதன் மேனியைத்
தீண்ட லாவதொர் தீவினை தீர்வரம்
வேண்டி னாள்தொழு தென்று விளம்புவாய்.

‘அயோத்திக் கேகுவதன்றி என்னை நோக்கி வருவானோ?’
என்று வருந்தல்

23. தன்னை நோக்கி யுலகந்த ளர்தற்கும்
அன்னை நோய்க்கும் பரதனங் காற்றுறும்
இன்னல் நோய்க்குமங் கேகுவ தன்றியே
என்னை நோக்கியிங் கெங்ஙன மெய்துமோ?

வேறு

அனுமன் இராமன் தன்மையைக் கூறுதல்

24. முன்னே கொல்பவன் மூவுலகும்
பொன்னே யோங்கிய போர்வில்லான்
என்னே நின்னிலை யீதென்றால்
பின்னே செம்மை பிடிப்பானே?

'அரக்கரது அழிவை நீ விரைவிற் காண்பாய்' என்றல்

25. புளிக்குங் கண்டகர் புண்ணீருள்
குளிக்கும் பேய்குடை யுந்தோறும்
ஒளிக்குந் தேவரு வந்துள்ளம்
களிக்கும் நல்வினை காணுயோ?

வேறு

'அரம்பையர் ஆடிய அரங்கில் குரங்குகள்
ஆடக் காண்பாய்' என்றல்

26. கரம்பயில் முரசினங் கறங்கக் கைதொடர்
நரம்பினு மிமிழிசை நவில நாடகம்
அரம்பைய ராடிய வரங்கின் ஆண்டொழிற்
குரங்குகள் முறைமுறை குனிப்பக் காண்டியால்.

'இலங்கை விரைவில் அழியும்' என்றல்

27. வினையுடை யரக்கராம் இருந்தை வெந்துகச்
சனகியென் றெருதழல் நடுவண் தங்கலால்
அனகன்கை யம்பெனும் அளவில் ஊதையால்
கனகநீ டிலங்கைநின் றுருகக் காண்டியால்.

'ஒரு திங்களிலன்று; உடனேவந்து மீட்பான்' என்றல்

28. ஈண்டொரு திங்களிவ் விடரின் வைகுதல்
வேண்டுவ தன்றுநான் விரைவின் வீரனைக்
காண்டலே குறைவுபின் காலம் வேண்டுமோ?
ஆண்டகை யினியொரு பொழுது மாற்றுமோ?

'உன் பிரிவால் உள்ளம் நோந்துளான்' என்றல்

29. மத்துறு தயிரென வந்து சென்றிடை
தத்துறு முயிரொடு புலன்கள் தள்ளுறும்
பித்துநின் பிரிவினிற் பிறந்த வேதனை
எத்தனை யுளவவை யெண்ணு மீட்டவோ?

'உன் நிலை அறியின் இராமன் மனம் பொறான்' என்றல்

30. இந்நிலை யுடையவன் தரிக்கு மென்றியேல்
மெய்ந்நிலை யுணர்ந்துழி மிடைந்த தீதெனின்
பொய்ந்நிலை காண்டியான் புகன்ற யாவுமுன்
கைந்நிலை நெல்லியங் கனியிற் காட்டுகேன்.

'இராமன் நாளையே இந்நகர் நண்ணுவன்' என்றல்

31. எண்ணரும் பெரும்படை நாளை யிந்நகர்
நண்ணிய பொழுதது நடுவண் நங்கை!நீ
விண்ணுறக் கருளன்மேல் விளங்கும் விண்டுவில்
கண்ணனை யென்னெடு வெரிநிற் காண்டியால்.

'இலக்குவனும் இங்கு வருவான்' என்றல்

32. அங்கதன் றோள்மிசை யிளவ லம்மலை
பொங்குவெங் கதிரெனப் பொலியப் போர்ப்படை
இங்குவந் திறுக்குநீ யிடரு மையமும்
சங்கையு நீங்குதி தனிமை நீங்குவாய்.

'இராமன் உன்னைச் சிறை மீட்பான்' என்று உறுதி கூறல்

33. குராவருங் குழலியிக் குறித்த நாளினே
விராவரு நெடுஞ்சிறை மீட்கி லானெனிற்
பராவரும் பழியொடும் பாவம் பற்றுதற்(கு)
இராவண னவனிவன் இராம னென்றனன்.

வேறு

சீதை மகிழ்ந்து சில சொல்லத் தொடங்குதல்

34. ஆக விம்மொழி யாசில கேட்டறி வுற்றாள்
ஓகை கொண்டுக ளிக்கும னத்தளு யர்ந்தாள்
போகை நன்றிவ னென்பது புந்தியின் வைத்தாள்
தோகை யுஞ்சில வாசக மின்னன சொன்னாள்.

கிளிக்குக் கைகேயின் பெயரிடுமாறு கூறியதைத் தெரிவித்தல்

35. என்னொ ரின்னுயிர் மென்கிளிக் கியார்பெய ரீகேன்
மன்ன வென்றலு மாசறு கைகயன் மாதென்
அன்னை தன்பெய ராகென வன்பினொ டந்நாள்
சொன்ன மெய்ம்மொழி சொல்லுதி மெய்ம்மைதொ டர்ந்
[தோய்!

சீதை தன் சூளாமணியைக் கொடுக்கக் கழற்றுதல்

36. வாங்கி னாள்தன்ம லர்க்கையி னன்னது முன்னா
ஏங்கி னானவ்வ னுமனு மென்கொலி தென்னா
வீங்கி னான்வியந் தானுல கேழும்வி ழுங்கித்
தூங்கு காரிருள் முற்றுமி ரிந்தது சுற்றும்.

அனுமன் சூளாமணியைக் காணல்.

37. கூந்தல் மென்மழை கொண்முகில் மேலெழு கோளின்
வேந்த தன்னது மெல்லியல் தன்னெழில் மேனி
சேந்த தந்தமில் சேவகன் சேவடி யென்னக்
காந்து கின்றது காட்டினள் மாருதி கண்டான்.

சீதை அனுமனிடம் சூளாமணியைக் கொடுத்தல்.

38. சூடை யின்மணி கண்மணி யொப்பது தொன்னாள்
ஆடை யின்கணி ருந்தது பேரடை யாளம்
நாடி வந்தென தின்னுயிர் நல்கிய நம்பா!
கோடி யென்றுகொ டுத்தனள் மெய்ப்புகழ் கொண்டாள்.

அனுமன் சீதையை வணங்கி மீளுதல்.

39. தொழுது வாங்கினன் சுற்றிய தூசினன் முற்றப்
பழுது றுவகை பந்தனை செய்தனன் வந்தித்(து)
அழுது மும்மைவ லங்கொடி றைஞ்சின னன்போ(டு)
எழுது பாவையு மேத்தின ளேகின னிப்பால்.

---

3. திருவிளையாடற் புராணம்

கிழியறுத்த திருவிளையாடல்

வழுதி உலாவுதல்

1. உன்னரும் முன்னோர் காலம்
 ஓங்கலங் காரத் தோங்கி
மன்னுமா மதுரை தன்னுள்
 வாழுமோர் வழுதி, வான்றோய்
மின்னுமா மதிற்றன் கோயில்
 மீமிசை விடுத லத்துத்
தந்நிக ரில்லா மாதர்
 தம்மொடு முலாவுங் காலை.

வழுதிக்குண்டான ஐயம்

2. பேசரும் தகவு டைத்தாப்
 பேருளம் கவர்வ தாய
நேசமா தேவி வாய்ந்த
 கூந்தலை நீங்கா தோங்கும்
வாசமா ருதவ சத்தால்
 வரமனம் அதிச யத்'திவ்
ஆசிலா வாசம் பூவோ(டு)
 இயைந்ததே அன்றோ ?' என்றான்.

கிழி தூக்கினது

3. கூரிய உளத்துள் தேர்ந்து
 குறிப்பரும் பொருள்பொ திந்து
நேர்சிறப் புடைத்தாய் நந்தம்
 நெஞ்சினுக் கியைய இன்றோர்

சீருடைக் கவிதை செய்து
வருவரேல் செழும்பு விக்குள்
யாரென வேண்டா இப்பொன்
ஈகுவல் அவர்கட் கென்று

4. ஆயிரம் பசும்பொன் கூட்டி
அடங்கவோர் கிழியாய்க் கட்டி
மாயிரு ஞாலங் காண
மாசிலா சிரியர் வாழும்
சீயவெண் தரளச் செம்பொன்
சித்திரத் தூணப் பத்தித்
தூயமண் டபத்து முன்னர்த்
தூக்கினன் சிறக்க ஆங்கு.

புலவர் கிழிபெற முயலுதல்

5. பீடுடை உணர்வால் மிக்கோர்
பிஞ்ஞகன் சமாதி யாலே
நாடிய பொருள்தே ராமல்
நல்லன தமக்கி யைந்த
பாடிய கவிதை கொண்டு
பார்த்திவன் திருமுன் ஏறிக்
கூடிய மகிழ்ச்சி யோடும்
கூறினர் தேறி யாங்கு.

6. காவலன் தனக்கி யைந்த
கவியதில் காணு ணகி
ஆவிநன் குருதி ருப்ப
அருங்கிழி கருதி வந்த
நாவலர் சோகம் எய்திப்
போயினர் ; நானி லத்துள்
யாவரும் காண முன்போல்
தூங்கிய தியைந்த பொன்னும்.

தருமியின் தன்மை

7. ஆங்கது தூங்க இப்பால்
அருள்புனை சிவனை நாளும்
நீங்ககி லாமல் வாழும்
சிவமுனி புதல்வன் நீதி
ஓங்கிய தூய்மை வாய்மை
ஒழுக்கம்நல் விழுப்ப மிக்கோன்
தாங்கரும் பத்தி யுள்ளோன்
நாமமும் தருமி என்போன்.

தருமியின் வேண்டுகோள்

8. தந்தைவான் உலகத் தேகத்
தளர்ந்துநல் குரவால் நொந்து
சுந்தரன் கோயில் புக்குச்
சொல்லுவான் மெல்ல, 'நல்ல
எந்தையே! கந்தர் தந்தாய்!
இளைத்தனன்; பொருளோ இல்லை;
மைந்தனுண் டாக என்னை
மன்றல்செய் வித்தல் வேண்டும்.'

9. 'தாதையும் தாயும் உற்ற
சுற்றமும் தனமும் முற்றும்
வேதனை வினையி னேற்கு
நீயலால் வேறு முண்டோ?
கோதிலா மரபின் வந்த
குலம்தலை அழியு மோ?'என்(று)
ஆதிநா யகன்றன் பாதத்(து)
அழுதுவீழ்ந் திளைய சொன்னன்.

சிவன் செயல்

10. வழுத்திய மறையோன் தன்னைக்
கண்டவன் மனத்தின் ஆசை
ஒழித்திடு வான்வி ரும்பி
உரகமா ணிக்கச் செம்பொன்

குழைக்கியை காதன் அங்கண்
'கொங்குதேர் வாழ்க்கை' என்றோர்
கிழிக்கிசை கவிதை பாடிக்
கொடுத்தனன் கீர்த்தி வேட்டு.

11. 'பொருவரும் கவிதை யேட்டைப்
போற்றிமுன் கொடுபோய் வாய்மை
உரியவர் அவைமுன் காட்டி
ஓங்கிய நீவி கைக்கொள் ;
தருமி!கேள் : பெறுது மற்றுச்
சாற்றிய மாற்றம் உண்டேல்
விரைவின்வந் துரைமன் மெச்ச
வெல்வதற் கைய மின்றே.'

அவையினர் செயல்

12. 'துன்புறல்;' என்று வெய்ய
துயரொழித் தினைய சொல்லி
அன்பொடும் விடைகொ டுப்ப
ஆங்கவன் நீங்கி நீங்கா
இன்புறு மனத்தி னோடும்
எய்திநீ டவையிற் காட்ட
நன்புளோர் வியந்தா ரில்லை
தம்முளே நனிந யந்தார்.

அரசன் அந்த ஏட்டைக் காணல்

13. தெரியவோர் உரைகொ டாமல்
செழுங்கவி கொடுப்ப வாங்கி
'அரசன்முன் செல்வல்' என்றே
செல்லுங்கால் அறிஞர் கண்டு
விரைவொடு சென்றார் ; சென்ற
வேதியன் காட்டக் கண்டு
பரவிய மன்னன் உள்ளப்
பான்மையார் பகர வல்லார் !

மன்னன் கூற்று

14. 'நவையின் றிநயந் தபொருட் கியையச்
சுவைதந் திடுமெல் லியசொற் கள்நிரைத்(து)
எவர்சொன் னவரிக் கவியின் றினிதா
அவர்கொள் ளுக,அக் கனகக் கிழியால்.'

15. 'பரிவொன் றியவென் றிகொள்பா வலர்நீர்
இருளொன் றியதுங் களிடத் தடைவே
விரைவின் கணடந் திடும்'என் றுவிடுத்(து)
அரவம் தருகோ யிலடைந் தனனே.

தருமி சங்க மண்டபம் சேர்தல்

16. மிகவின் புறுநெஞ் சுடைவே தியனும்
தருசங் கமடைந் துதனக் கிழியை
'பகைவென் றனம்'என் றுபகர்ந் தொழியா
நகைகொண் டுகவர்ந் திடுவான் நணுக

கீரன் முனிவு

17. பொற்புறும் அவனைக் கண்டு
பொறாமையால் இருந்த கீரன்
'சொற்பொருள் அறியாப் பார்ப்பான்
நீயிதைச் சொல்லித் தந்த
நற்கவிப் புலவன் றன்னைக்
கொண்டுவா நாடி யுன்றன்
முற்கவி தைக்குக் குற்றம்
உண்டுபோ' எனமு னிந்தான்.

தருமி குறை கூறல்

18. ஊழுடை முனிவன் வாடி
ஒல்லையா லயத்து நண்ணி,
'ஆழிநஞ் சுண்ண வல்லீர்!
அறிஞர்கள் நுமது நல்ல

சூழிசைக் கவிக்குக் குற்றம்
உண்டென்றார்; சொலவல் லீரேல்
தாழ்வறச் சொல்லி அன்றே
என்கையில் தருவீர்' என்றான்

ஈசன் புலவனாதல்

19. ஈசனும் கற்றுச் சொல்வோர்
பின்வர, இகலிற் கூடித்
தேசுடைச் சட்டை சாத்தித்
திருமுடிச் சாத்தும் சாத்தி
ஆசிலா மலர்க்க ரத்தில்
ஆழிகள் செறித்தி லங்க
மாசிலாப் புலவர் தேத்து
வந்தனன் புலவ னாக.

20. வருந்திநான் முகன்மால் தேட
வளர்ந்தழல் பிழம்பாய் நின்றான்
நெருங்கிநீர் மண்ணும் விண்ணும்
எங்கணும் நிரம்பி நின்றான்
அரும்பொருள் தரும்பேர் அண்டத்(து)
அப்புறத் தப்பால் நின்றான்
இருந்தமிழ்ச் சங்கத் தின்கீழ்
நின்றனன் எவரும் காண.

வாதம் தொடங்கல்

21. 'மன்னுமிச் சங்கத் தேறி
இருந்தவர் தம்முள் வாளா
என்னுடைக் கவிக்குக் குற்றம்
சொன்னவன் யாவ னேடா?
முன்னுறச் சொன்மின்' என்ன
முத்தமிழ்க் கீரன் கண்டு,
'நன்னெறிப் புலவ! குற்றம்
சொன்னவன் நான்காண்' என்றான்.

குலம் பழித்தல்

22. ‘அங்கம் குலுங்க அரிவாளில் நெல்’என்றோர்
பங்கக் கவிதை பரமன்சொ லவிளிந்து
‘சங்கறுப்ப தெங்கள்குலம் தம்பிராற் கே’தென்றோர்
துங்க முறுங்கவிதை சொன்னான் எதிர்துணிந்து.

கூந்தல் மணம் இயற்கையன்றேன்றல்

23. இயற்சிவன் அவைக்குள் மிக்க
இருங்கவி வாணர் முன்னே
‘இயற்றமிழ்க் கவிதைக் குற்றம்
எங்ஙனே? நவிறி’என்னச்
‘செயற்கருங் கூந்தல் தானும்
சிக்குமேல் நாறு மே;முன்
செயற்குரித் தான செய்யா
விடின்’ எனச் செப்பி னான்,முன்.

தெய்வ மாதர்க்கும் அப்படியே எனல்

24. மற்றது சொல்லக் கேட்டே
‘வானுறு தெய்வ மாதர்
கற்றையங் குழற்கும் ஒக்கு
மே?’எனக் கடவுள் கேட்ப
‘செற்றிநெய்த் திருண்டு நீண்டு
தீண்டுதற் கரிய தான
அற்றரும் குழற்கும் செய்கை
அலாதிலை இயற்கை’ என்றான்.

கவுரியின் கூந்தலும் அத்தன்மையதே எனல்

25. ‘மொழியறி யாத வெய்ய!
மூர்க்க!நீ என்ன சொன்னாய்?
எழுதரி தாய கோலத்(து)
இயைந்த நம்கவுரி தன்பேர்

அழகமர் கூந்தல் தானும்
அப்படி யேயோ?' என்னப்
'பிழையிலை' என்று கீரன்
முன்னுரை பின்னும் சொன்னான்.

சிவன் சடை காட்டக் கீரன் 'அஞ்சேன்' என்றல்

26. கண்டது நெடும்பேர் அண்டம்
கண்டவோ திமங்கா ணாத
விண்தருங் கங்கை தோய்ந்த
விரைமுடிச் சடிலம் காட்டத்
'தண்தமிழ் வல்ல! என்னைச்
சடைகொடு வெருட்டல் வேண்டா
மண்டலம் அறியும்' என்றான்
வல்வினை வசத்தால் கீரன்.

கீரனுடைய அஞ்சாத்தன்மை

27. தீயவெம் புரங்க டந்த
சேவகன் சிறிது சீறிக்
காய்தழல் நெற்றிக் கண்ணைக்
காட்டமுன் கனன்று வேவான்
'ஏயெனச் சுற்றும் முற்றும்
எங்கணும் நெருப்புக் கண்ணே
ஆயினும் குற்றம் குற்றம்'
என்றனன் அஞ்சா னாகி.

சிவன் கீரனுக்கு அறிவுறுத்தல்

28. 'அன்னியர் ஒருவர்க்(கு) அஞ்சேன்,
அஞ்சுவல் நினக்கே!' என்று
பின்னரும் உரைப்ப, எந்தை
திகைத்தவன் பேச்சைக் கண்டு

'நன்னெறி வழக்கே காணாய்
நன்கிலா இகலை விட்டிங்(கு)
உன்னருங் கவுரி கூந்தற்(கு)
ஒக்குமே மற்றோர் கூந்தல்?

29. 'வளந்தரு மடநாண் முன்னா
வருங்குண நித்த மாபோல்
உளங்கவர் இருள்வா சம்தே
சுரியன நித்த மாகும்;
தெளிந்தறிந் திலையோ பேதாய்!
'சிற்புட்ப கேசி' என்று
குளிர்ந்தபா மறைகள் நான்கும்
கூப்பிடு கின்ற வாறு?

கீரன் கேடுறல்

30. 'இன்னபூ வாச கேசி
தன்னையா ரறியா' ரென்னப்
பின்னொருத் தரமு மின்றிப்
பேரழற் கண்ணால் வெந்து
தன்னுளே பரித வித்துத்
தண்ணினீர் வேட்டுக் கூப்பிட்(டு)
அன்னமார் வாவி யிற்போய்
வீழ்ந்தனன் ஆற்றா னாகி.

சிவனருளால் தருமி கிழியறுத்தது

31. காமனைக் காய்ந்த கண்ணன்
காலனைப் பாய்ந்த காலன்
பாமறைக் கெய்தா மெய்யன்
பாவலர் காண நின்று
நாமறச் சொன்ன செற்ற
நற்றமிழ்ப் புலவ னைப்பொன்
தாமரைத் தடத்துள் போகக்
கண்டனன் தமிழ்க்கி ரங்கி

32. பாந்தளஞ் சடில முக்கண்
பாவலன் ஒளிப்பக் கண்டு
சூழ்ந்தவர் ‘சொக்கன் தன்முன்
சொல்லியார் வெல்வார்?’ என்றே
ஏந்ததி சயத்தோ டஞ்சி
ஏத்தினர்; குணலை கொள்ளா
வாழ்ந்தனன் முனிவன் தூங்கும்
பூங்கிழி வாய்த்த தென்றே.

33. விரைவொடும் சென்று யாரும்
வியப்பநல் கிழியறுத்துப்
பரமனை அடைந்து வாழ்த்திப்
போந்துதன் பண்பிற் கொத்த
திருவினும் உருவம் மிக்க
தேவியை மணந்து ஞாலம்
பரவவாழ்ந் திருந்தான் ஊழி
பழுதறு சிறுவர்ப் பெற்றே.

---

4. பாகவத புராணம்

குசேலர் வரலாறு

1. பாயும் வல்லிருள் பருகுமொண்
கதிர் மணிச் செஞ்சூட்(டு)
ஆயி ரந்தலை அலர்த்துபாம்
பணைத்துயி லகற்றிக்
காயும் வெஞ்சினக் கட்செவித்
தலையில்நின் றாடும்
மாய னன்பினன் குசேலன்என்
றுளனொரு மறையோன்.

சுசீலை வறுமை நிலையை வெளியிட எண்ணுதல்

2. எனைத்தொன் றுயினும் எதிர்ந்தது
மிசைந்துவண் டிரைக்கும்
புனத்து ழாய்முகில் பொன்னடி
கருதுமம் மறையோன்
மனைக்கி ழத்திவெம் பசியினுல்
வாடிய முகத்தாள்
பனித்த கண்ணினள் பவளவாய்
திறந்தனள் பகர்வாள்.

'கண்ணனிடம் சென்று பொருள் பெற்று வருக' என்றல்

3. 'பொன்பி றங்கிய பூண்திகழ்
திருமகள் கொழுநற்(கு)
அன்ப னுகியும் அகன்றிலை
வறுமை;மற் றென்னே?
மின்பி றங்கிய விழுமணி
மார்பினுர் கண்டு
மன்பெ ரும்பொருள் வாரினை
வரு'கென வகுத்தாள்.

கண்ணனுக்காகக் கையுறை தந்தனுப்பல்

4. வடித்த நான்மறை அந்தணன்,
'மாயனைக் காணின்
கொடுப்ப தென்?'எனக் குறுநுதல்
அறவர்பாற் கொடுவந்(து)
இடித்த பாசவல் இரந்தவெண்
துகில்பொதிந் தீந்து,
'நடத்தி' என்னலும் நசையிலன்
மென்மெல நடந்தான்.

குசேலன் துவாரகை அடைதல்

5. தெரியு நான்மறை இன்னமும்
தெரிவுறக் காண்டற்(கு)

அரிய ஞகிய அரக்கிதழ்
முளரியஞ் செங்கண்
கரிய வன்தனைக் காணுறக்
கடுகுபே ரன்பு
விரிய ஏகினன் விழுப்பெருங்
கோயின்மே யினனல்.

கண்ணனைக் காணுதல்

6. மன்னர் மன்னவர் மணிமுடித்
திரள்பொரு துக்க
பொன்றி வந்தொளிர் பொற்கடை
முன்னிறந் தேகிக்
கன்னி யந்துழாய்க் கருமுகி
லொருகனித் துவர்வாய்
அன்ன மென்னடை அரிவையோ
டிருந்துழி அடைந்தான்.

கண்ணன் குசேலனை வரவேற்றல்

7. உருகு காதலன் பைப்பைய
வொல்கினன் வருதல்
முருகு வெம்புசெம் முளரியஞ்
செங்கணன் நோக்கி
எரிபொன் சேக்கைநின் றெழுந்தெதிர்
சென்'றிவண் வருக!
வருக!' என்றுபொன் மார்புறத்
தழீஇயினன் மகிழ்ந்தான்.

கண்ணன் குசேலனை உபசரித்தல்

8. களித்த செங்கயல் கருங்கண்மா
மாதுவெண் கவரி
வளைத்த ளிர்க்கையால் இரட்டமா
மணியணை இருத்தி

'இளைத்தி சால!'என் றிளநிலா
ஒழுகுநூல் மார்பின்
அளிக்கு லஞ்செறி செய்யதா
ரணிந்துபா களித்தான்.

கண்ணன் பழமை பாராட்டல்

9. பயிற்று நான்மறைக் குரவன் அம்
மனையவள் பணியால்
வெயிற்கு வெம்பிய கானிடை
விறாய்தரற் கேகிப்
புயற்க சைந்தொரு பொதும்பரி
னிரவுநா மிருந்த(து)
அயர்த்தி போலும்!என் றளவளாய்
உசாவின னன்றே.

கண்ணன் கையுறை ஏற்றல்

10. முளைத்த வெண்ணிலா முறுவல்வாள்
முகத்தின னாகி
'அளிப்ப மற்றெனக் கென்கொடு
வந்தனை ? அன்ப
ஒளிப்ப தென்னைநீ ? உதவு'கென்
றுள்ளரக் கூட்டும்
தளிர்க்கை யால்துகில் வாங்கினன்
தனிமறை முதலி.

கண்ணன் அவல் உண்ணல்

11. 'பொருள்வி ழைந்திவன் போற்றலன்
நமையொரு பொழுதும்
திருவி ழைந்திவன் திருமனைக்
கிழத்திசெல் கென்ன,
வரவு வந்தனன் ; மற்றிவற்
களித்து'மென் றள்ளி
விரைக மழ்ந்தபூந் துளவினான்
பாசவல் மிசைந்தான்.

கண்ணன் அவல் உண்டலை ருக்மணி தடுத்தல்

12. ‘ஊர்ந்த காதலின் ஒருமுறை
அருந்திய திறத்தால்
ஏந்த லிந்திரன் எனக்கருஞ்
செல்வமெய் தினனால்
மாந்தல் மற்றினி’ என்றுசெம்
மலர்க்கரம் பிடித்தாள்
பூந்து ழாய்வரை மார்பக
மகன்றிலாப் பூவை.

குசேலன் கண்ணனிடம் விடைபெறுதல்

13. தடநெ கிழ்ந்தசெந் தாமரை
யவள்குறிப் பறிந்து
விடுசு டர்ப்பனி வெண்ணகை
முகிழ்த்தருள் சுரந்து
மடைதி றந்துசெங் கண்ணினன்
மறையவன் தனக்கு
விடைபு ரிந்தனன் ; வீறுசால்
வேதியன் எழுந்தான்.

குசேலன் தன் ஊரடைதல்

14. ‘அம்ம வுய்ந்தனம் உய்ந்தனம்!
‘அரும்பொரு ளெய்தின்
மம்மர் கூர்தர மறக்குவன்
நமை’யென மதித்தே
மும்மை சாலுல(கு) அளித்தருள்
முளரியஞ் செங்கண்.
செம்மல் நல்கலன் செல்வ’மென்
றுவந்தனன் சென்றான்.

குசேலன், செல்வச் சிறப்பெய்தியிருக்குந்
தன் வீட்டினை அடைதல்

15. களித்த வண்டினம் கனலவாய்
விரிந்துதண் தேறல்
துளித்த நாண்மலர்ச் சோலையுஞ்
சுடர்மணித் தொகுதி
தெளித்தெ னத்திகழ் தீம்புனல்
வாவியுஞ் செறிந்து
பளிக்கு மண்டபம் பல்குதன்
மனையகம் படர்ந்தான்.

குசேலன், தன்மனையின் மாறுதலைக் கண்டு மயங்கல்

16. தெள்நி லாக்கதிர் சிந்திய
வெள்ளிவெண் மாடம்
முளையி ளம்பிறை தவழவிண்
முகடுகீண் டோங்கி
அளகை காவலன் அருநிதி
அறைதிறந் தென்ன
வளம லிந்தஅம் மனையகம்
நோக்கினன் மயர்ந்தான்.

குசேலன், சுசீலை ஆடை அணி திகழ வருவது கண்டு அயிர்த்தல்

17. விலகி வில்லுமிழ் மீன்குழாத்
தொள்ளரி விரிக்கும்
கலைநி றைந்தவெண் மதியெனக்
கவின்வழிந் தொழுகு
திலக வாள்நுதல் சிற்றிடைத்
தெரிவையர் செறிய
இலகு பூணணிந்(து) இல்லவள்
வருதல்கண் டயிர்த்தான்.

குசேலன், கண்ணன் கருணையை எண்ணி வியத்தல்

18. பதியை நோக்கினன் பதிதொறும்
பதிதொறுங் கிடந்த
நிதியை நோக்கினன் நேரிழை
மடப்பிணை மருட்டும்
புதிய நோக்கொடு போதரு
மனையவள் வதன
மதியை நோக்கினன் 'மால்செயல்
இது'வென வலித்தான்.

—செவ்வைச் சூடுவார்

5. தேம்பாவணி

கருணையன் வானவர் உதவியால் தன் தாயை
அடக்கஞ் செய்தபின் தனிமையில் உரைத்த புலம்பல்

1. கதிர்செயும் உருவில் தோன்றிக்
கனிவொடு சூழ்ந்த விண்ணோர்
உதிர்செயுங் கனிபோல் வீழ்ந்த
உடற்குநன் முறைகள் யாவும்
முதிர்செயும் அன்பின் பாலான்
முடித்தபின் குழவி மோனன்
பொதிர்செயும் உளத்தைத் தூண்டும்
புரிவிறல் முறைகள் தீர்ந்தான்.

2. புன்மலர்க் கண்கள் தூவும்
புனலின்நீ ராட்டி மார்பில்
பன்மலர்ப் படலைக் கண்ணி
பல்லறம் புனைந்தா யென்று
தன்மலர் கரத்தாற் சூட்டிச்
சாய்பக லொடுகுவ் வேடு
துன்மலர்க் கமலக் கையைத்
தொழக்குவித் திறைஞ்சிட் டானே.

3. அளியழக் குயில்கள் மஞ்ஞை
அயர்ந்தழ அழவன் னங்கள்
கிளியழ அழப்பூம் பூவை
கிளையழ இரங்கி வீசும்
வளியழப் புனலீண் டோடி
வந்தழ வனத்தி லெல்லா
உளியழ அழுவே தோன்ற
உம்பர்மெய் யெடுத்துப் போனர்.

4. பூக்கையைக் குவித்துப் 'பூவே!
புரிவொடு காக்கென் றம்பூஞ்
சேக்கையைப் பரப்பி யிங்கண்
திருந்திய அறத்தை யாவும்
யாக்கையைப் பிணித்தொன் ருக
இனிதிலுள் ளடக்கி வாய்ந்த
ஆக்கையை யடக்கிப் பூவோ(டு)
அழுங்கணீர் பொழிந்தான் மீதே.

5. தாய்முறை திருந்தி யாக்கை
தகுமுறைக் கடக்கிப் பின்றன்
நோய்முறை யடக்க லாற்று
நுதலிய தவத்தின் மாட்சி
தூய்முறை விரும்பித் தன்கண்
துணையிலா தஞ்சி யேங்கித்
தீய்முறை யழல்நெஞ் சொத்த
திரைச்சுனை தனித்துச் சென்ருன்.

6. எழுஞ்சுனை யகட்டுப் பாய்நீர்
இனிதிவற் கிரங்கி விம்மக்
கொழுஞ்சுனை கண்க ளாய
குவளைகள் இமையா நோக்கக்

கெழுஞ்சுனை வரம்பில் வைகிக்
கிளைத்தநோ யழன்ற நெஞ்சான்
அழுஞ்சுனை பெருகக் கண்ணீர்
அகல்கடல் வெள்ள மாற்று.

7. மண்ணரம் பிசையிற் பாடல்
மாறிவண் டிரங்கி விம்ம
உண்ணரம் பழுத்த தன்மைத்
துருக்குயில் அழுது தேம்ப
விண்ணரம் பருளின் மார்பன்
விழுங்கிய துயர்கால் வான்போல்
பண்ணரம் பிளகி யெங்கும்
பரிசொடு விம்மச் சொல்வான்.

8. சொல்லிய விசையின் பெட்போ
துயரமோ வியப்போ ஏதோ
புல்லிய கொம்பிற் புள்ளும்
பூவில்வண் டினமுங் காற்று
மில்லிய புனலு மற்ற
யாவும்வாய் விடாமை கேட்பக்
கல்லிய கவிர்ச்செவ் வாயன்
கருதிய துயரங் கான்றான்.

9. நீரெழுங் குமிழி போலும்
நெடியதேர் நேமி போலும்
காரெழு மின்னல் போலும்
கடலெழுந் திரைகள் போலும்
பாரெழுஞ் செல்வத் தில்லைப்
பதியுமோர் நிலையு மென்றார்
சீரெழு ஞானத் திற்கும்
திரைதிரண் டலைவ துண்டோ?

10. வெண்ணிறத் துகில்கொள் மாசு
வெண்மதி கதிருள் தோய்த்துத்
தெண்ணிறத் தொழிக்கல் போற்சூல்
சிறையகன் றுதிக்கு முன்னர்த்
தண்ணிறப் பிறைசூழ் தாளாள்
தளிர்த்ததன் தயையிற் சொன்ன
பண்ணிறக் கிளவி யால்யான்
பழம்பழிக் களங்கந் தீர்ந்தேன்.

11. உலைவளர் தீயில் தீய
உலைப்பிடும் பாவந் தீர்ந்து
கலைவளர் உணர்வு ஞானக்
காட்சியு முணரா தெய்தி
அலைவளர் உலகி லொவ்வா
அதிசயத் தொன்ருய் வையின்
மலைவளர் வெள்ள மென்ன
வரத்தொகை யுவப்பக் கொண்டேன்.

12. வளர்ந்தவெண் மதிதேய்ந் தன்ன
வளங்கொடு பிறந்த பின்னுன்
உளர்ந்தகண் ணருவி யோட்டி
உலந்தெனை யீன்ருேன் மாள்கக்
கிளர்ந்தவெம் பகையைக் கொன்னே
கிளைத்தகோன் கொடுமைக் கஞ்சித்
தளர்ந்தமெய் யவலித் தென்னைத்
தாயுமிவ் வனத்தி லுய்த்தாள்.

13. விரிந்தன கொம்பிற் கொய்த
வீயென வுள்ளம் வாட
எரிந்தன நுதிநச் சம்புண்(டு)
இரும்புழைப் புண்போல் நோகப்

பிரிந்தன புள்ளிற் கானில்
பெரிதழு திரங்கித் தேம்பச்
சரிந்தன அசும்பிற் செல்லும்
தடமிலாத் தனித்தேன் அந்தோ !

14. துள்ளிவாழ் உழைகாள் ! கொம்பில்
துன்னிவாழ் குயில்காள் ! தூய்தேன்
அள்ளிவாழ் அளிகாள் ! தேன்காள் !
அழல்நிறக் கமலப் பைம்பூம்
பள்ளிவாழ் ஓதி மங்காள் !
பறித்துவாழ் கொடிகாள் ! கோறல்
உள்ளிவாழ் வரிகாள் ! சொன்மின்
உயிர்தனித் தலில்தீ துண்டோ ?

15. காய்முதிர் கனியி னாழ்த்துக்
கனிந்துவீ ழிம்மெய் வாட்டி
வேய்முதிர் வனத்தில் நோன்பின்
வித்தினல் விளைமெய்ஞ் ஞானம்
ஆய்முதி ருவப்பி னுள்ளத்(து)
ஆண்டகை யொருவ னுள
நோய்முதி ருலக நீக்கல்
நுதல்வரு மினிமை தானே.

16. ஊக்கவேர் பூட்டி நோன்பால்
உடற்செறு வுழுது நன்றி
வீக்கமேல் விரதச் செந்நெல்
வித்திநல் லொழுக்க நீரைப்
போக்கநீ டிறைத்துத் தன்னைம்
பொறியெனும் வேலி காக்கில்
ஆக்கமாய்ப் பெரும்வீட் டின்பம்
அண்டமேல் விளைக்குந் தானே.

17. பனிமதி பொழிந்த கற்றை
பருகிய ஆம்பல் போலத்
தனிமதி துய்த்த நெஞ்சில்
தான்தனை நம்பாத் தன்மை
துனிமதித் தயர்ந்த தல்லால்
துணிவரு வயிரக் குன்ருய்
முனிமதிக் குழவி சோர்ந்து
முளரிமேல் துயில்கின் ருனே.—வீரமாமுனிவர்

IV. சிறு நூல்கள்

1. கந்தரந்தாதி

1. தெளிதரு முத்தமிழ் வேதத்தில்
தெய்வப் பலகையின்கீழ்
தெளிதரு மூத்தமி ழாகித்தர்
சேவித்து நின்றதனல்
தெளிதரு முத்தமிழ் தேய்நகை
வாசகச் செல்விதினைத்
தெளிதரு முத்தமிழ் செவ்வேள்
இருப்பச் செவிகுனித்தே —அருணகிரிநாதர்

2. திருவரங்கக் கலம்பகம்.

2. பேசவந்த தூத!செல் அரித்தஓலை செல்லுமோ ?
பெருவரங்கள் அருளரங்கர் பின்னைகேள்வர் தாளிலே
பாசம்வைத்த மறவர்பெண்ணை நேசம்வைத்து முன்னமே
பட்டமன்னர் பட்டதெங்கள் பதிபுகுந்து பாரடா !
வாசலுக்கி டும்படல் கவித்துவந்த கவிகைமா
மகுடகோடி தினையளக்க வைத்தகாலும் நாழியும்
வீசுசாம ரம்குடில் தொடுத்த கற்றை சுற்றிலும்
வேலியிட்ட தவர்களிட்ட வில்லும் வாளும் வேலுமே
—பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

3. குற்றாலக் குறவஞ்சி

3. சூழ மேதி யிறங்குந் துறையில்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினிற் பாயக்
கொழும்ப லாக்கனித் தாழையிற் சாய

வாழை சாய்ந்தொரு தாழையில் தாக்க
வருவி ருந்துக் குபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திடுஞ்
சந்த்ர சூடர்தென் ஆரிய நாடே.

—திரிகூடராசப்பக் கவிராயர்

4. திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

பொன்னி மணக்கும் புதுப்புனலில்
புடைசூழ் பணில முத்தெடுத்துப்
புறக்கோட் டகமுண் டாக்கிவலம்
புரியைத் தூதைக் கலமமைத்துக்
கன்னி மணக்கும் கழனியிற்செங்
கமலப் பொகுட்டு முகையுடைத்துக்
கக்குஞ் செழுந்தேன் உலையேற்றிக்
கழைநித் திலவல் சியைப்புகட்டிப்
பன்னி மணக்கும் புதுப்பொழிலில்
பலபூப் பறித்துக் கறிதிருத்திப்
பரிந்து சிறுசோ றடுமருமை
பாராய் அயிரா வதப்பாகன்
சென்னி மணக்கும் சேவடியால்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச்செந்தூர்ச்
செல்வா ! சிற்றில் சிதையேலே.

—பகழிக் கூத்தர்

V. பல்வகைப் பொருள்

1. மருத நில வளம்

1. ஒழுகு தீம்புனல் சிறைசெயும் ஓதையும், உழுநர்
குழுவின் சும்மையும், உழத்தியர் குரவையின் ஆர்ப்பும்,
'கழனி வாழ்'கென வான்முளை வித்துனர் கலிப்பும்,
மழைமு ழக்கொடு மாறுகொண் டொலித்தன மாதோ.

2. விழுந்த அஞ்சிறை வண்டினம் மிதிப்பமேல் லரும்பு
கிழிந்து வார்தரு தேறலும், கிளர்சினைப் பலவின்
பழுங்க னிந்துவீழ் தேறலும், பழனங்கள் தோறும்
வழிந்து பாய்தலின் வானுற வளர்வன செந்நெல்.

3. கூனி ரும்பினிற் குறைத்தரி சும்மையிற் கொடுபோய்
மேனி வந்துயர் வரையெனப் போர்பல வேய்ந்து
நீனி றக்கரும் பகட்டினல் தெழித்துவை நீத்த
தூநி றத்தநெல் பண்டியிற் பற்பலர் தொகுப்பார்.

—அதிவீரராம பாண்டியர்

---

2. உடல் நல வழிகள்

உடல் உரம் பெற்றாரே உலகில் உயர்வர்

1. வயிறு பருத்தே உடல்கூனி
வடிவஞ் சிறுத்து வாழ்நாளில்
துயரம் பெறவோ இவ்வுலகில்
தோன்றி வளர்தல் அம்மம்மா !
வயிரம் பெற்ற வுடம்போடே
மனத்தின் திடமும் பெற்றார்க்கே
உயரும் செயலும் கைகூடும்
ஒப்பில் லாத புகழாமே.

வயது முதிர்ந்தோர்க்கு வகையான பயிற்சிகள்

2. முதிர்ந்த பருவம் உடையார்க்கு
முக்ய மாகும் உடற்பயிற்சி
அதிர வுழைத்து வருந்தாமல்
ஆன வரையில் நடப்பதுவும்
துதிகொள் கோவில் சுற்றுவதும்
தோட்ட வேலை செய்வதுவும்
விதியில் வீட்டு வேலையெலாம்
விரும்பிச் செயலும் தகுந்தவையே.

நாள்தோறும் நடக்கவேண்டிய நல் விதிகள்

3. தூய காற்றை நல்லுணவைச்
சுத்த நீரை யுட்கொளலும்
நேய முடனே வுடற்பயிற்சி
நித்தம் இயற்றிக் குளிப்பதுவும்
ஆய வுறக்கம் செய்வதுவும்
ஆடை வெளுத்துக் கட்டுவதும்
தீய பிணியை நீக்கியுரன்
செய்யும் இனிய நட்பாமே.

—கா. சி. சிவசங்கர முதலியார்

---

3. தமிழ் மொழியின் சிறப்பு

1. கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ ?

2. திருவளரும் செந்தமிழாம் தேமலர்தான் எப்பொழுதும்
முருகுவி ரித்தொளிரும் மூவுலகும் அம்மானை !
முருகுவி ரித்தொளிரும் மூவுலகும் ஆமாயின்
அருமைமிகு வானவரும் அணிவரோ அம்மானை !
அங்கொன்றைத் தாரனுமுன் அன்புவைத்தான் அம்மானை !

3. தேங்கு சுவையிற் கவினில் திகழ்பழமை யின்மிகுந்த
பாங்கி னுயர்மொழிநம் பைந்தமிழ்காண் அம்மானை!
பாங்கி னுயர்மொழிநம் பைந்தமிழே ஆமாயின்
ஆங்கிலத்திற் பொருள்மிகவே அளித்திடுமோ அம்மானை!
அகத்தும் புறத்தும் அளித்திடுங்காண் அம்மானை!

4. காதும் கண்ணும் கருத்தும் களிக்க
ஓதும் பண்ணும் உயரிய வனப்பும்
களிமிக ஊட்டும் அளிமிகு பொருளும்.
தெளிவிலா மாக்கள் ஒளியொடே யுணர
அறியா மையை யகற்றி யறிவைச்
செறிவா யூட்டும் சிறப்பமை யொளியும்
கொண்டு தனக்குக் குண்டுநீர் உலகில்
அண்டிடும் ஒப்பிலா அருந்தனித் தெனவாய்
இனிமைய தென்னும் எண்மிகு பொருட்டாய்
நனியுயர் பெயர்கொளும் நலத்தமை தமிழ்மொழி.

—அமிர்தம் சுந்தரநாதனர்

---

4. வருணனை

அந்திமாலைச் சிறப்பு

1. அன்னச் சேவல் அயர்ந்துவிளை யாடிய
தன்னுறு பெடையைத் தாமரை அடக்கப்
பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடைகொண்டு
ஓங்கிருந் தெங்கின் உயர்மடல் ஏற,
அன்றிற் பேடை அரிக்குரல் அழைஇச்
சென்றுவீழ் பொழுது சேவற் கிசைப்ப,
அந்தி யென்னும் பசலைமெய் யாட்டி
வந்திறுத் தனளால் மாநகர் மருங்கென்.

—சீத்தலைச் சாத்தனர்

காற்றுச் சோலையில் உலாவுதல்

2. பொங்கரின் நுழைந்து வாவி
புகுந்துபங் கயம்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணம்கூட் டுண்டு
குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன்போல் இயங்கும் அன்றே!

—பரஞ்சோதி முனிவர்

காற்றின் மரக்கிளை அசைதல்

3. சேட்டிகைத் தென்கால் தள்ளத்
தெண்மதுச் சிதறத் தும்பி
நீட்டிசை முரலச் சாயா
நின்றுபூங் கொம்பர் ஆட,
காட்டியப் புலவன் ஆட்ட,
நகைமுகம் வியர்வை சிந்தப்
பாட்டிசைத் தாடா நிற்கும்
பாவைமார் போன்ற அன்றே!

—பரஞ்சோதி முனிவர்

---

5. பாரதமாதா திருப்பள்ளி யெழுச்சி

1. பொழுதுபு லர்ந்தது ; யாம்செய்த தவத்தால்
புன்மையி ருட்கணம் போயின யாவும் ;
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்துவி ளங்கிய தறிவெனும் இரவி ;
தொழுதுனை வாழ்த்திவ ணங்குதற் கிங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றேம் ;
விழிதுயில் கின்றனை இன்னுமென் தாயே!
வியப்பிது காண்!பள்ளி யெழுந்தரு ளாயே.

2. புள்ளினம் ஆர்த்தன ; ஆர்த்தன முரசம் ;
பொங்கிய தெங்கும்சு தந்திர நாதம் ;
வெள்ளிய சங்கமு ழங்கின கேளாய் !
வீதியெ லாமணு குற்றனர் மாதர் ;
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார் ;
அள்ளிய தெள்ளமு தன்னையெம் அன்னை !
ஆருயி ரே! பள்ளி எழுந்தரு ளாயே.

3. பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம் ;
பார்மிசை நின்னொளி காணுதற் கலந்தோம் ;
கருதிநின் சேவடி அணிவதற் கென்றே
கனவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம் ;
சுருதிகள் பயந்தனை ; சாத்திரங் கோடி
சொல்லரு மாண்பின ஈன்றனை அம்மே !
நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத் தேற்றாய் !
நிர்மலை யேபள்ளி எழுந்தரு ளாயே.

—தேசீயக்கவி சி. சுப்பிரமணிய பாரதியார்

---

6. ஏழு வள்ளல்கள்

வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும், சுரும்புண
நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரல்
பறம்பிற் கோமான் பாரியும், கறங்குமணி
வாலுளைப் புரவியொரு வையகம் மருள
ஈர நன்மொழி இரவலர்க் கீந்த
அழல்திகழ்ந் திமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்

கழல்தொடித் தடக்கைக் காரியும், நிழல்திகழ்
நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற்(கு) அமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும், மால்வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த
உரவுச்சினங் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக்கடல் தானை அதிகனும், கரவாது
நட்டோர் உவப்ப நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளியும், நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரியும் எனவாங்கு
எழுசமங் கடந்த எழுவுறழ் திணிதோள்
எழுவர்.

—இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனர்

VI. தனிப்பாடல்கள்

விஞவுத்தரம்

1. பூமகள்யார் ? போவானை யேவுவான் ஏதுரைக்கும் ?
நாமம் பொருசரத்திற் கேதென்பர் ?—தாமழகின்
பேரென் ? பிறைசூடும் பெம்மான் உவந்துறையும்
சேர்வென் திருவேகம் பம். —தண்டியாசிரியர்

சோல் நயம்

2. சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலை யானதே—சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை பித்தா!நின் பாதம்
படித்தோர்க்கு மாறுதலை பார்.

3. முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன்—விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது. —காளமேகப் புலவர்

இராமச்சந்திரக் கவிராயர் சிறப்பு

4. செந்தமிழ்ச் செல்வனும் ஓரா
யிரந்தலைச் சேடனும்யாழ்
சுந்தரத் தோடிசை வல்லோனும்
யாவரும் தோத்திரஞ்செய்
கந்தனைச் சொல்லும் கவிராமச்
சந்த்ரனைக் கண்டுவெட்கி
அந்தரம் வெற்பிழி பாதாளத்
தோடி யடங்கினரே. —எல்லீசு துரை

முறை மாறுகத் தோன்றப் பாடியது

5. வீமனுக்கு மைந்தனர் வேத னாகும்
வேதனுக்கு மைந்தனர் ஈச னாகும்
காமனுக்கு மைந்தனர் வீமன் தம்பி
கந்தனுக்கு மாமனர் காமன் தானே
மாமனுக்கு முன்தமையன் தந்தை காலன்
வையகத்தில் இம்முறைமை வழங்க லாலே
ராமனுக்குச் சீதைதங்கை யாக வேண்டும்
ராவணனுக் குத்தகப்பன் ராமன் தானே.

—இராமச் சந்திரக் கவிராயர்

சீட்டுக்கவி

6. ஏடாயி ரங்கோடி எழுதாது தன்மனத்(து)
எழுதிப் படித்தவிரகன்
இமசேது பரியந்தம் எதிரிலாக் கவிவீர
ராகவன் விடுக்குமோலை
சேடாதி பன்சிரம சைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம்பு ரந்துதா கந்தீர்த்த
செழியன்எதிர் கொண்டுகாண்க;
பாடாத கந்தருவம், எறியாத கந்துகம்,
பற்றிக்கொ லாதகோணம்,
பறவாத கொக்கு,அன ற் பண்ணுத கோடைஜம்
படையில்தொ டாதகுந்தம்,
சூடாத பாடலம், பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம்,
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்குந்
துதிக்கவர விடல்வேண்டுமே.

—அந்தகக்கவி வீரராகவ முதலியார்

VII. பொன் மொழிகள்

புற நானூறு

உண்மையுணர்வு

1. யாதும் ஊரே ; யாவரும் கேளிர் ;
தீதும் நன்றும் பிறர்தர வாரா ;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன ;
சாதலும் புதுவ தன்றே ; வாழ்தல்
இனிதென மகிழ்ந் தன்று மிலமே ; முனிவின்
இன்னா தென்றலு மிலமே ; மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தன மாகலின், மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே ;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

—கணியன் பூங்குன்றன்

பிறர்க்கென வாழும் பெரியோர் இயல்பு

2. உண்டா லம்மவில் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலு மிலரே ; முனிவிலர் ;
துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் ; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர் ;
அன்ன மாட்சி யனைய ராகித்
தனக்கென வாழா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

—கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாட்டு

1. தேசியக்கவி பாரதியார்

[ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்.]

சமீபத்தில் காலஞ்சென்ற புலவர் திலகர் ஸ்ரீ சுப்பிர மணிய பாரதியாரைத் தமிழகமே யன்றிப் பிறிதுலகும் சிறி தறியும். இவர் புகழ் எம்மனோர் போற்றும் சிறுமையுடைத் தன்று. இவர், புகழிற்போலவே வயதிலும் நண்பகலெய் தாக் காலே ஞாயிறே யாவர். நாடு மூடிய கால மேகங்களிலும், நடுநிலை இறந்தீ ஓர் வுணர்ச்சி இருளிலும் மறைந்து, மாசற்ற விண் பெருத தற்காலத் தமிழ்நாட்டில் வெயில் செய வெள்கி இவர் பெரிதும் ஒளிந்தொளிர்ந்தார்.

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் மதித்தற்குரியவும் அரி யவுமாம் குணம் பல வுடையவர். இவரை நயப்பார் பலர்; வெறுப்பார் சிலர். இவர்மாட்டு இவ்விரு திறத்தாரும் வியக் குங் குணமும் பலவாம். இவரைத் தமிழ் நாடு செய்த தவ மென்பார் உளர்; வாணாளை வீணாக்கி, பல கற்றும், உலகத் தோடு ஒட்டவொழுகும் நலங் கல்லாராகக் கருதும் பிறரும் உளர். பலர் இவரைத் தமிழகத்தே தலை நின்ற தேச பக்த ராக வந்திப்பர். இவரை, 'தந்நலம் பேணாதார்; பிறர் நலமும் அறியவொண்ணார்' என்று நிந்திப்பாரு முண்டு. அறிவை அடிமைப்படுத்தி, உணர்வைக் கொள்ளைகொண்டு, 'நெஞ்சை யள்ளும்' அருங்கவி விரைந்தியற்றவல்ல அமுத வாய்ப் புலவர் இவரெனப் பலர் பாராட்டுவர்.

*சென்ற பதினைந்தாண்டுகளாக நானும் பாரதியாரும் சிறிதுஞ் சல்லாபத்திற் கிடமின்றி அறப் பிரிந்தேமாயினும், அதற்கு முன், இளமையில் தொடர்ந்த நெருக்கமும், சிறி திடைப் பிரிந்து,பின் இடையறாது உடன்பயின்று சோராது வளர்ந்த நேசமும் எனக்கு இவரிடத்துண்டு. இவர் சென்னை யில் வசிக்கச் சென்ற காலமுதற்றான் இவர் வாழ்க்கை அத்

---

* 1922-ல் இக்கட்டுரை வரையப்பட்டது.

துணையாக நான் நேரில் அறியாததாயிற்று. இவ்வாறு பிரிந்த இப் பின்காலத்தும் வெளிவந்த இவர் பாடல்களும், பத்திரிகை வியாசங்களும் பெரும்பாலும் நான் படியாதன இரா. இவர் சமுதாய வாழ்வை (public life) யும் இயன்ற வரை கவனித்து வந்துளன். உழுவலன்பு காரணமாக இவர், தம் விழுமிய நூல்கள் பற்றி இடையிடையே எனக்கெழுதுவதுமுண்டு. ஆகவே, இவைகொண்டு ஒருவாறு இப் புலவர் திலகர் வாழ்வில் பிறரறிய விரும்புவனவும் தகுவனவுமாய சிலவற்றை ஈண்டு விளக்கத் தொடங்குகிறேன்.

இவர் தந்தையாரை யான் அறிவேன். அவர், 'முயற்சி திருவினையாக்கும்' என்ற முதுமொழிக்கு இலக்கியமானவர். எட்டையபுரம் சமஸ்தானத்தில் உத்தியோகஸ்தரும், வித்துவானுமாயிருந்து சிறந்த ஸ்ரீ சின்னசாமி அய்யரவர்களை அவர் காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் அறியாதவரில்லை. அக்காலத்திலேயே அவர் கலாசாலை உதவியின்றி ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார்; தமிழில் சிறந்த பண்டிதர்; மேல் நாட்டுக் கணித முறைகளில் கைகண்ட நிபுணர்; தருக்கத்தில் தந்நிகரற்றவர். இத்தகைய அறிவு, ஆற்றல் நிறைந்திருந்த ஸ்ரீ சின்னசாமி அய்யரவர்களுக்கு, அவர்களின் முதன் மனைவியார் வயிற்றுதித்த புத்திரரே நம் வரகவிஞர். பாரதியாரின் அன்னையாரை நான் நேரில் அறியேன். அந்த அம்மையாரை அறிந்த அனைவரும், அவர் அழகிலும் அருளிலும் தம் இயற்பெயரொப்ப லக்ஷ்மியே யென்பர். இந்தத் தம்பதிகளின் தவப்பயனாய்ப் பாரதியார் 1882 ஆவது வருஷம், கார்த்திகை மாதத்தில், சுப தினத்தில், நல்ல வேளையில், எட்டையபுரத்தில் பிறந்தார். பெற்று மகிழ்ந்த தாயார், இவர் புகழ் கேட்டுப் பின்னும் மகிழப்பெறு முன்னே, இவர் தம் ஐந்தாம் ஆண்டிலேயே பரமபதம் எய்தினர். அது முதல் இவர் தந்தையாரே தாயுமாயிருந்து பாந்திப் பரிந்து பராமரிக்க, இவர் அறிவிலும் உருவிலும் ஒப்புயர்வற்று வளர்ந்து, ஊர் உவலை சொல்ல, யாவரும் அதிசயிக்கத் திகழலானர்.

நமது மகாகவிஞரின் தந்தையார், ஐந்தாம் ஆண்டில் இவருக்கு அக்ஷராப்பியாசம் செய்துவைத்தார். பாரதியார் தமது ஏழாம் பிராயமுதலே அருமையான தமிழ்க் கவிகளை விளையாட்டாக விரைந்து இயற்றுவதைக் கண்ட வித்துவான்கள் நமது கவிஞரின் தந்தையாரைப் புகழ்ந்திருப்பதை நான் நேரில் அறிவேன். இவர் தம் எட்டு, ஒன்பதாம் ஆண்டுகளில் சர்வ சாதாரணமாய்க் கொடுத்த சமசைகளை வைத்து, அற்புதமான கவிகளைப் பூர்த்தி செய்து, பெரிய புலவர் கூட்டங்களைப் பிரமிக்கச் செய்த பல காலங்களிலும் நான் கூட இருந்திருக்கிறேன். காளிதாசன், கம்பன் முதலிய வரகவிகளுக்குக் காளி வாக்கில் எழுதிய கால முதல், அநாயாசமாய்க் கவி சொல்லல் வாய்ந்ததென்று நாம் கேட்கும் கதைகளையும், குமரகுருபரர் ஐந்தாம் ஆண்டில் அரும்பாக்கள் இயற்றினர் என்ற கதையினையும் அபூர்வ கற்பனைகளென்று புறக்கணித்த நான், பாரதியார் ஏழாம் வயதுமுதல் எளிதில் பாடலியற்றித் தமிழ்வாணர்கள் மெச்சும்படி காட்டிய திறமையை நேரில் கண்டபொழுது தான், கவிகள் பிறப்பிலேயே அமையவேண்டுமென்று அறிந்தேன். பாரதியார், பதினோராம் ஆண்டில், புலவர் கூடியதோர் பெருஞ்சபையில், புதிது புதிதாகக் கொடுத்த அடிகளைக் கொண்டே பூர்ண கவிகளை விரைந்தியற்றிச் சபையோரை வியப்பித்தபோது, அவருடைய கவித்திறமையையும், அமிர்த வாக்கையும் கண்டு சந்தோஷப்பட்ட புலவர்களால் முதல் முதல் 'பாரதியார்' என்ற பட்டம் கொடுக்கப்பெற்றார். அன்று முதல் அனைவரும் இவரைப் பாரதியாரென்றே அழைக்க ஆரம்பித்தார்கள். தற்கால முறைப்படி இவர் ஆரம்பமுதல் ஆங்கில கலாசாலைகளிலேயே படிப்பிக்கப் பெற்றாரே யன்றித் தனித்தமிழ் ஆசிரியர்களிடத்தில் தமிழ்ப்பாடம் கேட்கவில்லை. இவர் தந்தையார் இவருடைய கல்வியில் விசேஷ கவனம் செலுத்தியதுண்டு. இவர் இளம் பருவத்திலேயே பாஷையிலும், கணித முதலிய சாஸ்திர பாடங்களிலும், சமமாகச் சிறந்து விளங்கினர்; அதிகமாகப்

பேசுகிறதில்லை; குழந்தைகள் எல்லாரோடும் சேர்ந்து விளையாடுவதிலும் பிரியப்படார்; தமக்குற்ற தோழராகிய இரண்டொரு சகபாடிகளோடு மட்டும் பூராக் காலத்தையும் போக்கி வருவார். தேகப் பயிற்சியில் இவர் குழந்தை முதலே லக்ஷியமில்லாதவர்; ஒழிந்த நேரமெல்லாம் ஜனப் பழக்கம் குறைந்த கோவில் மூலைகளிலும், தோட்டங்களிலும், குளக்கரைகளிலுமே, தனித்தும், தம் உற்ற தோழரோடும் கழித்துவந்தார்; ராமாயணம், பாரதம் முதலிய இதிகாசக் கதைகளில் அதிகப் பிரேமையுள்ளவர். இவ்விதம் பதினைந்தாம் ஆண்டு வரையில் இவர் காலம் எட்டையபுரத்தில் கழிந்தது.

1897-ம் வருஷம், ஆனி பதினைந்தில் கடையத்தில் பாரதியாருக்கும் ஸ்ரீ செல்லப்பா அய்யரவர்கள் குமாரத்தி ஸ்ரீமதி செல்லம்மாவுக்கும் விவாகம் நடந்தது. அங்கு வந்திருந்த அரிகேசவநல்லூர் முதலிய பலவூர்த் தமிழ் வித்துவான்களும் இவர் புலமை கண்டு அளவற்ற சந்தோஷ மடைந்தார்கள். விவாகமான மறு வருஷமே இவர் தந்தையார் தேகவியோகமானர். அதன் பயனாகப் பாரதியார் 1898-ம் வருஷம் காசிவாசியாக நேர்ந்தது. இடையில் திருநெல்வேலியில் ஹிந்து கலாசாலையில் சுமார் மூன்று வருஷம் இவர் மாணாக்கராக இருந்தார்; அப்பொழுது ஏற்பட்டிருந்த வகுப்பு முறைப்படி மூன்று முதல் ஐந்து பாரம் வரையில் அக் கலாசாலையில் படித்தார். அக்காலத்தில் கலாசாலைத் தமிழாசிரியருடனும், காலஞ்சென்ற ஸ்ரீ நெல்லையப்பன் கவிராயரவர்கள் வீட்டில் ஓயாது கூடும் வித்துவான்களுடனும் இவர் இட்ட தமிழ்ப் போர்களின் தொகைக்கு அளவில்லை. இவர் சல்லாபத்தை மிகவும் விரும்பிய கவிராயரவர்கள் இவரை மிகவும் பரிவாக ஆதரித்து வந்தார்கள். அந்தக் காலங்களில் இவருடைய அருமையான கவிதா சக்தியையும், மாற்றலரை வாயடக்கும் புத்திக் கூர்மையையும், பேச்சு வன்மையையும் காட்டக் கூடிய கதைகள் பலவுண்டு. ஒரு சந்தர்ப்பத்தில் எதிர்பாராத வண்ணம் இவர்

தம்மை ஏளனம் பண்ணிய வயது முதிர்ந்த ஒரு தமிழ் வாணரைத் தலை குனியச் செய்தார். அது வருமாறு:-

யப். ஏ. பிரதம (ஸீனியர்) வகுப்பில் படித்துக்கொண் டிருந்தவரும், தமிழ்ப் பழக்கமுள்ள சோணசலம்பிள்ளை யவர்கள் குமாரருமாகிய காந்திமதிநாத பிள்ளை என்றவர் கள், முருகதாச சுவாமிகளின் பழக்கமுள்ளவர்களும், விசேஷமாகத் தமிழ்ப் பயிற்சி யுள்ளவர்களுமா யிருந்தார் கள். அதுபற்றி அடிக்கடி பாரதியாரும் நானும் அவர்கள் வீட்டிற்குப் போவதுண்டு. ஒரு சமயம், பலர் கூடியிருக்கும் பொழுது, கூடியவர்கள் எல்லாருள்ளும் இளைஞரான பாரதி யாரை அடக்க நினைத்துக் காந்திமதிநாத பிள்ளை யவர்கள், "பாரதி சின்னப் பயல்" என்ற கடையடியைக் கொடுத்து, அதை வைத்து ஒரு வெண்பாவைப் பூர்த்தி செய்யும்படி நமது புலவரைக் கேட்டார். அவர் சொல்லி வாய் மூடு முன், கேட்டவர் வியக்க, காந்திமதிநாதபிள்ளை தலை குனிய, அங் குள்ள யாவரும் இவர் என்ன சொல்லப்போகிறரென்று யோசித்துக்கொண்டிருக்கும்போதே, தமக்குக் கொடுத்த அடியைக் கடையடியாக வைத்து, வெண்பாவைப் பூர்த்தி பண்ணினர் பாரதியார். அதன் மூன்ருமடியின் இறுதியை, 'காந்திமதி நாதனை' என்று வைத்து,

"...............காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயன்"

என்று பாட்டை முடித்தார். அனைவரும் அதிக ஆச்சரிய மடைந்தார்கள். இப்படியே பல சமயங்களிலும் தம்மோ டெதிர்த்த புலவர்களை இவர் அதி சமர்த்தாய் அடக்கிய சந்தர்ப்பங்களெல்லாம் இவருடைய ஆச்சரிய புத்தியையும், தமிழ்த் திறத்தையும் நன்கு விளக்கக்கூடியவை.

தந்தையார் இறந்த பிறகு, பாரதியார், தமக்கு ஆதரவும் துணையும் இல்லாமல், தம் தகப்பனருடன் பிறந்த அத்தை யார் அழைக்க, 1901-ம் வருஷம் காசிக்குப் போனர்; அங்கே ஒரே வருஷம் இருந்தார்; அலகாபாத் சர்வகலாசாலையில் தமிழ்ப்பாடம் இல்லாமைபற்றி, அங்கே இவர் ஸம்ஸ்கிருதம்

புதிதாக எடுத்துப் படிக்க நேர்ந்தும், அந்த ஒரு வருஷத்தி லேயே மேற்படி சர்வகலாசாலையில் பிரவேசப் பரீக்ஷைக்கு ஆஜராய், முதல் வகுப்பில் தேறினர். சில அசௌகரியங்க ளால் இவர் அங்கிருந்து மேற்படிக்க முடியாமல், திரும்ப எட் டையபுரத்துக்கு வர நேர்ந்தது. வந்த பிறகு, 1904-ம் வரு ஷம் வரை, கலாசாலையில் சென்று படிக்க மார்க்கமின்றி, அப்பொழுது எட்டையபுரத்தில் யுவராஜாவாயிருந்த அரச வித்துவானிடம் தமிழ்ச் சல்லாபம் செய்தும், அரண்மனையில் அபிமானித்துக் கொடுத்துவந்த சொற்பப் பணத்தைக் கொண்டு காலம் கழித்தும் வந்தார். அக்காலங்களில் எட்டையபுரம் சமஸ்தானதிபதியின்மேலும், அவர்கள் முன் கூடும் புலவர் சபைகளில் எழும் போட்டி காரணமாகப் பல வேறு விஷயங்களைப்பற்றியும், பாரதியார் பாடிய பாடல் களுக்கு அளவில்லை. முக்கியமாக ஒரு சந்தர்ப்பத்தை நான் மறக்க முடியவில்லை.

ஒருநாள் காலையில், சில புலவர்கள், "பாரதியார், விழு மிய கருத்துக்களடங்கிய தமிழ்க் கவிகளைப் புலவர்கள் மெச்ச விரைவாக இயற்றினலும், அண்ணாமலை ரெட்டியாரைப் போலப் பாமரரும் ரசிக்கும்படியாகச் சங்கீதஅமைப்புடன் சிந்துகள் முதலிய இசைத் தமிழ்ப்பாக்களை இயற்ற முடி யாது" என்று சொன்னார்கள். அப்பொழுது, அரசரும் அதை ஆமோதித்து, "தமிழுலகிலேயே அண்ணாமலை ரெட்டியாரைப்போல இனி யாரும் கவி சொல்ல முடியாது" என்று கூறினர்கள். அதைக் கேட்ட நமது வரகவிஞர் சிரித் தார். உடனே அந்தச் சபையார், "இவர் ரெட்டியாரைப் போலக் கவி சொல்ல முடியுமானல் செய்து காட்டுவதன்றி, வீணாகச் சிரிப்பது பெருமையில்லை" என்று ஏளனம் பண் ணினர்கள். பாரதியார், அன்றே ஒரு சிந்து இயற்றிக் கொண்டுவருவதாகச் சொல்லி, விடைபெற்று, வீடுசென்றார். அன்று மாலை, பாரதியார் அரண்மனைக்குப் போன பொழுது, வித்துவான்கள் ஒருவரும் வரவில்லை. ஆனல், இவர் தாம் பாடிக்கொண்டுவந்த பாடலை அரசர் முன்

சமர்ப்பித்தார். உடனே ஆளனுப்பிப் புலவர்கள் அழைக்கப் பட்டார்கள். வந்தவர்கள், பாரதியார் காலையில் சொன்னபோது விளையாட்டுப் பேச்சாக நினைத்தது மன்றி குறைந்தது ஒரு வாரத்திற்குள் யாராலும் எவ்வித நூலும் செய்ய இயலாதென்று நினைத்ததனுல் திரும்பத் தாங்கள் வரவில்லையென்று சொன்னுர்கள். அப்போது நமது பாரதியாரின் சிந்து படிக்கப்பட்டது. அது அச்சாகாததால் அனேகர் அதனைக் கேட்டிருக்கமாட்டார்கள். அந்தச் சிந்தைப் படிக்கக்கேட்டவர்கள் ஒரே அபிப்பிராயந்தான் சொன்னுர்கள். "ரெட்டியார் காவடிச்சிந்து பாமரர் பாட்டுத்தான்; ஆனல் பாரதியார் சிந்தோ அதன் சுவைகள் ஒன்றும் குறையாத, மிக மேன்மையான ஒரு தமிழ்ப் புலவரின் பாட்டு" என்று எல்லோரும் நமது பாரதியாரை மெச்சி வாயாரப் புகழ்ந்தார்கள்.

1904-ம் வருஷத்தில் பாரதியார் எட்டையபுரம் அரசருடன் சிறிது ஒற்றுமை குறைந்து, ஊரையும் உற்ருரையும் விட்டு வெளியேறக் கருதி மதுரைக்குச் சென்ருர்; அங்கே சுமார் மூன்று மாத காலம் சேதுபதி உயர்தர வித்தியாசாலையில் தமிழ்ப்பண்டிதராயிருந்தார்; பின் சென்னைக்குச் சென்ருர்; அங்கே, 'சுதேசமித்திரன்' உதவிப் பத்திராசிரியராயிருந்தும், 'பாலபாரதம்,' 'இந்தியா' முதலிய தேசீயப் பத்திரிகைகளுக்குத் தாமே அதிபரும் ஆசிரியருமாயிருந்து மிகவும் செவ்வை பெற அவற்றை நடத்தித் தமிழ் நாட்டில் தேச உணர்ச்சியையும் ஒரு புது ஆதர்சத்தையும் முதன் முதல் உண்டுபண்ணித் தேசபக்தராய் விளங்கியதும், அதியற்புதமான தேசப்பாட்டுக்களை இயற்றி வெளியிட்டுப் புகழ் நிரப்பியதும் யாவரும் அறிந்த விஷயம். ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை யவர்கள் சிறையிடப்பட்டபோது நம் பாரதியார் அவர்களுக்கும் கலெக்டருக்கும் நடந்த சம்வாதமாகச் சில புதிய கருத்துக்களுடன் கீர்த்தனைகள் இயற்றித் தமிழ்மக்கள் மனதில் தூங்கிய ஒற்றுமையுணர்ச்சியையும், தேச நேசத்தையும் உயிர்ப்பித்து எழுப்பி உலவச்செய்தது உலகம் அறியும்.

"ஜன்மபூமி" முதலிய சில வெளியில் வந்த பாட்டுக்களேயன்றி அச்சேருமல் இவர் பாடிப் பயின்று பரவப் பெற்ற பலதேசப் பாட்டுக்களும், தமிழில் ஒரு புது நடையும் புதிய ஆவேசமும் உருவெடுக்கச் செய்தன. ஆயிரக்கணக்கான இளைஞரும், மாணக்கரும் இவர் பாட்டுக்களையே பாடத் தலைப்பட்டனர். இவரது தேசாவேச ஓசை தமிழ் நாட்டில் ஆரம்பித்த போது, தேச பக்தி தமிழ் மக்களாலேயே அவமதிக்கப்பட்டதா யிருந்தது. 1908-ம் வருஷம் பிறந்த அரசாங்கத்தாரின் வெறியாட்டின் பயனாக அநேகர் சிறைப்பட நேர்ந்தது கண்டு, பாரதியார், தமக்கும் சிறை வாசம் நேருமென்றஞ்சிப் புதுச்சேரிக்குப் போயினர். அங்கே பத்து வருஷம் அரணில்லாது தாமே சுமத்திக் கொண்ட சிறையில் விலங்கற்ற கைதியாய், வறுமை, நோய் முதலிய துன்பங்களுக்காளாய், வெளியில் புகழ்பவரன்றி, நெஞ்சில் நேசிப்பாரும், ஆதரத்துடன் ஆதரிப்பாரும் இன்றிப் பலவாறு வருந்தினர். துன்பம் நிறைந்த இக்காலத்தில்தான் இவர் அளவற்ற நூல்களை இயற்றிக் குவித்து வைத்தார்; அவைகளேயன்றி அழகிய வசன நூல்களும், சிறு கதைகளும் பல செய்துள்ளார். இவர் வசன நடை எளிதில் யாவரும் உணர ஒழுகுவதுடன், இனிய எளிய நடையாயும், வடித்த சுவை நிறைந்தும், யாப்பற்ற கவிகளென்று சொல்லும்படி அதி மாதுர்யமாயு மிருக்கும். ரவீந்திர நாதரின் சிறு கதைகளுக்கு இவர் செய்துள்ள தமிழ் மொழி பெயர்ப்பு, படிக்கும்போது, மொழிபெயர்ப்பாய்க் காணமல், தானே முதனூலும், ரவீந்திரர் ஆங்கிலமே மொழிபெயர்ப்பாயும் தோற்றும்படி அத்துணை அழகு பெற்று அமைந்துள்ளது. இவரது "ஞானரதம்" என்னும் வசன நூலைப் படித்தவர்களுக்குத் தமிழ் நடையில் இவருக்குள்ள ஆதிக்கமும், நடைச்சிற்பத்திறமும் இனிது விளங்கும். கடைசியாக, 1918-ம் வருஷம் இவர் தாமாகப் புதுச்சேரிக்குப் போனது போலவே, அங்கிருந்தும் தாமாகவே வெளியேறினர். எல்லை கடந்ததும், இவரைப் போலீஸார் கூடலூரில் பிடித்துக் கைதி

யாக்கினர்; ஆனல் யாதொரு குற்றமும் இவர்மேல் வெளியாகாத நிலையில் விரைவில் விடுதலை செய்யப்பட்டு மனைவி மக்களுடன் இவர் கடையம் சென்றார். கடையத்திற்கு வந்தது முதலே இவரது உடல் நிலை இவரது நண்பர்களுக்கு மிகுந்த வருத்தத்தை விளைத்தது. இவர் மிக மெலிந்து, வலி குறைந்து, நைந்த உருவத்தோடு மனவலியும் எய்த்து வருவது நாள் தோறும் சிநேகிதர்களுக்குச் கவலை தந்தது.

இறுதியாக, மறுபடியும் இவர் 1920-ம் வருஷத்தில் சென்னைக்குச் சென்று, 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு மீண்டும் துணையாசிரியராய் அமர்ந்தார். பத்திரிகையில் இவர் பாக்களும், தேசீய வியாசங்களும் அடிக்கடி வெளி வந்ததை அனைவரும் அறிவர். ஆனல், நாள்தோறும இவர் தேகபலம் குறைந்துகொண்டே வந்து, கடைசியாக, 1921-ம் வருஷம் செப்டம்பர் மாதம், 11உ, சென்னை, திருவல்லிக் கேணியில் இவர் உயிர்துறந்தார். இனி எவ்விதத்திலும் இவர் உதவி வேண்டாதா ராயினவுடன் இவர் இருக்கும் வரை இவரை அலக்ஷியஞ்செய்த தமிழுலகம் திடீரென்று இவர் புகழில் மோகமுற்று மூழ்கியிருக்கிறது.

இவருடன் நெருங்கிப் பழகாதவர்கள் இவர் இயற் பெருமையை அறிவது அருமை. இவர் இயற்கை யழகிலும், பௌதிக அமைப்புக்களிலும் மிகவும் ஈடுபட்ட மனமுடையவர்; சிவந்து மலர்ந்த பொன் பொதிந்த மாலை ஞாயிற்றைக் கண்டு மகிழ்வதிலும், அழகிய மனோகரமான மலைத் தோற்றங்களிலும் நெடிது நேரம் தமது மனதை இழந்து அவசமாகி அநுபவித்து நிற்பதைக் கண்டிருக்கிறேன். இவர் எல்லா உயிர்களிடத்திலும் ஒப்ப நிரம்பிய இரக்கமுடையவர்; சர்வ ஜந்துக்களுக்கும் சிநேகிதர். சமீபத்தில் சென்னையில் யானைக்குப் பழமருத்தப் போய் மிதியுண்டு பல நாள் வருந்தியது பத்திரிகை படிக்கும் பலருக்கும் தெரியும். இவர் தமக்குச் சர்வ ஜீவராசிகளோடும் பகையற்ற நேசமுண்டென்று வற்புறுத்தி வாதிக்கக் கேட்டிருக்கிறேன். பாம்பும், புலியும், தன்னையொத்த விரிந்த மனதுடன் நேசிப்ப

வரைப் பகையாதென்றும், எல்லோரும் இறவாதிருக்க முடியுமென்றும், தேச கால வர்த்தமானங்களால் வேறுபாடு கிடையாதென்றும், உலக முழுதும் ஒரு குலமேயென்றும், இக்கருத்துக்கள் கேவலம் விவகார திசையில் விசாரிக்கப்படுவது பிரயோஜனமில்லையென்றும், தற்போதத்தால் அவைகளின் உண்மையையறிந்து அநுபவிப்பதே அறிவுடைமைக்கு அழகென்றும், தம் உற்ற தோழருக்கு ஓயாது உபதேசிப்பார். நமது உபநிடதங்களில் ஒப்பற்ற நம்பிக்கையும் வியப்பும் கொண்ட இவர், உலகத்திலுள்ள சகல மதங்களிலும் சம திருஷ்டியும், ஒத்த மதிப்பும் உடையவராயிருந்தார். ஜாதி, மத பேதங்கள் இவர் அகராதியில் அர்த்தமற்ற சொற்கள். இவர் மற்றவர்களைப் போல் ஆசார சீர்திருத்த சம்பந்தமாய்க் கேவலம் புகழுக்காகப் பிரசங்கம் பண்ணித் திரிகிறவரல்லர்; எப்போதும் எந்த விஷயத்தையும் ஆழச் சிந்திப்பார்; சிந்தித்துக் கண்ட முடிவில் துணிவு கொள்ளுவார்; துணிந்த வழி, என்றும், யாண்டும் ஒழுக முயல்வார். இதுவே இவரது இயல்பு. சாந்தமும் மோனமும் பெரும்பாலும் இவர் விரும்பிக் கையாண்ட குணங்கள்.

பாரதியார், சங்கீதத்திலும் நல்ல ஞானமுள்ளவர். அதனால் இவர் கவிகள் இனிய இசையில் பாட அமைக்கப்பட்டன. இவரது குணங்களில் பலமுறை இவர் அன்பர்களை அலமறச் செய்தது, இவர் தந்நல மறதி. பிறர்க்கன்றித் தமக்குழையாத் துறவி இவர்; பத்து நாள் பட்டினிக்குப் பின், பத்து ரூபாய் கிடைத்தாலும், பணம் கையில் இருக்கும்பொழுது, குறை சொல்லி இரப்பாரைக் கண்டால், உள்ளதை அப்படியே கொடுத்துவிட்டு, பழம பட்டினி விரதத்தைச் சிரமமின்றி மேற்கொள்வர்; பெரியோர், சிறியோர் என்ற வேறுபாடின்றி வருத்தமுறும் யாரிடத்தும் அளவற்ற அநுதாபம் காட்டுவர்; கடன் வாங்கியும் பிறர் நோயகற்ற விரைகுவார். உள்ள உடைகளையும் கொடுத்துவிட்டு, உடுத்த வழியின்றிப் பல் காலும் இடர்ப்படுவார்; பைசாக்கள் முயற்கொம்பாயிருக்கும்

பொழுது நூற்றுக்கணக்காகப் பிறர்க்களிக்கப் பரபரப்பார். தம் மனைவி, மக்கள், மற்றவர்களைவிடத் தம் ஆதரவுக்கு அதிக உரிமை யுடையவர்கள் என்பது இவர் அறியாத பாடம். இந்தக் குணமேலீட்டால் பல அவசரங்களில் இவர் பட்ட பாடுகளை அறிந்த பலரும் இவரைப் பித்தரென்று கூசாமல் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால், இவர் தமக்கு மிக அவசியமான சமயத்தில் இவருக்கு உதவக் கடமைப் பட்ட சிலரும், இவர் உதவியால் நலமடைந்த சிலரும், இவரைப் புறக்கணித்து, இவர் வருத்தமுற்றபோதும்கூட இவர் தம் ஔதாரியத்தையும், தந்நல மறுப்பையும் ஒருகாலும் வெறுத்ததில்லை.

தமிழர் மறந்தாலும் தமிழ் மறவாத இப்புலவர் பெருமான் பாக்கள் என்றும் இறவாது நின்று நிலவும். இவர் மூட்டிய தேச நேச நெருப்பு, அவியாது வளர்ந்து தமிழக முழுதும் இருளகற்றி ஒளிரச்செய்து நிற்கும் ஜோதியாய் விட்டது. மகா மகோபாத்தியாய சாமிநாத ஐயரவர்களுக்கு அப் பட்டம் கிடைத்ததற்காக விழவெடுத்த சென்னைச் சபை யொன்றில், என் வேண்டுகோளுக்காக இவர் உடனே பாடிப் படித்த மறக்கொணக் கவிகளின் கருத்துகளைக் கொண்டே, 'இவரைத் தமிழகம் அநாதரவு செய்தது இவர்க்குக் குறையுமில்லை; தமிழர்க்குப் புதுமையுமில்லை' என்று சமாதானப்படுத்திக் கொள்ளுகிறேன். புதுச் சிறு விளக்குகளைக் கண்டு அதிசயிக்கும் மாந்தர், செம்பரிதி யொளி கண்டு புகழ்வதில்லை. சிற்றுண்டிச் சுவைக்கு மகிழ்பவர் அமிர்தம் சிறந்த உருசியுடையதென்று அதிசயிப்பதில்லை. வெயிலிடுவது பரிதிக்கும், சுவையினல் உயர்வது அமிர்தத்துக்கும் இயற்கையாகி, அவைகள் அந்தந்தக் குணத்தில் ஒப்பற்று உயர்ந்திருப்பதால், அது கண்டு ஒருவரும் வியப்பதில்லை. சிறிது குறைந்த உயர்வளவில்மட்டே மாந்தர் கண்டு வியந்து நயப்பது வழக்கம். சாமானியமாகப் பரிசுக்குப் பாடாமலும், பணமுடையோர் குற்றங்களை மறைத்துப் பொய்யாகப் புகழாமலும், உண்மையில் வாழ்ந்த இவ்வுயர்

புலவரை, அளப்பரிய அவர் தலைமைப் புலமைப் பெருமித மிகுதியால் மட்டுமே நமது உலகம் அறிய முடியாதாயிற்று போலும்.

பாரதியார், ஏனைப் புலவர் போலாது, புது முறைகளையே சிருட்டித்தார். தமிழ் மொழியில் பாக்களும் பாவினங்களும் மலிந்து கிடந்தும், அவைகளை விட்டுப் புதுக் கருத்துக்களும், புதிய உணர்ச்சிகளும் மலிந்து விளங்க, அவைகளுக்குப் பொருத்தமான புதிய நடைகளையும், புதிய யாப்புக்களையும் உண்டுபண்ணி யிருக்கிறார். அநாயாசமாய் இயற்கைத் தன்மைகளிலிருந்து உருவகங்கள் உண்டுபண்ணிக் கையாளுவதும், எளிய உவமைகளால் பெரிய விஷயங்களை விளக்கத் துணியும் தனித் திறலும், முன்னைய புலவரிடத்தில்லாத இவரது அரிய குணங்கள். வாய்மை, வீரம், பெண்களைப் பேணல், எளியாரை ஏற்றல், ஓரமில்லா ஒற்றுமை யுணர்ச்சி, சுதந்திரம் முதலிய இவர் பாராட்டிப் பாடிய பல குணங்களும் இவர்க்கு இயல்பானவை. இவையெல்லாம் இவர் பாக்களில் இனிது காணலாம். இவரது கண்ணன் பாட்டையும், பாஞ்சாலி சபதத்தையும் படித்தவர்களுக்கு இவரது குணங்களும் திறமையும் விசதமாகும். இவரை உள்ளபடி அறிய விரும்புவோர்க்கு, இவர் கவிகளைவிடச் சிறந்த கருவி கிடையாது. ஆதலால், இவர் நூல்களைப் படித்து நடுநிலையில் சிந்திப்பார்க்கு, உள்ளத்தனையது இவர் உயர்வு என்பது தெளிவாகும்.

---

2. விளை பொருள்கள்

[ஜே. எஸ். பொன்னையா, எம். ஏ.]

இயற்கை வளம் நிரம்பியிருப்பதால் நமது தேசம் பயிர்த் தொழில் செய்வதற்கு மிகவும் தகுதியுள்ளதாயிருக் கிறது. ஆயினும், நம் தேச மக்கள் தமக்கு வேண்டிய உண வுப் பொருள்களையுங்கூடப் போதிய அளவில் விளைவிக்க இயலாதவராய் இருக்கின்றனர். இவ் வுண்மையைக் கீழ் வரும் உதாரணங்களால் விளக்கிக் காட்டுவோம்.

பண்படும் நிலம்:—நமது தேசத்தின் மொத்த விஸ் தீரணம் 18 லக்ஷம் சதுர மைல். ஆனல், மேற்பரப்பில் மலைகள், குன்றுகள், நதிகள், காடுகள் நீங்கலாகப் பயிர்த் தொழிலுக்குத் தகுதியான நிலம் நூற்றுக்கு 35 பாகந் தான். இதில் 34 பாகம் இப்பொழுது பண் படுத்தப்பட் டுள்ளதாகவும், எஞ்சிய ஒரு பாகமே எவ்வித வேளாண்மைக் குந் தகுதியற்றிருப்பதாகவுங் கூறுகின்றனர். பண்பட்ட நிலப்பரப்புக் கணக்கின்படி இந்நாட்டை வேளாண்மையிற் சிறந்ததெனக் கொள்ளலாம்.

உணவுப் பொருள்களே முக்கிய விளைவு:—பண்படும் நிலத் தின் மொத்தப் பரப்பு சுமார் 25 கோடி ஏக்கர் ஆகும். ஆயினும், இம் மொத்த நிலத்தின் சுமார் 20 கோடி ஏக்க ரில் (நூற்றுக்கு எண்பது பாகம் 80%) நாம் விளைவிப்பது உணவுப் பொருள்களே. எனினும், நாம் விளைவிக்கிற உண வுப் பொருள்கள் நமது முப்பத்தைந்து கோடி மக்களுக்கும் போதுமான அளவில் இல்லை. நமது தேசத்திற் பெரும் பான்மையான ஏழை மக்களுக்கு வயிரூர உண்ணக் கூழ் கூடக் கிடைப்பதில்லை. ஐந்திலொரு பகுதியினருக்கு ஒரு வேளை யுணவே வயிரூரக் கிடைக்கின்றதெனச் சிலர் கூறு வர். இவ்வளவு நீர் வளமும் நில வளமும் நிரம்பிய இந்நாட் டில் இவ் விருபதாம் நூற்றூண்டிலும் தேச மக்களுக்கேனும் போதிய அளவில் நாம் உணவுப் பொருள்களை விளைவிக்க

முடியாவிட்டால், இத்தேசத்தை வேளாண்மையிற் சிறந்த தெனக் கூறுவது பொருந்துமோ ?

நெல்:—நமது உணவுப் பொருள்களாகிய விளைபொருள் களில் தலை சிறந்து விளங்குவது நெல். ஏனெனில், நமது தேச வாசிகளுக்கு முக்கிய உணவு அரிசியே. பயிர்த்தொழில் செய்தற்கேற்ற நிலத்தில் மூன்றில் ஒரு பங்கில் (82 கோடி ஏக்கர்) நாம் நெல் விளைவிக்கிறோம். மாகாணவாரியாக நெல் விளைவிக்கப்படும் நிலப் பரப்பின் இலக்கக் கணக்கு (Statistics) பின் வருமாறு:—வங்காளத்தில் நூற்றுக்கு 78 பாகத்திலும், பர்மாவில் நூற்றுக்கு 71 பாகத்திலும், அஸாமில் நூற்றுக்கு 70 பாகத்திலும், பீகாரில் நூற்றுக்கு 46 பாகத்திலும், சென்னையில் நூற்றுக்கு 32 பாகத்திலும் (இதர மாகாணங்களில் சிறிது சிறிது குறைவாகவும்) நெல் விளைவிக்கப்படுகிறது. நெல் விளைவின் மொத்த அளவு சுமார் மூன்றரைக்கோடி டன்கள். இவற்றுள் சுமார் பத்தில் ஒன்பது பாகம் உள் நாட்டில் செலவழிந்து விடுகிறது. எஞ்சிய ஒரு பாகம் மட்டுமே வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி யாக்கப்படுகிறது. ஆனால், 1929-ம் வருடத்திலிருந்து நெல் விளைவு குறைந்ததனால் நமது நெல் ஏற்றுமதி குறைந்துகொண்டு வருகிறது. அன்றியும, பிற நாடுகளிலிருந்து இந்நாட்டுக்கு நெல் மிகுதியான அளவில் இறக்குமதியுஞ் செய்யப்படுகிறது.

மேலும், நாம் ஒரு ஏகரில் விளைவிக்கும் அளவைக்காட்டிலும், ஜப்பானியர் இரண்டரை மடங்கு அதிகமாக நெல் விளைவிக்கின்றனர். 1933-ல் ஜப்பானில் நெற்பயிர் செய்யப் பட்ட நிலப்பரப்பு நூற்றுக்கு $2\frac{1}{2}$ வீதம் குறைக்கப்பட்டது; ஆயினும், விளைவோ நூற்றுக்குப் பதினைன்கு வீதம் அதிகப் பட்டது. 1933-ம் ஷு, நவம்பர் மாதத்திலிருந்து 1934 ஆம் ஷு, அக்டோபர் மீ வரை, $6\frac{1}{2}$ கோடி ஜப்பானியரும், தாம் தலைக்கு சுமார் 21 படி அரிசி அதிகமாக உண்டது போகச் சுமார் 5 கோடி படி அரிசியை ஏற்றுமதி செய்வர் என்பதாக ஜப்பானிய அரசாங்கத்தார் கணக்கிட்

டிருக்கிறார்கள். நமது விளைவு குன்றியும், பிற நாட்டார் விளைவு மிகுந்தும் இருப்பதால், ஜப்பானிலிருந்தும், சயாம் **(Siam)**, இந்து—சீனா **(Indo-China)** முதலிய நாடுகளிலிருந்தும் கப்பல் கப்பலாக நெல் எல்லாத் தேசங்களுக்கும்—நமது தேசத்திற்கும்—ஏற்றுமதி யாகிறது. வளம் நிரம்பிய ஏழை இந்தியாவில் நெல் விளைவு ஓங்கும் நாள் எந்நாள்?

வேறு தானியங்கள்:—நெல்லுக்குப் பின் எண்ணப்படும் முக்கிய உணவுப் பொருள்கள், சோளம், கேழ்வரகு, பயறு வகைகள் **(pulses)** முதலானவை. இந்தத் தானியங்கள் சுமார் $12\frac{1}{2}$ கோடி ஏக்கர் நிலங்களில் (பண்படும் மொத்த நிலத்தில் நேர்பாதி) எல்லா மாகாணங்களிலும் விளைவிக்கப்படுகின்றன. இவை ஏழை மக்களின் உணவாக உள்நாட்டிலேயே செலவழிந்துவிடுகின்றன; இவற்றில் எவ்விதமான ஏற்றுமதியும் கிடையாது.

கோதுமை:—சோளம், கேழ்வரகு நெல் போன்ற வேறொரு முக்கிய உணவுப் பொருள் கோதுமை. இது பஞ்சாபிலும், ஐக்கிய மாகாணங்களிலும், பீகார் மாகாணத்திலும் பெரும்பான்மையாக உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் சாகுபடியாகும் மொத்த நிலத்தில் எட்டி லொருபங்கில் (3·2 கோடி ஏக்கர்) கோதுமை பயிராகிறது. மொத்த விளைவு ஒரு கோடி டன் நிறை; இதில் ஏற்றுமதியாக்கப்படுவது ஏழில் ஒரு பாகம். கோதுமை விளைவிக்கும் தேசங்களில் ருஷியா முதன்மையாகவும், அமெரிக்கா இரண்டாவதாகவும், இந்தியா மூன்றாவதாகவும், கானடா நான்காவதாகவும் விளங்குகின்றன. கோதுமை விளைவிப்பதில் இந்தியா மூன்றாவதாக நிற்பது பற்றி நாம் இறுமாந்துவிட நிமித்தம் இல்லை. ஏனெனில், வருடா வருடம் நமது தேசத்திற்குள் அந்நிய நாட்டுக் கோதுமை இறக்குமதி அதிகரித்துக்கொண்டு வருகிறது.

சர்க்கரை:—இனி, நெல், கோதுமை என்பவற்றைப் போல முக்கியப் பொருளான சர்க்கரையைப் பற்றிச் சிறிது கூறவேண்டுவது அவசியம். உலக முழுவதிலும்

கரும்பு சாகுபடியாகும் நிலத்தில் நேர்பாதி இந்தியாவில் உண்டு; எனினும், நாம் விளைவிக்கும் சர்க்கரையின் அளவோ உலக உற்பத்தியில் நாலில் ஒரு பங்குதான்; ஏனெனில், நாம் ஒரு ஏக்கர் நிலத்தில் விளைவிப்பதைவிட கியூபாவில் (**Cuba**) மும்மடங்கும், ஜாவாவில் (**Java**) அறு மடங்கும், ஹாவோயில் (**Howail**) ஏழு மடங்கும் ஆக விளைவிக்கின்றனர். அன்றியும், 1928-ல் இந்தியாவிற்குள் 15 கோடி ரூபாய் மதிப்புடைய சர்க்கரை இறக்குமதி செய்யப்பட்டது. சர்க்கரைக்கும், நெல்லுக்கும், உப்புக்கும், அந்நிய நாடுகளைச் சார்ந்து வாழும் தேசத்தை வேளாண்மையிற் சிறந்தது எனச் சொல்வது எங்ஙனம்?

சில இறக்குமதி உணவுப் பொருள்கள் :—இன்னும் சற்று உற்றுராய்ந்தால், மற்ற நாட்டினரைப்போல் நாம் ஆடுமாடுகளை வளர்த்து அவைகளின் பாலையாவது, இறைச்சியையாவது வயிறுர உண்பதில்லை; அவற்றில் ஏற்றுமதி வர்த்தகஞ் செய்வதும் இல்லை. ஆனல், நாம் அந்நிய நாடுகளிலிருந்து மிகுதியான அளவில் பாற்கட்டிகளையும், புட்டிப் பாலையும் இறக்குமதி செய்கின்றோம். நமது தேசத்தில் எல்லாவிதமான பழங்களையும் எந்த அளவிலும் உற்பத்தி செய்யலாம்; ஆனல், நமது பயிர்த்தொழிலாளிகளோ அங்ஙனம் செய்கின்றுரில்லை. பொது ஜனங்களுக்குப் பழ உணவே கிடைப்பதரிது; ஆனல், ஆஸ்திரேலியாவிலிருந்து பழங்களும் (**fresh fruits**), இங்கிலாந்து முதலான தேசங்களிலிருந்து பழமுறப்பாவும் (**jam**) இத்தேசத்திற்குள் இறக்குமதியாகின்றன.

இனி, கைத்தொழில்களுக்காதாரமான மூலப்பொருள்களை (**raw materials**) உற்பத்தியாக்குவதில் நமது தாளாண்மையின் இயல்பு எவ்வாறெனை ஆராய்வாம்.

நாம் முற்கூறியபடி உணவுப்பொருள்களல்லாத பிற விளைபொருள்களை (**non-food crops**) விளைவிக்கும் நிலம் மிகக்குறைவே. பண்படும் மொத்த நிலம் 25 கோடி ஏக்கரில் 21 கோடி ஏக்கரில் உணவுப் பொருள்களையும், எஞ்சிய

4 கோடி ஏக்கரில் மட்டுமே பிற விளை பொருள்களையும் நாம் விளைவிக்கிறோம். பனி நீரிற் கப்பலோட்ட இயலுமா? இவ்வளவு குறைந்த நிலத்திற் பிற விளை பொருள்களை விளைவித்து நமது தேச வியவசாயிகள் எங்ஙனம் பெருத்த இலாபத்தை அடைவர்?

பருத்தி :—கைத்தொழிலுக் கடிப்படையான மூலப் பொருள்களில் பருத்தி முதன்மை படைத்திருக்கிறது. நமது தேசத்தில் சாகுபடியான நிலத்தில் ஆறிலொரு பாகத்தில் பருத்தி விளைவிக்கப்படுகிறது. அதில் பாதிப் பாகம் பம்பாய் மாகாணத்திலும், பீகார் மாகாணத்திலும் அடங்கியிருக்கிறது; எஞ்சிய பாகம் சென்னை, பஞ்சாப், சிந்து, மத்திய ஐக்கிய மாகாணங்களில் இருக்கிறது.

நாம் விளைவிப்பதின் மொத்த அளவு சுமார் 65 லக்ஷம் கட்டுகள் (**bales of 400 lbs. each**) அதில் ஏறக்குறைய பாதி உள் நாட்டிற் செலவாகிறது; பாதி வெளி நாட்டிற்கு (முக்கியமாக ஜப்பான் தேசத்திற்கு) அனுப்பப்படுகிறது. 1929-ல் ஏற்றுமதியாக்கப்பட்ட பருத்தியின் மதிப்பு 65 கோடி ரூபாய்; ஆனால் விலைத் தாழ்ச்சியினால் அதன் மதிப்பு 1931-ல் $23\frac{1}{2}$ கோடி ரூபாய்க்குக் குறைந்துவிட்டது. 1932-ல் ஏற்றுமதியாக்கப்பட்ட பருத்தியின் அளவு நூற்றுக்கு 40 வீதம் குறைந்ததோடு விலைமதிப்பும் $20\frac{1}{3}$ கோடியாகக் குறைந்துவிட்டது. இந்தியாவின் மொத்தப் பருத்தி விளைவு அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இருந்தபோதிலும், பருத்தி ஏற்றுமதியினால் ஏழைக் குடிகளுக்குச் சிறிது பொருள் வருவாய் இருந்த போதிலும், நமது நாட்டில் பருத்தி விளைவு இன்னும் மத்திமமே. ஒரு ஏக்கர் நிலத்தில் விளையும் பருத்தி எகிப்தில் (**Egypt**) 300 முதல் 400 பவுண்டு (**lbs**.) நிறையும், அமெரிக்காவில் 200 முதல் 300 பவுண்டு நிறையும் ஆக இருக்கிறது; ஆனால் இந்தியாவிலோ அது 100 பவுண்டு நிறைதான். நல்ல வித்துக்களை உபயோகிப்பதனாலும், நிலங்களுக்கு மிகுதியாக எரு விடுவதனாலும், பருத்தி விளைவை நாம் இன்னும் அதிகப்படுத்தலாம். நமது

தேசத்தின் ஆலை நெசவுத்தொழிலும் (weaving industry) விருத்தியாகுமேல், நாம் இப்பொழுது ஏற்றுமதி செய்கிற பருத்தியை நமது நாட்டிலேயே உபயோகிக்கலாம்.

சணல் :—பருத்தி போன்ற வேருெரு பொருள் சணல். சணல் நூலைத் திரித்துக் கோணிகளும், பைகளும், கயிறுகளும் செய்யலாம். சணற் செடி கங்கை நதித் தீரங்களிலும், அஸாம் மாகாணத்திலும் அதிகமாகப் பயிராகிறது. மொத்த விளைவில் பாதிப்பாகம் கல்கத்தாவில் நிறுவப்பட்டிருக்கும் சணல் நூற்ருெழிற் சாலைகளில் உபயோகிக்கப் படுகிறது. அத்தொழிற் சாலைகளின் தொகை 97 ; அவைகளில் வேலை செய்யும் கூலி ஜனங்கள் $3\frac{1}{2}$ லக்ஷம் பேர்; உற்பத்தி செய்யப்படும் சணல் நூலில் மதிப்பு 30 கோடி ரூபாய்; மேலும் 30 கோடி ரூபாய் பெறுமான சணலும் (raw jute), சணல் நூலாற் செய்யப்பட்ட பொருள்களும் (jute manufactures), ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து ஜெர்மணி முதலிய தேசங்களுக்கு ஏற்றுமதியாக்கப்படுகின்றன. இந்தியாவைத் தவிர வேறெந்தத் தேசத்திலும் சணல் விளைவதில்லை; எனவே, நமது விவசாயிகளுக்கு (வங்காள, அஸாம் மாகாணத்தினருக்கு மட்டும்) இது மிகவும் இலாபகரமான விளைபொருளாகும்.

ஆனல், சணல் விளையும் இடங்களில் நளிர் சுரம் (malaria) பரவுகிறதென்றும், சணற் பயிரிடுவது நிலத்தின் உரத்தையும் வளத்தையும் கெடுக்கிற தென்றும், நெல் விளையும் இடத்தைக் குறைக்கிறதென்றும், இக்காரணங்களினல் சணல் விளைவிப்பது முடிவில் நஷ்டமே எனவுஞ் சிலர் கூறுவர். இது முழுதும் உண்மையன்று. ஏனெனில், இப்பொழுதுள்ள நிலையில் நமது வேளாண்மையின் பெருங்குறை நமது நிலத்தின் மிச்சமான பாகத்தை உணவுப் பொருள்களை விளைவிக்க உபயோகப்படுத்துவதே; கைத்தொழில்களுக் காதாரமான பிற விளைபொருள்களை விளைவிப்பதே இலாபகரமாக இருக்கும். நெல் விளையும் இடத்தை இன்னும் குறைத்து (ஆனல் விளைவை அதிகப்

படுத்தி) அதில் வேறு விளை பொருள்களை விளைவிப்பதே உசிதமான கொள்கையாம். எனவே, சணற் பயிரிடுவதனால் நமது தேசத்தினருக்கு நஷ்டமன்றென்று கொள்க.

ஆயினும், இப்பொழுது நிறுவப்பட்டுள்ள சணல் நூற்றொழிற் சாலைகளெல்லாம் ஆங்கிலேய முதலாளிகள் கையில் இருக்கின்றன; மூல தனமும் அவர்களுடையது; சணல், சணல் நூல் செய் பொருள்கள் ஆகிய இவற்றின் வர்த்தகத்தினாற் கிடைக்கும் இலாபத்திற் பெரும்பாகத்தையும் அவர்களே அடைகின்றனர். இவை வருந்தத்தக்க விஷயங்களாம். சணல் நூற் றொழிற்சாலைகளை இந்தியர் தம் ஆதீனத்திற்குக் கொண்டுவந்து, அவற்றைத் திறமையுடன் நடத்தி, அவற்றால் வியவசாயிகளுக்கு உயர்ந்த விலை கிடைக்கச் செய்வதே உயரிய கொள்கையாம்.

எண்ணெய் வித்துக்கள்:—பருத்தியுஞ் சணலும் போல இலாபமான வேறு விளை பொருள்களில், எள், நிலக்கடலை, யாளி விதை, ஆமணக்கு விதை முதலான எண்ணெய் வித்துக்கள் (oil seeds) மிகவும் விசேஷமானவை. பெரும்பாலும் விளக்கெரிப்பதற்கும் கறி சமைப்பதற்கும், மருந்து, வாசனைத் திரவியங்கள் செய்வதற்குமே எண்ணெய் வித்துக்கள் நமது தேசத்தில் உபயோகப்படுகின்றன; ஆனால், மேனாட்டார் நமது எண்ணெய் வித்துக்களை வாங்கிப் பற்பல விதமான கைத்தொழில்களில் உபயோகித்து வருகின்றனர். தேங்காய், நிலக்கடலை முதலானவற்றின் எண்ணெய், 'சோப்பு' (soap) செய்வதற்கும், ஆமணக்கெண்ணெய், ஆகாய விமானம் முதலான இயந்திர வண்டிகளுக்குக் குழை விடுவதற்கும் (lubricating) உபயோகப்படுகின்றன. இப்பொழுது 41 கோடி ரூபாய் மதிப்புள்ள எண்ணெய் வித்துக்கள் நமது தேசத்திலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

மேற் காட்டிய எண்ணெய் வித்துக்கள் சாதாரணமான நிலங்களில் மிகச் சொற்பச் செலவில் விளைவதனால், அவை வியவசாயிகளுக்கு நல்ல இலாபத்தை அளிக்கின்

றன. சென்னை மாகாணத்தில் நிலக்கடலையினால் இலாபம் அடைந்தவர் பலர். ஆனால், இவ்வித்துக்களை நமது நாட்டிலே உபயோகித்தாற்றான் நமக்கு இலாபம்; நிலத்தின் கொடுமையுங் குன்றாது. எண்ணெய் எடுக்கும்படியான ஆலைகளை நிறுவிப் பிண்ணாக்கை மாடுகளுக்கு ஊணாகவும், நிலங்களுக்கு எருவாகவும் ஆக்கி, எண்ணெயைச் 'சோப்பு' முதலிய வாசனைப் பொருள்களைச் செய்வதற்கு உபயோகிக்க வேண்டும். ஆலைத் தொழில்களினாற் பலருக்கு வேலையு மகப்படும். சென்னை மாகாணத்தில் தற்சமயம் சிறிதும் பெரிதுமான 13 எண்ணெய் ஆலைகள் (oil pressing factories) நிறுவப்பட்டுள்ளன. இவை இன்னும் விருத்தி யடைவதற்கும் இடமுண்டு.

தேயிலை, காப்பிக்கோட்டை, ரப்பர்:—நமது தேசத்தில் மலைப்பிரதேசங்களிற் பயிரிடப்படும் வேறு சில விளைபொருள்களும் உள்ளன. அஸாம், திருவாங்கூர், நீலகிரி, இலங்கை ஆகிய இந்நாடுகளிலுள்ள மலைகளில் தேயிலைச் செடி பயிரிடப்படுகிறது. நாம் உற்பத்தியாக்கும் தேயிலையிற் பாதிப்பாகம் அஸாம் மாகாணம் ஒன்றிலிருந்து மட்டுமே விளைவிக்கப்படுகிறது. மொத்த விளைவு 39 கோடி பவுண்டு நிறை; 1931-ல் ஏற்றுமதியான தேயிலையின் அளவு சுமார் 35 கோடி பவுண்டு நிறை; அதன் மதிப்பு 26 கோடி ரூபாய்.

தேயிலை விளைவிப்பது இலாபமே; அதனை ஏற்றுமதி செய்வதால் நிலத்திற்கு யாதொரு நஷ்டமுமில்லை; விளைவிக்கப்படும் தேயிலையெல்லாம் உள்நாட்டிற் செலவிடவும் முடியாது. எனவே, தேயிலையால் இந்தியாவுக்கு எவ்விதத்திலும் இலாபமே. ஆனால் தேயிலைத் தோட்டங்களிற் பெரும்பான்மையானவை ஆங்கிலேய முதலாளிகளுக்குச் சொந்தமானவை; அங்கு வேலை செய்யும் கூலி ஜனங்களும் (சுமார் 6 லக்ஷம்) சிப்பந்திகளுமே இந்தியர்.

மலைப்பிரதேசங்களிற் பயிராகும் வேறு விளைபொருள்கள், காப்பிக்கொட்டையும், ரப்பரும் (rubber) ஆம். இவ்

விரண்டிலும் நமது விளைவு மிகச் சொற்பம்; ஏற்றுமதியாக்கப்படும் காப்பிக்கொட்டையிலும் ரப்பரிலுமிருந்து வந்த வருமானம் இரண்டு கோடி ரூபாய்தான்.

தோல்:—நமது தேசத்திலிருந்து எற்றுமதியாக்கப்படும் வேறொரு பொருள் தோல் (hides and skins). பதனிடப்படாத தோலாக ஜெர்மனிக்கும் அமெரிக்காவுக்கும், பதனிடப்பட்டதாக இங்கிலாந்துக்கும் இப்பொழுது நாம் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். 1931-ல் தோல் ஏற்றுமதியினால் இந்தியாவுக்குக் கிடைத்த வருமானம் 14½ கோடி ரூபாய். பதனிடப்படாத தோலைப் பிற நாடுகளுக் கனுப்பிப் பின்னர் அந்நாடுகளிலிருந்தே அதைச் செய்பொருள்களாகத் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறோம். இஃது வெண்ணெயை விற்றுவிட்டு, நெய்யை விலைக்கு வாங்குவது போலாம். ஆனால், வெண்ணெயை உருக்கி நெய்யாக்கத் தெரியாதவர்கள் பின்னை என்னதான் செய்யக் கூடும்?

நாம் இதுகாறும் கூறிவந்ததிலிருந்து நமது பயிர்த் தொழிலைப் பிற தேசப் பயிர்த்தொழிலுடன் ஒப்பிடும் போது, பயிரிடப்படும் நிலப்பரப்பிலும் விளைபொருள்களின் மொத்த அளவிலுமே நாம் உயர்ந்தவர்களாகத் தோற்றத் தாற் காணப்படுகின்றோமேயன்றி, நன்கு ஆராயுமிடத்து, மிகக் கேவல நிலையில் இருந்துவருகிறோம் என்ற உண்மை விளக்கமாகின்றது. பண்படும் நிலத்தில் நூற்றுக்கு 80 பாகத்தில் தேச மக்களுக்கு வேண்டும் அளவுக்கும் மிகக் குறைவாக உணவுப் பொருள்களை மட்டுமே விளைவிக்கும் நாம் வேளாண்மையிற் சிறந்தோராவது எங்ஙனம்? அன்றி, ஏக்கர் வீதாசார விளைவில் எவ்விளைபொருளில் பிற தேசங்களை விட அதிக விளைவு காட்டுகிறோம்? மேலும் 1925-ல் நமது விளைபொருள்களின் ஏற்றுமதியால் சுமார் 150 கோடி ரூபாய் கிடைத்தது; அவ் வருமானங் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து 1933-ல் ரூ. 132¼ கோடியாக நிற்கிறது; இனியேனும் நம் விளைபொருள்களை மிகுதியான அளவிற் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்ற நம்பிக்கைக்

கும் இடமில்லை. ஏனெனில், பிற நாட்டுப் பயிர்த்தொழிலில் யுத்தத்திற்குப் பின் மிக்க அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. எனவே, நம் விளைபொருள்களை மிகுந்த அளவில் இனி ஏற்றுமதி செய்யவும் இயலாது. வியவசாயத்தில் முன் மணிமகுடமாய் விளங்கிய நமது தேசம் இப்பொழுது இக் கேவல நிலையை எய்தியிருப்பது மிகவும் இரங்கத்தக்க தன்றோ?

---

3. கபிலரும் பாரியும்

[பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்]

வட வேங்கடம் தென் குமரி யிடைப்பட்ட தமிழகத்தி லிருந்து செங்கோலோச்சி வந்த முடிகெழு வேந்தர் மூவருள்ளே, அறனும், மறனும், ஆற்றலுங் குன்றாத பாண்டியரானோர் வழிவழியாக ஆட்சி புரியப்பெற்றது, சீர் வளர் செந்தமிழ்ப் பாண்டி நன்னாடாகும். அந்நாட்டின் கண் சான்றோருடைய பாட்டுக்களை யணிந்து தண்ணென் றொழுகாநின்ற வையை யாற்றின் மருங்குள்ளது, ஒருவாத புகழமைந்த திருவாதவூர் என்னும் திருப்பதி. அத் திருப் பதியானது அன்பே வடிவாகி, யின்ப வெள்ளத்திற்றிளைத்த ஆளுடைய வடிகள் தோன்றியருளும் பெரும்பேறுடைய தென்றால், அதன் பெருமை யாரால் அளவிட்டுரைக்க லாகும்?

அப்பதியிலே, அறுதொழிலின் வழூவாத அந்தணரொருவர், தம் கற்பிற் சிறந்த பொற்புடை மனைவியோ டிருந்து, இல்லறம் இனிது நடாத்தி வாழுநாளில், அன்னவர் தம் நோன்பின் பயனாக அவர்க்கு ஓர் புதல்வர் தோன்றினர். பெற்றோர்கள் தம் அரும்பெறன் மகவைக் கபிலர் என்று பெயரிட்டுக் கண்ணுங் கருத்துமாகப் பேணி வளர்த்து, உரிய பருவத்தே பள்ளிக்குவைத்துக் கல்வி பயில் வித்தனர். கபிலரும், சிறிது பயின்ற பின்னர், வேளாண்

வாழ்க்கையும் தாளாண்மையும் உடைய பன்னருஞ் சிறப்பின் நல்லாசிரியர் ஒருவரைச் சார்ந்து, மடி, தடுமாற்றம், மானம், பொச்சாப்பு முதலியன இல்லாமையும், ஆசிரியர்பாற் சென்று வழிபடுதலும், ஆசிரியர் குறிப்பறிந்தொழுகுதலும், ஆசிரியரிடத்திற் கேட்டவற்றை நினைத்தலும், பழம்பாடம் போற்றலும், பிறர்பால் வினவுதலும், பிறர் வினயவற்றிற்கு விடை கூறலும், அறியார்க்கு அறிவுறுத்திப் பயன் விளைத்தலும், செய்ந்நன்றி யறிதலும், தீச்சார் பின்மையும் முதலியவாக மாணவர்க்கு வேண்டும் குணனெல்லாம் உடையராய், இலக்கண இலக்கியத் துறையெல்லாம் சென்று கற்று வல்லாரானர்.

ஆனபின், அவர் காவிரி முதலிய மேவி யாடுதும் என்றும், தில்லை முதலிய எல்லை காணுதும் என்றும், தாயுமாம் பொருளைப் போய் வழிபடுதும் என்றும், ஆங்காங்குள்ள பெரியாரைத் தலைப்பெய்து, அறியாதனவெல்லாம் அறியப் பெறுதும் என்றும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலத்து ஐநதிணைக் கருப்பொருள்களின் பெற்றியெல்லாம் நுனித்தறிந்து, கண்டு மகிழுதும் என்றும், இன்னணம் பற்பல இடங்களினும் சென்று உலகவறிவும், இலகிய குணனும் பெற்று வருவார்; ஆசிரியர்க்கு வேண்டும் வாய்மையும், தூய்மையும், ஒழுக்கமும், விழுப்பமும் எல்லாம் ஒருங்கமையப்பெற்றவராயினர். அவரது மலர்ந்த முகமும், குளிர்ந்த வுரையும், அருள் பொழி விழியும், தெருள் பொழி யுணர்வும், யாவர்க்கும் இன்பம் விளைப்பவாயின.

அக்காலத்தில், வீரத்தின் மேம்பட்ட பேரரசர்களேயன்றிக் குறுநில மன்னருள்ளும் பலர் சிறந்த வள்ளல்களாய் விளங்கினர். சிறிய பூக்களையுடைய முல்லைக்கொடி படர்தற்குத் தனது பெருந்தேரை யளித்த பறம்பிற்கோமானகிய பாரியும், காட்டிலேயுள்ள மயிலுக்குத் தனது மேற்படாத்தினை நல்கிய பெருங்கல் நாடனகிய பேகனும், இரவலர்க்கு வேண்டுவன யாவும் நல்கிய முள்ளூர் மன்னனகிய காரியும், கொல்லிமலைத் தலைவனகிய ஓரியும், நள்ளியும் முத

லிய வள்ளியோர்கள் அப்பொழுது விளக்கமுற்றிருந்தனர். அவருள்ளே, வரையா வள்ளன்மையால் வையக முழுதும் தன் புகழ் பரக்கவிருந்த வேள் பாரியின் அருங்குணங்களை யும், பெருஞ் செயல்களையும் கேள்வியுற்றார் கபிலர். ஆ! ஒரு முல்லைக்கொடி படர்தற்குக் கொழுகொம்பின்றி நடுங்குவது கண்டவளவிலே, தான் ஊர்ந்துவந்த தேரினை அது படருமாறு நிறுத்திக் கழலடி சிவப்ப நடந்து சென் றானும்! அவ்வோரறிவுயிர்மாட்டும் வரம்பின் றெழுந்த அவ னது இயற்கைப் பேரருட் பெருக்கினை யாவர் அளவிட் டுரைக்க வல்லர்? அவ் வருளுடன் கூடிய அறிவன்றோ அறிவெனப்படுவது. 'இத்தகைப் பெருமையுடையானை எப் பொழுது காண்பேம்' என்று நினைந்து வேள் பாரியைக் காண்டற்கு விருப்பு மிக்கவராயினர் கபிலர்.

பாரியும், கபிலரது பெருமையெல்லாம் கேள்வியுற்று, 'மனந் தூய்மை, செய்வினை தூய்மை, இரண்டும் இனந் தூய்மை பற்றுக்கோடாக வரும்' என்பர் பெரியோர். தூய் மையே ஒருருவெடுத்தா லனையர் கபிலர். அன்னவரை எப்பொழுது இனமாகப் பெறுவேன், தூய்மையுறுவேன், என்றெண்ணி, அவர்பால் அன்பு மீதூரப் பெற்றவனானான். வள்ளியோன் அன்பினால் இழுக்கப்பட்டார் கபிலர்; மதுரையை அரிதின் நீங்கினார்; பறம்பு நாடடைந்து பாரி யைக் கண்டார். அன்றுதொட்டு ஒருவர் ஒருவரிற் கலந்த கேண்மையராயினர். பாரியானவன், அறிவாற்றலில் மிக்க பெரியராய கபிலரது கேண்மையினும் பெறுதற்கரிய பேறு பிறிதின்றெனக் கருதி, அவரது குறிப்பின் வழி யொழு குவானாயினன். கபிலரும், அவ்வள்ளலுக்கு அருமந்த நண்பராயும், சூழ்ச்சித் துணைவராயும் விளங்கியதோடு பறம்பு மலையின் இயற்கை வளனெல்லாம் பல்காலும் கண்டு கண்டு களித்து, அங்குள்ள பூவும், புள்ளும் முதலிய கருப் பொருள்களின் பெற்றியையெல்லாம் நுனித்தறிந்து, சுவை கனிந்த அகப்பொருட் பாட்டுக்கள் பல பாடியும், வள்ளியோர் தலைவனை மகிழ்வித்து வருவார்; ஓரொருகால், தன்னை

யடைந்தவர் அறிஞராயினும், மடவராயினும், வலியராயி னும், மெலியராயினும், அன்னவர்க்கு வேண்டுவன நல்கி விடுக்கும் பாரியின் வண்மையினைப் பாராட்டிப் பாடுவர்.

நவிலுந்தொறும் நூலின் நயம் வெளிப்பட்டு இன்பம் விளைத்தல்போல், பழகுந்தொறும் இவ்விருவருடைய இனிய பண்புகளும் வெளிப்பட்டு, இருவருக்கும் இன்பம் விளைப்பவாயின. காக்கையின் இரு கண்ணிற்கும் மணி ஒன்றுதல் போல, இவ்விருவருடம்பிற்கும் உயிர் ஒன்றென்னுமாறு விளங்கினர்கள். பாரியின் வண்மைத் தன்மையைக் காணுந்தொறும், கபிலர் மிக்க வியப்பும் உவப்பும் உடையராய், 'மக்களுள் யாவரானும் விரும்பப் படாத எருக்கம்பூவாயினும் கடவுள் விரும்பி ஏற்றுக்கொள் ளுதல் போல, யாதும் அறிவில்லாரும், புன் குணனுடை யாரும் செல்லினும், அன்னர்க்கும் பாரி கை வண்மை செய் தலைக் கடப்பாடாக வுடையன்' என்று, கடவுளோடொப் பித்துக் கூறி, அவனது விரிந்த வுள்ளத்தின் மேன்மையை விளக்கிடுவர். 'பாரி, பாரியென்று சொல்லி, அவன் பல புகழையும் வாழ்த்தி, அவ்வொருவனையே புகழ்வர், செவ் விய நாவினையுடைய புலவர் ; பாரி யொருவனுமே யல்லன், மாரியுமுண்டு, இவ்விடத்து உலகத்தைப் பாதுகாத்தற்கு' என்று பழிப்பதுபோற் புகழ்ந்து, வரைவின்றியும், கைம் மாறு கருதாதும் ஈயும் பாரியின் கடப்பாட்டின் மேன்மை தெரித்திடுவர். 'பறம்பு மலையானது, பாடுவார்க்குக் கூறிட் டுக் கொடுத்தலின், அவருடையதாயிற்று ; அறத்தினை மேற் கொண்டு, பாரியும், பரிசிலர் வேண்டுவராயின், அவ்வழி வாரேன் என்னாய், அவரெல்லையின் கண்ணே நிற்பன்' என்று, பரிசிலர்க்கு என்பு முரியனும் அவனது அன்பின் திறத்தினை யெடுத்தியம்புவர். இவ்வாறு, வேள் பாரியான வன் கபிலர் பாடும் புகழுடையோனாய் விளங்கினன். அவ னது புகழ் நாடெங்கும் பரந்தது.

அக்காலத்துச் சேர, சோழ, பாண்டியர்களில், வீரத்தி னும், நீதியினும் மேம்பட்ட பேரரசர் சிலரிருந்தனர். அவ

ருடன் பகைகொண்டு, அரசின்றித் திரிந்தாரும் சிலருண்டு. அங்ஙனம் திரியலுற்றார் மூவர், ஒருங்கு கூடிப் படைகளைத் திரட்டிச் சென்று பாரியின் பறம்பென்னும் மலையரணை முற்றுகை யிட்டனர். அவ்வரணோ, நீர், நிலன், காடு என்பவற்றாற் சூழப்பட்டது; ஏணிக் கெட்டாத வுயர்ச்சியும், புறத்தோர்க்குத் தோண்டலாகாத அடியகலமும், அகத்தோர்க்கு நின்று வினைசெய்தற் காம் தலையகலமும், கல்லானும், இட்டிகையானும் செய்யப்பட்டமையின், குத்தப்படாத திண்மையும் உடைய மதிலினையுடையது; அகத்தோர்க்கு வேண்டும் பொருள்களெல்லாவற்றையும் உடையது; தலைவன்மாட்டன்பும், மானமும், மறமும், சோர்வின்மையும் முதலிய நற்குணங்களுடையராய், உற்றுழியுதவும் வீரரையுடையது; மற்றும், அரணுக்கு வேண்டும் பிற மாட்சிமைகளையும் உடையதாய், மடிந்திராது, ஏற்ற வினையை அளவறிந்து செய்து, காக்க வல்ல வினைமாட்சியுடையாரையும் உடைத்தாய் இருந்தது; ஆகலின், அஃது எத்துணைப் படைமாட்சியுடையராயினும் எளிதிற் பற்றப்படுவதொன்றன்று.

மூவரது முற்றுகையும் நெடுங்காலஞ் சென்றது. அரண் அடைமதிற் பட்டிருந்த காலை, அகத்துள்ளார் உணவின்றி வருந்தா வண்ணம், அங்கிருந்த புலவர் பெருமானாராகிய கபிலர், கிளிகள் பலவற்றைப் பயிற்றி விடுத்து, அரணுக்குப் புறத்தேயுள்ள விளை நிலங்களிலிருந்த நெற்கதிர்களை நாடொறும் கொய்து வரச்செய்து, அங்குள்ள குடிகளையும், படைகளையும் உண்பித்துக் காப்பாற்றி வந்தனர். அங்கிருந்த நொச்சி மறவராயினர், தம்மலையின்கண் இயற்கையாய்க் கிடைக்கும் பலாப்பழம், வள்ளிக்கிழங்கு முதலிய வுணவுகளோடு கபிலரது சூழ்ச்சியாற் கிடைக்கும் உணவினையுமுண்டு, தளர்வின்றிப் போர் மலைந்து வந்தனர். முற்றுகை, பல் யாண்டாகியும், அரணினைக்கைப்பற்ற இயலாத மூவேந்தரும், பாரி தன் மகளிரைத் தமக்கு மணஞ் செய்து கொடுப்பின், தாம் போர் புரிவதில்லையெனக் கூறி

விடுத்தனர். இதனைக் கேட்டலும், பாரிக்குச் சினம் மூண்டது. கவரிமான் போலும் மானமுடைய வீரனுனவன் இவ்விழிமொழியை எங்ஙனம் பொறுத்திருப்பன்? கடியதோர் வாளராவெனச் சீறியெழுந்து, உழிஞையார் மேற் சேறலுற்றான். புலவர் ஏறுய கபிலரும், முன்னர்ச் சென்று மதிற்புறத்தெய்தி, மூவேந்தரையும் பார்த்துப் பின்வருமாறு கூறலுற்றார் :—

'பெருமை பொருந்திய முரசினையுடைய நீயிர் மூவேந்தரும், எத்துணைக்காலம் முற்றுகை செய்யினும், பறம்பு என்னும் அரணிலுள்ளார்க்கு உணவுக் குறை உளதாகாது. மூங்கில் நெல்லும், பலாப்பழமும், வள்ளிக்கிழங்கும், தேனும் என்னும் நான்கு பொருளையும் அவ்வரண் மிகுதியாக வுடைத்து. இவை உழவரது முயிற்சியின்றியே இயற்கையிற் கிடைப்பன. நீங்கள் எண்ணிலாத களிறும், தேரும் கொணர்ந்து அமர் விளைப்பினும், நுமது முயற்சியால் அரணைப் பற்றமாட்டீர். நும் வாள் வலியால் பாரி அதனைத் தருவானல்லன். அதனைக் கொள்ளுமாறு யான் அறிகுவன். வடித்து முறுக்கிய நரம்பினையுடைய சிறிய யாழை வாசித்து நும் உரிமை மகளிர் பின் வர, ஆடிப் பாடிச் செல்வீராயின், அவன் நுமக்கு நாடும் மலையும் சேர நல்குவன்.

'பெருமை மிக்க தானையினையுடைய மூன்று திறத்தீரும் கூடிப் பொருதீராயினும், பறம்பு கொள்ளுதற்கு அரிது. குளிர்ந்த நல்ல பறம்பு நாடு முந்நூறு ஊர்களை உடைத்து. அம்முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பெற்றனர். நீவிர் பாடிக்கொண்டு வரின், நுமக்குப் பரிசிலாக மலையுள்ளது. அதுவேயன்றி யாமும் பாரியும் உள்ளேம்.

'பாரியது பெரிய மலை இரங்கத்தக்க தொன்றே! அது வேற்படை கொண்டு பொரும் வேந்தர்க்கு அரிது எனினும், நீல மலர்போலும் மையுண் கண்களையுடைய விறலி பாடினளாய் வரின், அவட்கு எளிதாகின்றது'.

இங்ஙனம் பாரியது புரவலர்க்கருமையும், இரவலர்க்கெளிமையும் ஆகிய நிலையினை யெடுத்து, அவ்வேந்தர்களைச்

சிறிதும் மதியாது, ஏந்திய கொள்கையரான கபிலர் கூறினர். கூற, மூவேந்தரும், இனி நாம் பாரியை வெல்லுதலரிதென ஊக்க மழிந்தனர். பாரியின் படைவீரர் ஆரவாரித் தெழுந்தனர். பாரியும் புகுந்து, மந்திரமனைய திண்டோள் வலியால் பகைக் கடலை யுழக்குவானாயினன். மூவேந்தரும் படையுடன் முரிபட்டோடினர். வெற்றித் திருவும் பாரியின் வெற்புத்தோளை மேவலுற்றனள். இஃது இவ்வாறாக, ஊழ்வினை பயனூட்டுங் காலம் அணுகியது. அதனை யொழிக்க வல்லவர் யாவர்? பாரியுடன் சமர் புரியலாற்றாது நிலைகெட்டோடிய மூவரும் ஓரிடத்துக் கூடினர். கூடிப் பாரியின் அருமை, பெருமைகளை யறியாத பண்பிலிகளாய், அன்னார், அந்தோ! அவனை வஞ்சகத்தாற் கோறல் கருதினர்; அதற்கொரு சூழ்ச்சியும் புரிந்தனர். நஞ்சனையார் புரிந்த வஞ்சனை இன்னதென யாராலியம்பலாகும்? மாரியனையான் பாரியும் பூதவுடம்பை விடுத்துப் புகழுடம்பை நிறுத்தினான். விண்ணவர் மலர் மாரி பொழிய, மண்ணவர் கண் மாரி பொழிந்தனர். இரவலரிரங்கினர். புலவர்கள் புலம்பினர். அவனுக்கு ஆருயிர்த் தோழராயிருந்த கபிலரது பெற்றியை உரைப்பதென்னே! பாரி தடுத்திராவிடின் தாமும் உயிர்துறந்திருப்பா ரல்லரோ! பாரியின் சொற்களாலும், அவன் மகளிரைப் பாதுகாக்கவேண்டியும் உயிர் சுமந்திருந்தாராயினும், புலவர் பெருமானார் நாளும் எல்லையில்லாது துயருழப்பாராயினர். பறம்பு நாட்டு முந்நூற்றூரையும் பரிசிலர்க்களித்த பெருமையை நினைந்திரங்குவர் ஒருகால். முல்லைக் கொடிக்குப் பொற்றேரளித்துக் கழலடி சிவப்ப நடந்து சென்ற பேரருளை நினைந்திரங்குவர் ஒருகால். அறிவும், அன்பும், செறிவும், பொறையும் முதலிய குணனெல்லாம் நினைந்திரங்குவர் ஒவ்வொருகால். அன்புடையாரைப் பிரிதலினும் துன்பமென்பது யாதுண்டு? புலமை நிறைந்த அவரது உள்ளமும் நிலையழிந்தது.

இங்ஙனமாகக் கையாறெய்திய கபிலர், பின்பு, அங்கிருக்க உளம்பொறாது, பாரி மகளிரைத் தகுதி

யுடைய ஆடவர்க்கு வாழ்க்கைப் படுத்துதல் கருதியும், அன்னுரை அழைத்துக்கொண்டு புறம்பே யேகலுற்றனர். ஏகுகின்றவர், பறம்பினை நோக்கி நின்று, 'ஓ! பெரிய புகழை யுடைய பறம்பே! முன்பு பல சிறந்த வுணவையும் விரும்பியவாறே தரும் மிக்க செல்வம் முதிர்ந்து, எம்முடன் நட்புச் செய்தாய். இப்பொழுது, பாரி இறந்தானுகக் கலங்கிச் செயலற்று, வளையணிந்த முன் கையை யுடைய மகளிரின் மணங்கமழும் கரிய கூந்தலைத் தீண்டுதற்கு உரியவரை நினைந்து, நீர் வார்கின்ற கண்ணையுடையேமாய், நின்னைத் தொழுது வாழ்த்திச் செல்லுகின்றேம்; நீ வாழ்வாயாக!' என்று கூறி, அதனை விடுத்துச் சென்றனர். சென்றவர், சிறிது தூரத்தில் நின்று, மீளவும் நோக்கி, 'தேர் வழங்கும் இருக்கையையுடைய உயர்ந்தோனது மலை, அவன் உள்ளுய காலத்துப் புகழானுயர்ந்து, காணுதார்க்கும் செவிப் புலனுகத் தோன்றும்; இப்பொழுது பிற மலைகள்போல் கட்புலனளவிற்ருய், இவ்விடத்து நின்ருேர்க்கும் தோன்றும்; சிறிது எல்லை போய் நின்ருேர்க்கும் தோன்றும்' என்று இரங்கிக் கூறினர். இங்ஙனம் பறம்பின்பால் வைத்த பெரும் பற்றினுலே கவற்சி மிக்குப் பலவாறு கூறிக்கொண்டு சென்று, மாலைப்பொழுதில் ஓர் பொய்கை யருகே தங்கினர்; மதியமானது வெள்ளிய நிலவினை விரித்து விளங்குவது கண்டனர். பாரி மகளிர் சென்ற திங்களில் அந்நிலாப் பொழுதில் தாம் இருந்த நிலைமையும், இப்பொழுது இருக்கும் நிலைமையும் அவர்கள் மனத்தி லுதித்தன. உடனே அவர்கள் உள்ளுடைந்துருகி, 'ஆ! அற்றைத் திங்களில் அவ்வெண்ணிலாவில் யாம் எந்தையை உடையேமா யிருந்தேம்; எம் குன்றும் பிறராற் கொள்ளப் பட்டிலது. இற்றைத் திங்களில் இவ்வெண்ணிலாவில் வேற்று வேந்தராயினர் எம் குன்றினைக் கைப்பற்றினர்; யாம் எந்தையை உடையமல்லேமும் ஆயினேம்' என்று கூறி வருத்தத்துடன் தங்கியிருந்தனர்.

கபிலரும், மறுநாள் அவர்களை யழைத்துக்கொண்டு சென்று, விச்சிக்கோன் என்னும் சிற்றரசனை யடைந்து, அவனை நோக்கி,'வளம் பொருந்திய மலையினையுடைய விளைவு மிக்க நாட்டையுடையோய்! நெடிய வேலும், கடுங்கண் யானையும், விளங்கு மணிப் பூணுமுடைய விச்சிக்கோவே! இவர்கள் தாம், முல்லைக்கொடியானது நாத்தழும்பேறப் பாடாதாயினும், தனது நெடிய தேரைக் கொள்க வென்று கொடுத்த மேம்பட்ட சிறப்பினையுடைய பாரியின் மகளிர்; யானே, பரிசிலன்; அதுவன்றியும் அந்தணன்; நீயோ பகைவரை முறைமையாற் பொருது, வணங்குவிக்கும் வாளால் மேம்படுபவன்; ஆதலால், இவர்களை நினக்கு யான் தர, நீ கொள்வாயாக' என்று பரிசிலிரப்பார் போன்று கூறினர். கூறியும், அவன், அவர்களுற்ற தாழ்மையை நினைந்தோ, அவர்களை முன்னம் விரும்பிய வேந்தர்களின் பகையுண்டாமெனக் கருதியோ, அன்னவரை மணஞ் செய்துகொள்ள மனமிலனாயினன். பின், புலவர் பெருமானூர் இருங்கோவேள் என்பானுழைச் சென்றனர். அவனும் இவரை வரவேற்று, இம் மகளிர் யாவரென அறியும் கருத்தினனாயிருக்க, அன்ன காலையில், கபிலர் அவனை நோக்கி, 'போரின்கண் வென்றி மேம்படும் அண்ணலே, புலிகடிமால் என்பதொரு பெயரினையுடையாய்! பொன்னுண்டாகும் பெரிய மலைக்குத் தலைவ! பகைவரஞ்சும் தானையும், கேடில்லாத நாடும் உடையோய்! இவர் யாரென்று வினவுவாயாயின், இவர் தாம் ஊரெல்லாவற்றையும் இரப்போர்க்கு வழங்கித் தேரினை ஏறுதற்கேற்பச் சமைத்த அணியுடன் முல்லைக்கு வழங்கிய நல்லிசை வாய்ந்த பறம்பிற்குத் தலைவனாகிய பாரியின் மகளிர். யான் இவர் தந்தையின் தோழனாதலால், இவர் என்னுடைய மகளிர். அந்தணனாகிய புலவன் யான் கொண்டு வந்தேன். நீயோ, வடபக்கத்து முனிவனுடைய ஓமகுண்டத்தில் தோன்றி, நெடிய மதிலையுடைய துவராபதியென்னும் படைவீட்டையாண்டு, நாற்பத்தொன்பது தலைமுறை தொன்றுபட்டு வந்த வேளிருள் வேளாயுள்

ளாய். ஆதலால், யான் நினக்குத் தர, நீதான் இவரைக் கொள்வாயாக' என்றனர். அவனும், பொய்யில் கேள்விப் புலவராகிய கபிலர் இங்ஙனம் கூறியதை மதியாது, சிறிதும் இரக்கமின்றி, அவர்களை மணந்துகொள்ள மறுத்துவிட்டனன். கபிலரும், உள்ளம் நொந்து, அவ்விடம் விட்டு அகன்றனர்.

அகன்றவர், வேறு செய்வகை யறியாராய், ஆன்றவிந்தடங்கிய கொள்கை நான்மறையாளர்பால் பாரி மகளிரை அடைக்கலமாகவைத்துவிட்டு, மலைநாட்டில் சேரமான் செல்வக்கடுங் கோவாழியாதன், சிறந்த குணமும் மிக்க வன்மையும் உடையனு யிருக்கின்றான் என்ப தறிந்து, அவனைக் காணுமாறு சென்றனர். சென்று, செல்வக் கடுங்கோவைக் கண்டு, அவன் புகழினை ஓர் பத்துப் பாட்டினுற் பாடியருளினுர். கபிலரது செந்நாவினின்றும் போந்த தீஞ்சுவைச் செந்தமிழ்ப் பாட்டுக்களை வேந்தர் பெருமான் செல்வக் கடுங்கோவாழியாதன் கேட்டனன்; உள்ளத்தே கிளர்ந்தெழுந்த உவகைப் பெருக்கினிலாழ்ந்தனன்; பரிசிலாக நூறுயிரம் பொற்காசு கொடுத்தும் அமையாது, நன்ரு எனப் பெயரிய மலையின்மீதேறி, தன் கண்ணிற் கண்ட நாடெல்லாமும் கொடுத்தான். கபிலரது ஒண்மையையும், சேரமானது வண்மையையும் யாவரும் பாராட்டுவாராயினர். கபிலரும் பெருமகிழ்வோடு சின்னுளங்கிருந்து, செல்வக் கோவிடம் விடைபெற்றுப் போந்து, பார்ப்பனர் பாது காவலில் இருந்த பாரி மகளிரையும் உடன் கொண்டு, திருக்கோவலூரை அடைந்து, தம் நண்பனுகிய திருமுடிக் காரியின் வழியில் வந்த, எழிலும், இளமையும் வாய்ந்த ஏறனையார்க்குத் தாம் அழைத்துவந்த பூவையனைய பாவை யரை அளித்தனர். மன்னரெலாம் வியக்க, மாட்சி மிக்க பெரியோர்கள் வாழ்த்த, அன்னவர்தம் திருமணம் அளவிடற்கரிய சிறப்புடன் நடைபெற்றது.

கபிலரும், சின்னுள் அங்கிருந்து, பின்பு, தம் நண்பனுகிய பாரியின் பிரிவுத் துன்பம் தம்மைப் பெரிதும் அடா

நின்றமையின், தாம் இவ்வுலகில் உயிர் வாழ்ந்திருக்க மனம் பொருராய்ப், பாரியை நினைந்து, 'பெரிய வண்மையினை யுடைய பாரியே! நீயும் யானும் கலந்த நட்பிற்குப் பொருந்த, நீ செல்லுங்கால் யான் உடன்சேறல் முறைமை யாகவும், அதற் கியையாது, 'நீ ஈண்டுத் தவிர்க' எனச் சொல்லி, இங்ஙனம் மாறுபட்டனையாதலின், யான் நினக் குப் பொருந்தினவனல்லேனாயினேன். அதனால், நீ எனக்கு உதவி செய்த காலங்களினும், என்னை வெறுத்திருந்தாயா தல் வேண்டும். எனினும், இப்பிறப்பில் நீயும் நானும் கூடி இன்புற்றிருந்தவாறு போல, மறுமையினும் நின்னொடு கூடி வாழ்தலை விதி கூட்டுவதாக!' என்று சொல்லிப் பெண்ணை யாற்றின் நடுவிலுள்ள மணற் பரப்பிலே வடக்கிருந்து, மூலக்கனலை மூட்டி யெழுப்பித் துறக்கம் புக்கனர். அதன் பின், அவரது வடிவு கல்லிற் சமைக்கப்பட்டு, யாவரானும் வழிபடப்பட்டு விளங்குவதாயிற்று.

---

4. எங்கள் நாட்டு ஆடை

[வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்]

மக்களுக்கு வேண்டிய அவசியத் தேவைகளில் உண வும் உடையும் மிகச் சிறந்தவை. உடலை நன்கு வளர்க்க உணவு வேண்டும். உடலில் குளிர் தாக்காது போக்கி, வேண்டிய வெப்பத்தைக் கொடுக்கவும், அலங்காரம் செய்து கொள்ளவும் ஆடை இன்றியமையாதது. உணவு, உடல் நிலை தளர்ந்து உயிர் நீங்காதவாறு பாதுகாப்பது; உடை, உயிரினும் பன்மடங்கு சிறந்த மானத்தைக் காப்பது. ஆடையில்லா மனிதன் அரை மனிதனல்லவா? பழமொழி நானூற்றிலும், 'அலங்காரம் செய்வதில் ஆடையாபரணங் கள் சிறந்தன. ஆயினும், ஆபரணங்கள் ஆடையைப்போ லின்றியமையாதன அல்ல' என்னும் கருத்துப்பட, 'அணி

யெல்லாம் 'ஆடையின் பின்' என்ற பழமொழி காணப் பெறுகின்றது. இரக்கப் போனுலும் சிறக்கப் போக வேண்டிய தவசியம். ஆதலால், இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஆடையைத் தயாரிப்பதில் நம் நாட்டுப் பண்டைய மக்கள் எவ்வளவு கைதேர்ந்திருந்தனர் என்பதை அறிந்துகொள்ள, நூல், ஆடை தயாரித்தலும், அதன் வகைகளும், ஆடை யியல்பு, அதன் கரையமைப்பு, உடுத்தும் முறையும், வெளுத் தலும் என்ற தலைப்புக்களின் கீழ் ஆராய்தலே இக்கட் டுரையின் நோக்கமாகும்.

நூல்:—பஞ்சை முதலில் அரை மணையில் இட்டு அரைத் துப் பஞ்சையும் கொட்டையையும் வேருகப் பிரிப்பார்கள். பிறகு அப்பஞ்சை வில்லால் கொட்டித் துகளில்லாது போக்கி, நூற்பதற்கேற்ற நிலையில் சிறு திரிகளாக ஆக்கு வார்கள். அங்ஙனம் ஆக்கப்பெற்ற பஞ்சிற்குக் 'கொட்டை' என்று பெயர். கொட்டை என்பதற்கு வில்லால் கொட் டப்பெற்றது என்பது பொருள். பஞ்சின் மெல்லிய பகுதிக் குப் பஞ்சுத்துய் என்றும் பஞ்சியடர் என்றும் பெயர். பஞ் சுத்துய்யின் பண்புக்கேற்ப நூல் நயம்பட இருக்கும். கைத் தொழிலைப் பிழைப்புத்தொழில் என்றும, துணைத்தொழில் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். நூற்றல் தொழில் பெரும்பாலும் பெண்மக்கள் மேற்கொண்ட தொழிலே யாகும்; அதிலும் சமையல் வேலையும் வீட்டுவேலையும் செய்து ஒழிந்த நேரங்களிலே செய்யப்பெற்ற தொழிலாகும்.

நன்னூல் பொதுப்பாயிரத்தில், 'பஞ்சி தன்சொல்லா' என்னும் செய்யுளால் அறிவு நூலுக்கும் ஆடை நூலுக்கும் ஒப்புமை கூறப்பெற்றுள்ளது. அதில், 'செஞ்சொற் புல வனே சேயிழையா' எனக் கூறியதை உற்று நோக்கும் போது, நூற்கும் தொழிலை மேற்கொண்டவர்கள் பெண் களே என்பது தெளிவாகும். இன்னும் நற்றிணையில், 'ஆளில் பெண்டிர் தாளிற் செய்த நுணங்கு நுண் பனுவல் போல' என்ற செய்யுட் பகுதியால் அக்காலத்து வழக்கம் ஒன்று அறியலாகும். பொருள் தேடிப் பாதுகாக்கும் கண

வனை யிழந்து கைம்மை விரதங் காக்கும் மகளிர், முயற்சி யோடு நயமான நூலை நூற்கின்றனர் என்ற உண்மை புலப் படுகின்றது. நூல் நூற்றலால் வரும் ஆதாயம் அவ்வப் போது வயிறு வளர்ப்பதற்கும் ஆடையின் தேவையை நிறைவிப்பதற்கும் ஆனதன்றி, மிச்சப்படக்கூடிய நிலை யில் வராதென்பது தேற்றம். 'கப்பல் உடைந்து பட்ட கடனைக் கொட்டை நூற்று கொடுக்கப் போகிறாய்?' என்ற பழமொழி சிறு வரவைக்கொண்டு பெரிய காரியத்தை நிர் வகிப்பதற்காகக் கூறுபவனைப் பரிகசிக்கும் பொருளில் வழங்குகின்றது. இதிலிருந்து கொட்டை நூற்ற ஆதாயம் மிகக் குறைவானது என்பது குறிக்கப்பெறுகிறதல்லவா?

தயாரிக்கும் முறை :—அங்ஙனம் நூற்ற நூலைத் தேய்த் துப் பதஞ்செய்து பாவாற்றி என்னும கருவியால் பசையிட்டு உலரச்செய்து நெசவுக்குக் கொண்டு வருவார்கள். அந்த நூலுக்குப் 'பாவு' என்று பெயர். குறுக்கு நூலுக்கு 'உண்டை' யென்று பெயர். குறுக்கு நூலிடும் கருவிக்கு 'நூல் நாழிகை' எனவும், 'குழல்' எனவும் பெயர் வழங்கி வந்தது. அக்கருவி இக்காலத்து, 'நாடா' என வழங்கு கிறது. இது, 'நெய்கை நுண்ணூல் நாழிகையின் நிரம்பா நின்று சுழல்வோரே' என்னும் சிந்தாமணிச் செய்யுளாலும், 'பாவாடு குழல்போல' என்னும் நளவெண்பாவாலும் அறி யக் கிடக்கின்றது. இராமபிரானும் இளைய பெருமாளும் இளமைக் காலத்து, நதி, பொழில், வாவி இவற்றினிடங் களில் திரிந்தனர் எனக் கூறவந்த கம்பர், 'நெய் குழலூறு மிழையென நிலை திரிவார்' என உவமையுடன் கூறினர். இதில் குழல் சென்ற வழி நூல் பிரிந்து உடன் செல்லு தலும், குழலைவிட்டு நூல் நீங்காது போய்ப் போய்த் திரும் புதலுமாகிய நெசவு இயல் கூறப்பெற்றுள்ளது.

அவ்வாறு நெய்யப்பெற்ற ஆடை, நூல் நெருக்கத்தால் கண் பார்வை நுழையாத நிலையில் இருந்தது என்பது, 'நோக்கு நுழை கல்லா நுண்பூக் கனிந்த அரவுரியன்ன அறுவை' என்ற பொருந ராற்றுப் படையால் அறியப்

பெறுகின்றது. ஆடையின் இயல்பு, 'அரவுரி யன்னதுகில்,' 'ஆவியந்துகில்,' 'புகை முகந்தன்ன மாசில் தூவுடை' என்ற உவமைகளால் பலவிடங்களிலும் விளக்கப்பெறுகிறது. புறநானூற்றில், ஆடை, பளபளப்பாலும் மேன்மையாலும் பாம்பின் தோலையும், நெசவுச் சிறப்பால், மூங்கில் மரத்துள் இருக்கும் வெள்ளிய தொலியையும் ஒத்து இருந்தது எனக் குறிப்பிக்கப் பெறுகின்றது. இதனுல் அக்காலத்திய ஆடையின் மேன்மையும் நெசவின் நயமும் எவ்வாறு இருந்தன என்பதை மனக்கண்ணுற் கண்டு மகிழாமலிருக்க் முடியாது.

ஆடையின் வகைகள்:—ஆடையில் பலவகையுண்டு. அவ்வகைகள் நிறம் பற்றியும், நெசவுத்தொழில் சிறப்புப் பற்றியும் பிரிக்கப்பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்து, கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம் முதலாக முப்பத்தாறு வகைகள் கூறப்பெற்றுள்ளன. அவைகளில் பலவற்றை முற்கூறிய இருவகையுள் அடக்கலாம். ஏனைய, காரணம் விளங்காதன. அம்முப்பத்தாறனுள், பீதகம் என்பது பொன்னிறமான ஆடை. பச்சிலை என்பது இலைப் பச்சை நிறமுள்ள ஆடை. அரத்தம் என்பது சிவந்த ஆடை. ஆனல், சாயந் தோய்க்கப்பெருது, இயற்கையாகவே சிவந்த நூலைக்கொண்டு நெய்யப்பெறுவது. கோபம் என்பது இந்திரகோபப் பூச்சிபோலச் சிவந்த ஆடை; 'கோபத் தன்ன தோயாப் பூந்துகில்' என்பது இவ்வாடையின் இயல்பை நன்கு விளக்கும் பகுதியாகும். இவ்வாறு நிறம் பற்றிய ஆடைகளும், நுண்டுகில், இரட்டு முதலிய நெசவு வேறுபட்ட ஆடைகளும் விளங்கின. அன்றியும், சிறப்பாக அநேக வடிவங்கள் எழுதப்பெற்ற ஆடைகளும் இருந்தன. அவற்றிற்குச் 'சித்திரக்கம்மி' என்று பெயர். கரைகளில் எழுத்துருவங்கள் வர, 'பேட்' தூக்கி நெய்யப்பெற்ற ஆடைகளும், கரை வேறு நிறம், உடல் வேறு நிறமாக பாவோடி, உண்டை மறித்துக் கோத்து வாங்கிய ஆடைகளும் இருந்தன என்பது, 'பொன்னெழுத்து,' 'நூல்

யாப்பு' என்ற பெயரானே அறியப்பெறும். 'கோசிகம்' என்ற ஆடை, மலரும் பருவத்துள்ள பாதிரிப்பூவை விரித்தா லொத்த நிறமுள்ளது என்றும், கலிங்கம் என்பது கோங் கம்பூவைப் போன்றது என்றும் பெருங்கதையில் கூறப் பெற்றுள்ளது.

கரை:—அருகில் கரையில்லாத எந்த ஆடையும் அழகு மிகப் பெறுவதில்லை. இதுபற்றியே போலும் கரை யில் லாத ஆடையைக் கட்டுதல் கூடாது எனச் சிலர் வாதிப்பா ராயினர். கரைகளில், கோட்டுக் கரையும், முடியிட்ட கொட் டைக் கரையும், பாம்பினுரி போன்ற சரிகைக் கரையமைந்த பணிப் போத்தியும் வழக்காற்றி லிருந்தனவாக, 'கொட் டைக் கரைய பட்டுடை' என்ற பொருநராற்றுப் படையா லும், 'நேர்கரை நுண்ணூற் கலிங்கம்' என்ற புறப்பகுதி யாலும், 'பணிப்போத்தி' என்பதனுலும் அறியக் கிடக்கின் றது. கல்விச் சிறப்பைக் கூறும் நாலடியாரில், 'கொடுந் தானைக் கோட்டழகும்..........அழகல்ல' என எதிர் மறுப் பதனுலேயே, இக்காலத்து மக்களால் ஆடையிலுள்ள அருகு அழகு செய்வனவற்றுள் ஒன்ருகக் கருதப்பெற்றது என் பது நன்கு புலனுகும். 'பூந்துகில்,' 'ஒண்பூங்கலிங்கம்' என வரும் பிரயோகங்கள் ஆடையின் அருகில் பூத்தொழில் செய்தலுண்டு என்பதையும், 'வள்ளிக் கலிங்கம்,' 'வள்ளிப் போர்வை' என்பவை ஆடை முழுதுமே கொடியுருவங்கள் அமைக்கப் பெற்றிருக்கும் என்பதையும் விளக்குவனவாம்.

நெய்யப்பெற்ற இடங்கள்:—கலிங்கம் என்பது ஒரு தேசம். அங்கு நெய்யப்பெற்ற ஆடை சிறந்திருந்த காரணம்பற்றி அவ்வாடை கலிங்கம் எனவே வழங்கப்பெற்றது. இக்கா லத்துச் சில ஆடைகள், சேலம், திருநாகேசுரம், துகிலி என வழங்குதலைப்போல மிகுதியாகவும் நயமாகவும் நெய்யப் பெற்ற காரணத்தால் கலிங்கம் எனவே பெயர் பெற்றது எனலாம். தொண்டி என்னும் துறைமுகத்திலிருந்து கப் பல்களில் ஆடை முதலியவை ஏற்றிவந்ததாக சிலப்பதி காரம் கூறும். 'காஞ்சிபுரஞ் சென்ருல் காலாட்டிப் பிழைக்

கலாம்' என்பது இக்காலத்துப் பழமொழி. 'நெசவுத் தொழில் மேற்கொண்டு பிழைக்கலாம்' என்பது இதன் பொருளாம். அதுபோல, காஞ்சி நகரம் முற்காலத்திலும் இத்தொழிலில் மிக மேம்பட்டு விளங்கியது என்பது; 'கண் ணுழை கல்லா நுண்ணூற் கைவினை, வண்ண அறுவையர் வளந்திகழ் மறுகு' என்று மணிமேகலை கச்சிநகர் புக்க போது கூறிய பகுதியால் அறியலாம். பெருங்கதையில், 'வங்கச் சாதரும்' என வருவதை உற்றுநோக்க, வங்கதேசத் தில் சாதர் என்ற ஒருவகை ஆடை நெய்யப்பெற்றமை புல னுகின்றது. சாதர் என்பது, இக்காலத்து, 'சாதாரா' என வழங்கும் உயர்தர ஆடைபோலும். இலக்கண வுரைகளில், 'இப்பட்டுக் சீனம்' என வருவதிலிருந்து, பட்டுத்தொழில் சீனத்தில் மிகுதியாக நடந்தது என்பது அறியப்பெறும்.

இவ்வாறு பஞ்சால் ஆடை ஆக்குதலே யன்றி, மயி ராலும் ஆக்கிவந்தனர் எனச் சிலப்பதிகாரம் கூறும்; நாரி னலும் ஆக்கப்பெற்றதாகப் பெருங்கதையால் அறியப் பெறுகின்றது. இவற்றுள் மயிர் என்பது, 'எலிமயிர்ப் போர்வை வைத்து' என்பன போன்ற பல பகுதிகளிற் சிந்தாமணியிற் கூறப்பெறுகின்றது.

உடுத்தும் முறை:—நம் நாட்டில் ஆடைகளை உடுத்தும் முறையில் பெரும்பாலான வேறுபாடுகள் காணப்பெறு கின்றன. நம் நாட்டுப் பெண்கள் ஒரேயாடையை வளையக் கட்டுகின்றனர். மலையாள நாட்டுப் பெண்கள் இரண்டாடை உடுத்துகின்றனர். திருமுருகாற்றுப் படையில், குறமகள் வெறியாட்டுக் கூறுமிடத்து, 'முரண்கொள் உருவின் இரண் டுடன் உடீஇ' என வரும் பகுதி நிறம் மாறுபட்ட இரண் டாடைகளை மலை வாழ் மகளாகிய குறமகள் உடுத்தினள் என்பதை அறிவுறுத்துகின்றது. ஆடவர்கள் நான்கு முழ ஆடையைப் பெரும்பாலும் உடுத்தனர் என்பது,'உடுப்பவை நான்கே' என்ற செய்யுள் விளக்கும். சிறுவர்கள் ஆடை எதற்காக அணியப்பெறுகின்றதோ அந்நோக்கம் தவறி, ஆடை முழுவதையும் தம் அரையிலேயே சுற்றிக்கொண்டு

திரிந்தனர் என்னும் இயற்கைச் செவ்வி, 'அற்றங்காவார்சுற் றுடைப்பூந் துகில்' என்ற மணிமேகலையால் அணியுறுத்தப் பெறுகின்றது.

நமது பண்டை மக்கள் அந்த அந்தப் பருவங்களுக்கு ஏற்ற ஆடைகளையே உடுத்தினர் என்பது, பின்வரும் ஆதா ரங்களால் அறியலாகும். சிலப்பதிகாரத்து, 'அரத்தப் பூம் பட்டு அரைமிசை யுடீஇ' என வரும் அடிக்குறிப்பில், அரும் பத வுரை யாசிரியர், '**அரத்தம் பூம்பட்டு**' முதலாகத் துகிர்க் கோவை யீருகச் சொன்னவை, '**கார்காலத்துப் பரக்க அணி வன**' எனக் கூறுவதால் செம்பட்டாடை கார் காலத்தில் உடுத்தக்கூடியது என்பது பெறப்படும். சிவந்த நிற ஆடையை வேனிற் காலத்து உடுத்தின், வெயில் வெப் பத்தை வாங்கி உடலுக்குள் செலுத்துவதால், உடல் வெப்ப முற்று நலங்குன்றும் ; கார் காலத்தில் உடுத்தினுல் சூரிய ஒளியிலுள்ள வெப்பத்தை உடலுக்கு ஏற்பித்துக் குளிர் தாக்காதபடி பாதுகாக்கும்.

செந்நிற ஆடை, சூரிய ஒளியுள்ள செந்நிறத்தை மட்டுந் திருப்பியனுப்பும் தன்மை வாய்ந்தது; மற்ற நிறங்களையும் வெப்பத்தையும் இழுத்து உடலுக்குக் கொடுக்கும் என்பது இயற்கைத் தத்துவ நூற்கொள்கை. அதற்கு ஏற்ப, கார் காலத்து, செந்நிற ஆடை உடுத்தினர் என்பது எவ்வளவு ஆழ்ந்த நாகரிகத்தைக் காட்டுகிறது! பருத்தியாடை, வேனிற்காலத்து, உடம்பின் உஷ்ணத்தை வெளிப்போக்கி, நீரை உறிஞ்சும் தன்மையது. பட்டாடை வெளியிலுள்ள சீதோஷ்ணத்தை உடலுக்குள் சேர்ப்பிக்காது ; உடலி லுள்ள உஷ்ணத்தை வெளிப்போகவும் விடாது. ஆத லால், கூதிர் காலத்துப் பட்டாடை உடுத்தினர் என்பதும் அறிந்து இன்புறற்பாலனவற்றுள் ஒன்ரும். பின்பனிக் காலத்து, எலிமயிர்ப் போர்வைகளை உடுத்தினர். எலி மயிர்ப் போர்வையின் வெம்மை, 'செந் நெருப்புணும் செவ் வெலிம்மயிர், அந் நெருப்பள வாய பொற் கம்பலம்' என்ற சிந்தாமணிச் செய்யுளால் விளக்கப் பெறுகின்றது. இன்

னும் சட்டைகளாகவும், சித்திரத் திரைகளாகவும், பட மாடங்களாகவும் ஆடைகளை உபயோகித்தனர்.

வெளுத்தல் :—ஆடை உயர்ந்ததாக இல்லாவிடினும், தூய்மையாக இருக்க வேண்டிய தவசியம். அதற்காக அவ்வாடைகளை வெளுத்து உடுத்தல் வேண்டும். சித்தாந்த சாஸ்திரத்தில், 'வண்ணான் ஆடைகளின் மாசு போக்கு தற்குச் சாணி, உவர் மண் முதலிய அழுக்கை யேற்றிப் புது அழுக்கோடு பழைய அழுக்கையும் மாற்றுதல் போல' என்ற வுவமை காணப்பெறுகிறது. இதனால் ஆடையைத் தூய்மை யுறுத்தும் முறை நன்கு விளங்குகிறது. பிறகு கஞ்சி யிட்டு மடித்து வைத்தல் மரபென்பதை, 'கழுமடிக் கலிங்கம்' என்னும் சொற்றொடர் காட்டும். 'அறனில் புலத்தி யெல்லித் தோய்த்த புகாப்புகர் கொண்ட புன்பூங் கலிங்கம்' என்பது ஆடை வெளுப்பவள், ஆடையை, வடித்த கஞ்சியில் நனைத்துக் காய வைத்தனள் என்பதைக் குறிக்கும். வெளுத்த ஆடை நறு மணங் கமழுதற்காக வாசனைப் புகைகளை ஊட்டி அணிந்தனர் என்பதும் நம் முன்னோரது சிறந்த நாகரிக மிகுதியை நவிலும் பகுதி யாகும்.

இது காறுங் கூறியவாற்றால், நந்தமிழ் மக்களது நாகரிகத்திற்கு முன்னறிகுறியான கைத்தொழிற் சிறப்பும், சுகானுபவத் திறங்களும், ஆடை யியல்பும், கால நிலையும் அறிந்து அணிந்து கொள்ளும் தன்மையும் விளங்கிநிற்கின்றன.

---

5. பெருந்தலைச் சாத்தனார்

[ஆ. கார்மேகக் கோனார்]

நெடிய குட மலையின்கண் பிறந்து, வான் பொய்ப்பி னும் தான் பொய்யாது, பன்னிறப் பூக்களாகிய போர்வை யணிந்து, இரு கரை மருங்கினும் திரையாகிய கரங்களால் வாரிப் பொன்னையும், மணியையும் கொழித்துப் புனல்

பெருகி வரும் காவிரி பாய்தலால், வேலி யாயிரம் விளை யுளை விளைத்து, வளத்தால் மிக்கு விளங்குவது, சேணுடுகளி னும் தன் பெயர் நிறுவிய சோணுடென்பது.

இச்சோணுட்டின்கண், காவிரிக்கரை மருங்கிலே விளங் குவது காவள மிகுந்த ஆவூர் என்னும் அழகிய ஓரூர். இவ் வூர்ப்புற மெல்லாம், காவிரியின் தெள்ளிய தீம்புனல் பரந்து பாய்தலான், தெங்கு, மா, பலா, வாழை, கமுகு முதலிய பயன் மிக்க மரங்கள் பருவத்தா லன்றியும் பழுத்து, உருவத்தால் ஓங்கித் திகழும். விளைவருத கழனி களில் செந்நெற் பயிர்கள், கன்னல்போல் பணைத்து வளர்ந்து, தோகை விரிந்து, சூற்கொண்ட பச்சிளம் பாம்பு போற் பொதி கொண்டிருந்து, வெளிப் போந்து, கீழ் மக்க ளது செல்வம்போல் தலையை நேர் நிறுவி நின்று, தேர்ந்த நூற் கல்வி சேர்ந்த மாந்தர்போல் உள்ளீடு கொண்டு, தலை வணங்கி, முதிர்ந்து படிந்து கிடக்கும். அவற்றை, இரப் போர் சுற்றத்தையும், புரப்போர் கொற்றத்தையும் தங்கள் உழவு சாலில் விளைப்போராகிய உழவர்கள் அறிந்து, சும் மையிற் கொண்டு போய்க் களத்திலிட்டுக் கடாவிட்டு, அதரி திரித்து, நென்மணிகளைக் குவை செய்து, அரசர்க்கு ஆறில் ஒன்று நல்கிப் பின்னர் ஏர்க்களம் பாடும் பொருநர் முதலி யோர்க்கு முகந்து கொடுத்து, எஞ்சியவற்றைப் பண்டிகளி னுய்த்து, அகஞ் சேர்த்து, செல்விருந்தோம்பி, வருவிருந் திற்கு எதிர் நோக்கி நிற்பர். இத்தகைய தாளாண்மை மிக்க வேளாண் குடியினர் பலர் இவ்வூரின்கண் குழுமி வாழ்க்கை புரிந்து வருவாராயினர்.

இவ்வூரின்கண், வேளாண் மரபிலே, இற்றைக்கு ஆயி ரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர், மூலங்கிழார் என்னும் புலவர் பெருந்தகையார் ஒருவர், தமிழ் உலகு உய்யத் தோன்றினர். இவர் தண்டமிழ் மொழியில் வழங்கிய இலக் கண இலக்கிய நூல் துறைகளிலும், சமயச் சார்பான வேதாசார ஆகம அளவை முதலிய ஏனைய கலைகளினும் மிகுந்த புலமை வாய்ந்து, அச்காலத்துத் தமிழ் நாட்டு முடி

யுடை வேந்தராலும், சிற்றரசர், பெருஞ்செல்வர் பலராலும் நன்கு மதிக்கப்பெற்றுப் பெரும்புலவராய் விளங்கினர்.

இவர் தம் இல்லக்கிழத்தியோடு இல்லற வொழுக்கினை முட்டின்றி இனிதாய் நடாத்தி வருங்கால், இவர் தம் மனைவியார் ஓர் அருமந்த ஆண் மகவைக் கருவுயிர்த்தார். புலவர், அக்குழவிக்குச் **'சாத்தான்'** என்னும் தம் குலதெய்வப் பெயரைச் சார்த்திப் பொன்னே போற் போற்றி வளர்த்தனர். குழந்தையும் இனிதாய்ப் பிறை மதிபோல் நாடொறும் வளர்ந்து விளங்கிக் குப்புற்றுத் தவழ்ந்து, குறுநடை நடந்து, தனது பூங்கையால் பெற்றோர் உண்ணும் அடிசிலை அளைந்தும், துழாவியும், இட்டும், தொட்டும், யாழினும் இனிய மழலை மொழிகளை மொழிந்தும், இருமுதுகுரவரைக் களிப்புறச் செய்தது. குழந்தை தன் உடலளவிற்குச் சிறிது பெரிய தலையை உடையதாயிருந்ததுபற்றி, அது கண்ட பெரியாரெல்லாம், **'பெருந்தலைச் சாத்தன்'** என அழைத்து, 'பிற்காலத்து, இவன் புலமை சான்று வீறி விளங்கும்' என்று கூறி வியந்தனர்.

இங்ஙனம் வளர்ந்துவரும் பெருந்தலைச் சாத்தர் ஐந்தாண்டு நிறைந்து விளங்கினர். பின்னர்த் தந்தையார் பிள்ளைக்கு நன் முழுத்தத்தில் எழுத்தறிவிக்க, புதல்வர், ஓர் கணக்காயரிடம் நெடுங்கணக்குக் கற்றுச் சொற்றொடர்களை வாசிக்கும் பயிற்சியடைந்து, இயலிசை நாடக விலக்கணங்களின் சூத்திரங்களையும், இலக்கிய மூலங்களையும் நெட்டுருச் செய்து முடித்தார். இங்ஙனம் இள வயதிற் செய்ய வேண்டிய பயிற்சியில் சில ஆண்டுகள் கழிந்த பின்னர், சாத்தர், புலமை மிக்க தம் தந்தையாரிடத்துக் கற்க வேண்டிய தமிழ் மொழியிலுள்ள பேரிலக்கண இலக்கிய நூற் பொருள்களை யெல்லாம் சிலையில் எழுத்துப்போல் மனதிற் பதியக்கற்று, நோக்கமைந்த பாக்களை விரைவில்யாக்கும் வன்மை பெற்றுத் தம் தந்தையார் மூலங்கிழார்போல் தமிழகம் புகழும் ஆன்ற புலமையிற் சிறந்து, நிறை மொழி வாய்ந்த பெருமையுடையோராய் விளங்கினர். புலவரிடம் அறிஞரெல்லாம்

நன் மதிப்புடன் ஒழுகிச் சாத்தனர் என உயர்வு தோன்ற அழைத்தனர்.

இங்ஙனம் சீரிய புலமை மிக்க பெருந்தலைச் சாத்தனர் மணப் பருவத்தை அடைந்ததைக் கண்ட இவர் தம் தந்தையார், இவர்க்கோ பெண்மை நலங்கனிந்தொழுகும் குல மங்கையைத் தேடிப் பெற்று, மண வினையை முடித்தனர். சாத்தனரும், தம் கிழத்தியிடத்துக் காதற்கிழமை மிகுந்து, இன்புற்று, இல்லற சகடத்தை இனிதாய்ச் செலுத்தினர்.

இங்ஙனம் சில ஆண்டுகள் கழிந்த பின்னர், புலவர்களை அணுகிப் புடமிட்டு அவர்களது பொங்கொளியை எங்கும் பரப்பும் வறுமை யென்னும் பெருந்தீ இச்செந்தமிழ்ச் செல்வரையும் தீண்டிற்று. இத்தன்மைத்தான வறுமை மிக்க காலத்தும், புலவர் தமது செம்மையிற் குன்ருதும், குன்றுபோற் றுளங்காதும் நின்றனர். நாளுக்கு நாள் நல்குரவு மிகுதலால், புலவரது தமிழகம், உண்டற்குரிய பண்டங்கள் இலவாகி, அடுப்பு சமைத்தற்ருெழிலை மறந்து, காளாம்பி பூக்கத் தொடங்கிற்று. மனைவியும் மக்களும் சொல்லொணுத் துன்பத்துட் சுழன்றனர்.

புலவர் இவற்றையெல்லாம் கண்டு, கவன்று, 'கல்விச் செல்வம் பொன்மலரை யொக்கும்; பொருட் செல்வம் அதன் நறிய வாசனையை யொக்கும். ஆகையால் கல்வியுடைமையோடு பொருளுடைமையும் இவ்வுலக வாழ்க்கைக்கு இன்றியமையாததன்ருே; அதனிடத்து நாம் கருத்துச் செலுத்தாமையானன்ருே இங்ஙனம் நம்மை இன்மைப் பிணி இறுகப் பிணித்தது' என்று தம்முள் எண்ணி, அப்பொருளைப் பெறுதற்குச் செல்வர்க்கே ஈந்து சிறப்புச் செய்யும் மாந்தரிடம் செல்லாது, புலவர் பெருமக்களது கல்வி யறிவின் மீக்கூர்வை உணர்ந்து, அவர்களை மதிக்கும் ஒண்மையும் வண்மையுமுடைய அரசர்கள், செல்வர்கள், வள்ளல்கள்பாற் சென்று, அவர் தம் உண்மைக் குணங்களை உள்ளபடி தீந்தமிழ்ச் செய்யுளாற் பாடிப் பெறும் பரிசில் வாழ்க்கையையே கைக்கொள்ளக் கருத்துக்கொண்டார்.

புலவர் காலத்தில் சோழநாட்டு அரசியல் உரிமை பற்றி நடந்த போரில் **நெடுங்கிள்ளி** யென்னும் சோழன் காரியாற்றில் துஞ்சிய பிறகு, அவன் மகன் **கோப்பெரு நற்கிள்ளி** உறையூரில் முடி சூட ஆரம்பிக்க, அதுபற்றிப் புகார்ச் சோழர்க்கும் உறையூர்ச் சோழர்க்கும் பெரும் போர்கள் பலமுறை நடந்து, சோழநாடு குழப்பத்துட் பட்டிருந்தது. அதனால் புலவர், தம் நாட்டரசர்களிடம் செல்லுதற்கியலாது, சேர நாட்டின் ஒரு பகுதியான கொங்கு நாடு நோக்கிப் பரிசில் காரணமாகப் புறப்பட்டு வருவாராயினர். வரும் வழியில் இவரைப்போல் வறுமையால் வருந்திப் பின்னர், முதிர மலைத் தலைவனும் பெருங்கொடையாளனுமாகிய **குமணன்** என்னும் அரசனை அடைந்து பாடி, அவனாற் கொடுக்கப்பட்ட களிற்றின் மீதேறி பெருஞ் செல்வத்துடன் வரும் **பெருஞ் சித்திரனார்** என்னும் புலவர் எதிர்ப்பட்டனர். எதிர்ப்பட்ட பெருஞ் சித்திரனாரைப் புலவர் நன்கறிந்தவராகலின், உவகையுடன் உற்று நோக்கி நின்றார். பெருஞ் சித்திரனாரும் சாத்தனாரைக் கண்ட அளவில் யானையினின்றும் இழிந்து, புலவரை அணுகி, இரு கரங்களையும் பற்றிக் கொண்டு, 'உழுவலன்புடைய புலவீர்! நும் நலிவிற்குக் காரணம் யாதோ ?' என வினவப் புலவர் தமது இன்மைத் துன்பத்தை யெல்லாம் கூறினர். பின் புலவரை நோக்கிப் பெருஞ் சித்திரனார், 'நண்பீர்! கவலற்க; முதிர மலைக்குரியவன் முதிர்ந்த கல்வியுடையவன்; பாவாணர் மிடிக்குப் பகைவன்; புலவர்க்குப் பொன்னும், களிறும் வரையாதளிக்கும் வள்ளல்; 'குமணன்' என்னும் பெயருடையான்; அவன் பாற் செல்லுமின்; இன்னே நும் வறுமை நோய் களையப் பெறுவீர். யான் பெற்ற இப்பெருஞ் செல்வமெல்லாம் அவன் மனமுவந்தளித்தவையாம்' என்று தாம் பெற்ற பெருவளங்களை அறிவுறுத்திப் புலவரைக் குமணன் என்பவனிடத்து ஆற்றுப்படுத்தினர். அதனைக் கேட்ட சாத்தனார், வழுக்கலுடையுழி ஊன்றுகோல் பெற்றதுபோல் மனந் தேறிப் பெருஞ் சித்திரனாரிடம் விடைபெற்று, ஆங்

காங்குத் தங்கி, வழிக்கொண்டு குமணனது நாடு நோக்கி விரைந்து வந்தடைந்தனர்.

புலவர் ஈண்டு வருவதற்குச் சின்னுள் முன்னர், குமணனுக்கு இளையோனுகிய இளங்குமணன் என்பான், தன் தமயனுக்கு அவனது மாரியனைய வரையா வள்ளன்மையாற் பெரும் புகழ் பெருகுவதையும், அரச செல்வம் அனைத்திற்கும் அவனே உரியவனுய் விளங்குவதையும் கண்டு, அழுக்காறு கொண்டு, பல நஞ்சனைய வஞ்சனைச் செயல்களால் அவனைக் கோறற்கு வழி தேடினுன். அதனை யறிந்த குமணன், 'அழியும் மாலைத்தாகிய இச்செல்வங் காரணமாக வன்றோ எம்பி இத்தகைய தீச்செயலை என்பாற் செய்யத் துணிந்தனன்' எனத் தன்னுள்ளூற நினைந்து, அரச செல்வத்தில் வெறுப்புற்றுச் செல்வ மனைத்தும் தம்பிக்கே உரிமை யாக்குதற் பொருட்டுத் தான் நகரத்தை விட்டுச் சென்று, காடு சேர்ந்துறைந்தனன்.

இளங்குமணன் செல்வமெல்லாவற்றையும் தானே கவர்ந்து கொண்டதனேடமையாது, 'குமணன் ஓடியொளித்த காட்டினுட் சென்று, அவனது தலையைத் துணித்துக் கொணர்வார்க்கு விலையாகச் செம்பொன் கோடி நல்குவேன்' என்று பறையறையவும் செய்தனன். குமணன் நாடடைந்த புலவர், இச்செய்திகளை யெல்லாம் செவியுற்று, வருந்தி, வன்கண்ணனுகிய இளங்குமணனிடம் செல்லுதற்கு ஒருப்படாது, காடுபற்றி யிருந்த அருங்குணச் செம்மலாகிய குமணனையே காணுதற்கு விரும்பிக் காடுநோக்கிச் சென்றனர். சென்ற புலவர், அலைந்து வருந்தாது திருவருள் கொண்டுய்த்தமையான் எளிதிலேயே குமணனைக் காட்டிடைக் கண்டார். காணலும், களிப்புற்று, அவனை அணுகி, 'சூழ்புலவோர் பசி தொலைக்கும் முன்னவா! வாழிய! வாழிய!' என்று வாழ்த்தினர். வாழ்த்தொலி கேட்ட குமணன் புலவரைக் கண்ணுற்று, 'செந்தமிழ்ச் செல்வீர்! வருக! வருக! நும் வரவு நல்வரவாகுக! நீவிர் அரிய கானக வாழ்க்கையையுடைய என்னிடம் வருதற்கு யான்

முன்னம் பண்ணிய புண்ணியம் என்னையோ ?' என அன்பு கனிய முகமனுரைத்துப் புலவரைத் தழுவி, அமரச் செய்தான்.

புலவர் குமணனை நோக்கி, 'ஏ குணக்குன்றே! எட்டி, அகத்தருகில் பழுத்திருப்பினும் அதனைக் கிட்டுவாரெவர்? சுவை கெழுமிய தேன், சேய்மைக் கண்ணுள்ள கானகத்தில் உயர்ந்தோங்கிய கொம்பிலிருப்பினும் அதனையே நாடிப் பெறற்கு விரும்புவர் உலகோர்' என்று கூறிவிட்டுப் பின்னரும், 'சமைத்தற்றொழிலை ஒழிந்தமையால் தேய்வின்றிப் பக்கம் உயர்ந்து தோன்றும் அடுப்பின் கண் காளான் பூத்துக் கிடக்க, உடம்பு மெலியும் பசியால் வருந்திப் பாலின்மையால் வறண்ட மார்பைச் சுவைக்கும் தோறும் பால் வராமையால் அழுகின்ற பிள்ளையது முகத்தைப் பார்த்து, அவல நீர் ததும்பும் கண்ணையுடைய என் மனைவியது வருத்தத்தைக் கண்டு, இந்த வருத்தம் தீர்த்தற்குத் தக்கவன் நீ யென நினைந்து, நின்பால் வந்தேன்; நல்ல போர் செய்யுங் குமண! எனது வறுமை நிலையை நீ உள்ளவாறு அறிந்தாயாயின், நீ நல்ல யாழையும் மத்தளத்தையுமுடைய கூத்தரது மிடியைக் கெடுக்கும் குடியின் கட் பிறந்தோய் ஆதலால், உனது வறுமையுற்ற இந்நிலைமைக் கண் வளைத்தாயினும் பரிசில் கொள்ளாது விடேன்' என்று தமது வறுமைத் துன்பத்தைச் சித்திரத்து வரைந்து காட்டியதுபோற் காட்டிக் கல்லுமுருக முருகப் பாடி நின்றார்.

இதனைக் கேட்ட குமணன், 'அந்தோ! என் செய்வது! இப்புலவர் துன்பம் நாடிழந்த அதனினும் பெரிதாயிருக்கின்றதே! இப்புலவர் பெருந்தகையின் வறுமை நோய் களையும் மதுகையின்றி, நான் அவமே உடற்பொறை சுமந்திருப்பது பேரிழிவன்றோ!' என்று பல பல தன்னுட் கூறி வருந்தி, 'சாதலின் இன்னாதது இல்லை, இனிதூஉம், ஈதலியையாக்கடை' என்ற தேவர் திருவாக்கின் படி, வறியார்க்கு ஒன்று ஈய முடியாவிடத்து இறப்பதே

இறப்ப இனிதாகும்' என ஆழ்ந்து சூழ்ந்து நிற்குங்கால், தனது இளவல் தன் தலை கொணர்வார்க்கு விலையாகப் பொன் கோடி தருவதாய்ப் பறையறைவித்திருக்கும் செய்தி தன் நினைவிற்கு வந்தது; வரலும் குமணன், வறியோர் புதை பொருள் கண்டதுபோல், களிப்பெனும் கடலுள் ஆழ்ந்து, 'இத்தகைய எளிவந்த நிலைமைக் கண்ணும், யான் 'இலன்' என்னும் எவ்வம் உரையாத பெரும் பேறு பெறுமாறு செய்த எம்பியினும் இனியார் இனி யார்? இவ்வுலகத்தில்' என்று கூறித் தன் தலையைப் புலவர்க்கு நல்குதவில் முனைந்து நின்று, புலவர் பெருமானாகிய சாத்தனாரை நோக்கி,

'அந்தநாள் வந்திலிர் அருந்தமிழ்ப் புலவீர்
இந்தநாள் வந்துநீர் நொந்தனி ரடைந்தீர்
தலைதனைக் கொண்டுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுநும் வறுமைநோய் களைமின்'

என்று கூறி, 'தலையைக் கொய்து கொண்மின்' என்று புலவர் கரத்தில் தன் வாளைக் கொடுத்தனன்.

இந்நிலையிற் புலவர் என் செய்வார்? நிலை யில்லாது செல்லும் செல்வத்தின் பொருட்டுத் தலையைப் பெற்று, என்று மழியாப் பழியை யெய்த ஒருப்படுவரோ? உடனே துணுக்குற்றார்; துடி துடித்தார்; வேர்த்தார்; வெருண்டார்; 'வாளை வாங்கத் தாழ்ப்பின், தானே துணிந்து தலையைத் துணித்தாலும் துணிப்பான்' என்று கருதி, விரைந்து அதனை வாங்கிக் கொண்டு, குமணனை நோக்கி, 'தலைக் கொடையாளியே! இவ்வமயம் நீ உன் தலையைக் கொடுத்தலால் உனக்குப் பெரும் புகழும், அதனைப் பெறுதலால் எனக்கு அழியாப் பழியுமன்றோ உண்டாகும். 'பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர், கழிநல்குரவே தலை' என்பது தமிழ் மறையின் முறையன்றோ? செல்வமோ இன்றொருவரிடமும், நாளை வேறொருவரிடமும் நிலையின்றி மாறி மாறிச் சகடக்கால் போற் சுழன்று வரும் தன்மை யுடையது; இது பற்றி உலக முள்ளளவும் நீங்கா

வசையை யான் அடைதல் தகவுடையதாமோ? உன் தலை பெறுதல் எனக்கு இன்றியமையாததாயின், அதனை யான் வேண்டும்போது தெரிவிப்பல்; அவ்வமயம் தருவாயாக; அந்நாள்காறும் அதனை நீ குறிக்கொண்டு காத்தல் வேண்டும்; இங்ஙனம் அதனைக் காத்திடுதற்கு ஒருப்படுவையாயின், அதுவே நின்பால் யான் பெற்ற பெரும் பரிசிலாகும்' என்று கூறிப் பின்னரும் அவனை நோக்கி, 'இரந்தோர்க்குக் கரவாது தம் கைப்பொருள்களைச் சால ஈத்துவந்த **கடையெழு வள்ளல்கள்** இப்போது இறவாதிருப்பரேல், அவர் புகழெல்லாம் நின் புகழ்முன் இரவியின்முன் மின்மினியாகுமன்றோ! தன்னை வந்தடைந்தோரது இன்னலை நீக்குதற்குத் தன்னையே நல்கிடத் துணிந்த நினது அருட்டிறத்தை நோக்கின், **தேவர்கோனுக்கு** அன்புடன் தன் என்பீந்த **ததீசி முனிவ**ரன்றி உன்னை யொப்பார் வேறு யாவருளர்?' என்று அவனது ஒப்பற்ற உயிர்க் கொடையை வாயார மனமாரப் புகழ்ந்து கூறிவிட்டு, 'இவ்வாளோடு சென்று, குமணனது பெருங் குணங்களை இளங் குமணனுக்கு எடுத்துக் காட்டி, எவ்வாற்றாலேனும இருவரையும் நட்பாக்குவித்துக் குமணனை முன்னைய அரச நிலையில் நிறுவுவேன்' எனத் தம்முள் அறுதியிட்டுத் தமது வறுமைத் துன்பத்தையும் அறவே மறந்து, இவ்வரும் பெருங் காரியத்தை முடிப்பதற்கு முனைந் தெழுந்து, குமணனை நோக்கி, 'அரசே! சின்னாட்களுக்குள் நின்னை யான் வந்து காண்பேன்' என்றுகூறி விடை பெற்றுக்கொண்டு, இளங் குமணன் அவைக் களம் நோக்கி வாளுங் கையுமாய் விரைந்து வந்தார்.

இளங் குமணனே, செல்வக் களியாட்டயர்ந்து, இறுமாந்து, குமணன் தலை கொணர்வார் ஒருவரையும் காணப் பெறாததால் கவன்று, அமைச்சர் புடை சூழக் கொலு மன்றத்து அரியணையில் வீற்றிருந்தான். புலவர், அந்நாளோலக்க மண்டப வாயிலைக் குறுகி, அரசனுக்குத் தம் வருகையைத் தெரிவிக்குமாறு காவலாளரை வேண்டலும், அவர்

கள் சென்று, 'வாளுங் கையுமாய் ஒருவர் வாயிலின்கண் வந்துளார்' என இளங் குமணனிடம் தெரிவித்தனர். இளங் குமணன் மகிழ்ந்து, 'அவரை இன்னே வரவிடுதிர்' என்று பணித்தலும், வாயிலோர் புலவரை மன்றத்துள் புக விட்டனர். புலவரும் உட்புகுந்து, அநீதியெல்லாம் ஓருருவெடுத்து வீற்றிருப்பதுபோல் இருக்கும் இளங் குமணனைக் கண்டார். இளங் குமணன் புலவர்க்கு இருப்ப ஆசன மளித்து, அவரது வாயிலிருந்து வரும் சொற்களை எதிர்பார்க்கும் குறிப்போடிருந்தான்.

புலவர் அவனை நோக்கி, 'எப்பொருளும் நிலையாத இயற்கையையுடைய இவ்வுலகத்தின் கண், நிலை பெறுதலை விரும்பினோர் தம்முடைய கொடையாற் புகழை இப் பூமியினிடத்தே என்றும் நின்று நிலவும்படி நிறுத்தி விட்டுத் தாங்கள் இறந்தார்; அடைதற்கரிய பெருஞ் செல்வராயிருந்தும், சிலர், வறுமையால் இரப்போர்க்கு ஒன்றும் கொடாமையினாலே பழைய கொடையுடையார் போலப் பின்னும் தம்பெயரை நிறுத்தி, உலகத்தோடு இடையறாது தொடர்ந்து என்றும் விளங்குதலை அறியாது போயினர். ஆகவே, உலகத்தில் என்றும் நிலைபெறுதலை விரும்புவோர் புகழை நிறுத்துதலும், புகழை நிறுத்தாதோர் நிலைபெறாதோராதலும் இவ்வாறாதலான், சிறந்த யானைகளைப் பரிசிலர்க்கு மிகுதியாகக்கொடுக்கும் அழிவில்லா நற்புகழை யுடையவனும், உனது அன்பிற்குரிமைபூண்ட அண்ணலுமான குமண வள்ளலைக் காட்டிடத்தே தேடிக் கண்டு பாடி நின்றேனாக, அவன், 'பெருமை பெற்ற பரிசிலன் பரிசிலனாய் வாளா வாடினனாகத் திரும்பிப் போதல் நான் என் நாட்டை இழந்ததினும் மிக இன்னாது' என நினைந்து, அவ்வமையத்துத் தன்னிடத்துத் தன்னிற் சிறந்தபொருள் வேறொன்றும் இல்லாமையால், தன் தலையைக் காட்டிக் கோடி பொன் நான் பெறுமாறு, 'தலையை அரிந்து கொண்மின்' என்று தன்வாளை என்கையிற் கொடுத்தான். ஆதலால், அவ்வாளுடன் வென்றி மிகுந்த உவகை

யோடு வந்தேன். இத்தகைய அருட் பெருங்கடலாகிய உன் முன்னவனுடன் நீ செற்றம் கொள்ளுவதற்கு உன் மனம் எங்ஙனம் துணிந்தது? உடன்பிறப்பு என்னும் பாசத்தை எவ்விதம் களைந்தாய்? வையமும், அரசும், வாழ்வும் வாங்குதல் உனது கருத்தாயின், அதனை நீ சிறிது தெரிவித்திருப்பின், பிறரது இடுக்கண் களையத் தன் உடலையும் உயிரையுமே கொடுக்கும் வள்ளியோனாகிய குமணன், உனக்கு அவற்றைக் கொடுக்கச் சிறிதும் மறுத்துரைப்பனோ? நிலைபேறில்லா இச் செல்வத்தின் பொருட்டோ அமரர்க்கும் அரிதாகிய அன்பின் செல்வத்தை அழித்தாய்! அந்தோ! 'உடன் பிறப்பில்லா உடம்பு பாழ்' என்பது நீ அறியாததோ? நீயும் அவனும் நேய நெறி தவறாது வாழ்வீர்களாயின், பகையரசரெல்லாம் பணிந்து நிற்கப் புகழும் வாழ்வும் உங்கட்கு வளருமன்றோ? பரதன் தன் தாயாகிய கைகயன் மகள், இராமனைக் காட்டுக்கோட்டி, அயோத்தியின் அரசியலைத் தனக்காக்கியதை அறிந்து, தன் அன்னையை, 'கைகயன் மகள் கைகயன் மகளேயாயினை' எனப் பலவாறு வெறுத்துக் கூறிவிட்டு, 'இராமனை அயோத்தி நகர்க்கு அழைத்து வருதலின்றி அயோத்தியில் நான் அடியிடுவதுமில்லை' எனச் சூளுறவுசெய்து, இராமன் சென்ற திசை நோக்கித் தொழுதோடி, 'முடி சூட வருக' என்று குறை யிரந்து, கடைசியாக, 'பாதுகையேனும் தருக' என்று வேண்டிப் பெற்று, முடி மீதணிந்து வந்து, அயோத்தி புகாது, நந்தியங்கிராமம் புகுந்து, இராமன் குறித்த எல்லையை எதிர்பார்த்து, அதில் ஒரு கணமேனும் குறைவுபடின் தீப்பாயத் துணிந்து நின்ற அவனும் ஒரு தம்பியன்றோ?

ஈருடலும் ஓருயிருமாக இருத்தற்குரிய நீங்கள் இங்ஙனம் உள்ளம் பிளவு பட்டிருப்பீர்களாயின், அது பிறரால் எள்ளி நகையாடற் கேதுவாகுமன்றோ! என்று இவ்வுறுதிப் பொருளாகிய தெள்ளமுதத்தைத் தீஞ் சுவை யொழுகும் சொற் குழுவாகிய வலம்புரிச்சங்கால் எடுத்துப் புகட்டினார். இவ்வமிழ்தம் இளங் குமணனது செவிவாய்ச் சென்று, உள்

ளத்திற் சேர்தலும், அங்குக் குடிகொண்டிருந்த வஞ்சமென்னும் நஞ்சமகன்று, சகோதர வாஞ்சையென்னும் வெள்ளம் ததும்பிற்று. உடனே இளங்குமணன், தன் தமயனுக்குத் தான் இழைத்த தீங்கையெல்லாம் நினைந்து நினைந்து இரங்கி, 'அந்தோ! என்செய்வேன் பாவியேன்!' என்று பலவாறு புலம்பி, நாவீறு படைத்த நாவலர் பெருமானை நோக்கி, 'பாவப் படுகுழியில் வீழ்ந்த பதடியைக் கைதூக்கி உய்விக்க வந்த கருணைவாரிதியே! என் அண்ணலை அழைத்து வந்து, அரியணையிலமர்ந்து மறுபடியும் செங்கோலோச்சு மாறு புரிவது நும் கடமையாகும். நுஞ்சரணேயே நெஞ்சரணுகக்கொண்டேன்' என்று வேண்டி நின்றான். தன் அறிவின் மாட்சியாலும், சொல் வன்மையாலும் உலக இயற்கையையே ஒரு கணத்தில் மாற்றத்தக்க ஆற்றல் படைத்த பெரியோர் முனைந்து நின்று செய்யப் புகுந்தால், இப்பெற்றித்தான கருமங்கள் இடைமுறிந்து வீழ்ந்து படுதலும் உண்டோ?

புலவர், தம் எண்ணம் முற்றியதுபற்றி உண் மகிழ்ந்து, இளங்குமணனைத் தேற்றி, அங்ஙனமே செய்வதாகக் கூறி, அவனைக் குமணனிருக்கும் காட்டிற்கு அழைத்துச் சென்றனர். அமைச்சரும், நகர மாந்தரும் உடன்சென்றனர். புலவருடன் சென்ற இளங்குமணன், குமணனைக் கண்டதும் விரைந்தோடி, அவனது அடிப்போதை முடிக்கணிந்து இரு கரங்களாலும் பற்றிக்கொண்டு, 'அண்ணலே! தெரியாது சிறியேன் செய்த தீமைகளை யெல்லாம் பொறுத்தருளி, ஒளியாரும் மணிமுடி சூடி, உலகைப் புரந்தருளி, அடியேங்கள் உயிர் வாழக் கடைக்கணித்தருளல் வேண்டும். பெருந்தகையோர், சிறியோர் செய்த பிழையனைத்தும் பொறுத்தருளுதல் அவர் தம் பெருந்தகைமைக் கியற்கையன்றோ? நீ இருந்தாண்ட அரியணையில் யானிருந்தாளுதல், அரிமா இருந்த பூந்தவிசில் நரிமா இருப்பதை யொக்கும். உன்னைக் கொல்லுதற்கு நினைந்த தன்மையை நினைக்குந்தோறும் என் மனமே என்னைக் கொல்லுகிறது; இனித் தாழ்க்காது நீ நாட்

டிற்கெழுந்தருளி முடி சூடாவிடின், உன் அடிக்கீழ் வீழ்ந்து உயிர்துறப்பன்' என்று கழிவிரக்கங் கொண்டு கதறி வேண்டி நின்றனன்.

குமணன், தம்பியையும், புலவரையும் இனிமையுடன் நோக்கி, 'எனக்குக் காடுறை வாழ்க்கையே நாடுறை வாழ்க்கையினும் சால நலம் பயப்பதாயுள்ளது. இதனை நுகர்ந்த என் மனம் இனி அதனை விரும்புமோ! அமிர்த முண்டார் கடுவுண்ணக் கருதுதலும் உண்டோ! எம்பி! நீயே உலக மெல்லாம் ஒருகுடைக்கீழ் வைக, அரசுரிமை தாங்கி ஆள்வாயாக. இதுகாறும் நீ எனக்கு ஒரு சிறிதும் இன்னல் விளைத்ததாக என் மனம் எண்ணியதில்லையே; அங்ஙனமாகவும், நீ என்னைப் பிழைபொறுத்தருள வேண்டுமென்பது எற்றிற்கு? இப்போது நீ என்னை நாட்டிற்கழைப்பதே பெரும் துன்பந்தரும் செயலாக இருக்கின்றது' என்று கூறினான். அது கேட்ட இளங்குமணனும், நகரமாந்தரும் புலவரது திருமுகத்தை ஒருமுகமாய் நோக்கி நின்றனர்.

புலவர் குமணனைப் பார்த்து, 'ஏ! தலைக்கொடையாளியே, உன் தலையை என் தலையாக அளித்ததனை மறந்தனையோ! உனக்கு அத்தலையில் யாது உரிமையுளது? என் தலையில் முடிபுனைய நான் நினைத்தால், அதற்கு யாது தடையுளது?' என்று குமணன் மறுக்கலாகாவகைத் திறம்படவுரைத்துத் தம் கருத்தை வெளிப்படுத்தினர். குமணன், புலவர் திருவாக்கை மறுத்தற் கஞ்சி, 'தோன்றாத் துணையாய் நின்று இயக்கும் இறைவன் திருவிளையாடல் இருந்தவாறென்னே!' என உன்னி, இருவர் தம் வேண்டுகோட்கும் இணங்கினன். கவியரசர், அரசரிருவருடன் காட்டினின்றும் போந்து, நகரத்துட் புகுந்து, குமணனை அரசுகட்டிலில் அமரச்செய்து, தமது திருக்கரத்தால் மணிமுடியை எடுத்தணிந்தார். ஊரினர் யாவரும் உவகைக் கடலுள் மூழ்கித் திளைத்தனர். இளங்குமணன், குமணனது குறிப்பின் வழி நின்று, அவனிட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு ஒழுகுவதே தனக்குப் பெரும்பேறாகக் கொண்டான். நாடு பண்டு

போல் வளஞ் சிறந்து, பசி, பிணி இன்றி, வளமுற்றுத் திகழ்ந்தது.

பின்னர்க் குமணன் புலவரது அளக்கலாகாத அறி வாற்றலுக்கும், அருட்பெருங் குணத்துக்கும் வியந்து, மகிழ்ந்து, அவரது கரங்களை அன்புடன் பற்றி அழைத்துச் சென்று, நிதிச்சாலையைக் காண்பித்து, 'புலவரே! இவை யனைத்தும் உமவேயாகும்; ஆகையால், வேண்டுவன வேண்டு வன நீவிர் எடுத்தருள்க' என்று கூறினன். புலவர், 'அரசே! நின் பொற் கரத்தால் கொடுப்பது எதுவோ, அதுவே எம் குச் சாலும்' என்றுரைக்கக் குமணன், புலவர், 'போதும் போதும்' என மறுக்கும்படி பொன்னும், மணியும், மத மாவும், பாய்மாவும் வழங்கித் தன்னாட்டிற் சிறந்த விளை புலங் கள் பலவற்றையும் முற்றூட்டாக அளித்தனன்.

புலவர் அவற்றையெல்லாம் பெற்று மகிழ்ந்து, தமது ஊருக்குச் செல்லும் விருப்பைக் குறிப்பித்து, அரசனிடம் விடைவேண்டினர். அவன் புலவர் பிரிவுக்கு வருந்தி, அரி தில் உடன்பட்டுப் புலவரை நோக்கி, 'புலவீர்! அடிக்கடி எனது நாளோலக்கம் நுமது திருமுகக்காட்சியைப் பெறு மாறு அருள் பண்ணவேண்டும்' என வேண்டி, ஏழடி பின் நடந்து விடை யீந்தான். புலவர், பொற்குவியலோடும், ஏனைய வரிசைகளோடும் சிவிகை ஊர்ந்து, தமதூரை அடைந்து, மனைவி மக்களைக் கண்டு, மகிழ்வு பூத்து, வறு மைப் பிணி நீங்கி, இன்புற்று வாழ்ந்திருந்தார்.

---

6. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

[அ. சிதம்பரநாதஞ் செட்டியார், எம். ஏ.]

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நம்மில், ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே" என முழங்கினர் கவி ஞர் சுப்பிரமணிய பாரதியார். இறக்கும் தறுவாயில் இருந்த ஒரு முதியவர் தம் பிள்ளைகளை அழைத்து, விறகை

ஒவ்வொன்ருகக் கொடுத்தும், கட்டாகக் கொடுத்தும் ஒடிக்குமாறு பணித்தார் என்றும், ஒன்றை ஒடித்த பிள்ளைகள் கட்டை முறிக்கக் கூடாத காரணத்தை வைத்து, அவர்களுக்கு ஒற்றுமையுபதேசம் செய்தார் தந்தையார் என்றும் சொல்லப்படுகிற கதை நம்முள் பலர் அறிந்ததே. வள்ளுவப் பெரியாரும், ஒற்றுமையின் அருமையை ஓர் உதாரண முகத்தான் விளக்கியுள்ளார். ஒரு பெரிய வண்டி இருக்கிறது. அது வலிமை மிக்கதே. எனினும், மயிற்ருேகையை நிரம்ப நிரம்ப, வாரி வாரிப் போட்டுக்கொண்டேயிருந்தால், அவ்வண்டியும் தாங்காது அச்சு ஒடியும். தோகையோ மிகவும் நொய்மையானது. வண்டியின் அச்சோ மிகவும் பருத்து வலிமையுடையதாய் உள்ளது. எனினும், மேலும் மேலும் திரண்டு கூடித் தோகைகள் வருவதால் அச்சு இற்றுப் போகிறது. அதைப்போலவே, எத்துணை எளியராயினும், நமது பகைவர் சேர்ந்து சேர்ந்து கூட்டமாக வருவாரேயாயின், நமது வலிமை பெரியதாயினும் பயனின்றிப்போம். நாமே ஒற்றுமை மிக்குப் பலரையும் நம்மோடு சேர்த்துக் கொள்ளுவோமாயின், வரும் பயன் மிகப் பெரிதன்ருே? இவற்றை யெல்லாம் உணர்த்த எடுத்துக் கொண்ட வள்ளுவர் பெருந்தகையார், 'பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டம் சாலமிகுத்துப் பெயின்' என்று வழங்கியருளினர்.

நம் சுற்றத்தாரே யன்றி நமது ஏவல் செய்வோர் தாமும் நம்மோடு இயைந்தவராய் இருத்தல் வேண்டும். நாமொன்று கருத, நம் வேலைக்காரர் பிறிதொன்று நினைத்துச் செய்து நமக்கு எள்ளல் வாங்கித் தருவாராயின், அவ் வேலைக்காரரால் நமக்கு உதவியுண்டாவதற்கு மாருகப் பல சங்கடங்கள் வந்து சேரும். சங்கடங்கள் ஏற்படின், கவலையுண்டாவது நிச்சயம். கவலையேற்பட்டாலோ, கரு மயிர் நரைத்தல் ஒரு தலை. எனவே, நல்ல வேலையாட்கள், நம்மோடு ஒற்றுமைப்பட்ட வேலையாட்கள்—இல்லையேல், நாம் விரைவில் மூப்பு உற்றவர் போன்று தோன்றுவோம்.

இதன் உண்மை, பழந்தமிழ்ப் பாடல் ஒன்றாலும் அறியப் படுகிறது. முன்னாளில் பிசிராந்தையார் என ஒரு புலவர் இருந்தார். அவருக்கு வயது பல ஆகியும் நரை தோன்ற வில்லை. சில புலவர் அவரை ஒரு நாள் அதற்குக் காரணம் கேட்டனர். அவர் சொல்லிய காரணங்களுள் ஒன்று, 'யான் கண்டனையர் என் இளையரும்' என்பது. அதன் கருத்து, 'நான் நினைக்கிறபடியே நினைத்து என்னுடைய ஏவல் செய்வோரும் என்னோடு இயைந்து செயல்களைப் புரி கின்றனர். என் இல்லத்தில் சண்டைத் தொல்லைகள் இல்லை' என்பதாகும்.

இனி, குடும்பத்தாரிடையே பூசலுங் கலாமும் விளையக் கூடிய சமயங்களில், சில புலவர்கள் ஒற்றுமையுபதேசம் புரிந்து தடுத்துள்ளனர் என்று அறிகிறோம். நலங்கிள்ளி என்னும் சோழனும் நெடுங்கிள்ளி யென்னும் சோழனும் தாயத்தார்கள். அவருள் நலங்கிள்ளி மிக்க வீரம் வாய்ந்த வன்; சேர, பாண்டிய அரசரை வென்று, அவர் தம் வஞ்சி யென்னும் ஊரையும், மதுரை யென்னும் ஊரையும் புல வர்க்கு வழங்கத் தக்க ஆற்றலுடையவன். அவன் ஒரு நாள் உறையூரை முற்றுகையிட்டான். உள்ளே பங்காளி யாகிய நெடுங்கிள்ளி இருந்தான். பார்த்தார் ஒரு புலவர்; 'அழகிது' என நினைத்தார். நலங்கிள்ளியிடம், 'ஒன்று பட்டால் வாழ்வுண்டு; இன்றேல், இருவர்க்கும் தாழ்வே' என்று கூறினர். இக்கருத்துப் பொதிந்த பாடல் புற நானூற்றில் காணப்படுகிறது. அதன் போக்கு இது: 'அரச! நீ பொர நினைக்கும் அரசன் சேரனும் அல்லன்; பாண்டியனும் அல்லன்; சோழனே ஆவன். நீயும் சோழன்; அவனுஞ் சோழன்; நீயும் ஆத்திமாலை சூடியிருக்கிறாய்; அவனும் ஆத்திமாலை சூடி யிருக்கிறான். அது ஒன்றே நீங்கள் இருவீரும் ஒரு குடிப் பிறந்தீர் என்பதைக் காட் டுமே! நும் இருவருள் எவர் தோற்றாலும், தோற்பது உம் குடியன்றோ? அவ்வசை வரலாமா? நீங்கள் இருவீரும் வெற்றி கொள்ள முடியாது என்பது வெளிப்படை. உங்

குடிக்கு வரும் பழியை நீக்க வேண்டுமானல் இம்மாறு பாட்டை உடனே தவிர்க்கவேண்டாவோ? நீவிர் பொருவீரானல், உம் பகைவரெல்லாம் உடம்பு பூரித்து உவகை எய்துவர். அவர் உவகை நுமது இளிவரல் அன்றோ? நீர் போர் குறித்து நிற்பதும் நும் குடிக்கு ஏற்றதன்று.'

நலங்கிள்ளி, 'குடிக்கு வடு உண்டாகும்' என்று கேட்டவுடன் போர்க்கோலம் நீத்தான். நெடுங்கிள்ளியும் புலவர் மொழியைக் கேட்டு இகலை விட்டான். இங்ஙனம் ஒற்றுமைப் படுத்திய புலவரது பெயரை நாம் அறியவேண்டாவோ? வேண்டினும் அவர் பெயரை அறியோம். ஊரை அறிவோம். அவ்வூர்ப் பெயராலேயே அவர் இற்றை நாள் வரை அறியப்படுகிறுர். அவரை மறவாது இருப்போமாக! கோவூர் கிழார் வாழ்க!

இன்னெரு புலவர் ஒரு பாண்டியனுக்கும் ஒரு சோழனுக்கும் ஓர் அறவுரை பகர்ந்துள்ளார். அவர் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனர் எனப்படுவர். வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி என்னும் அப்பாண்டியனையும், குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவன் என்னும் அச்சோழனையும் ஒரு நாள் ஒருசேரக் கண்ட அப்புலவர்க்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லை யில்லை. உடனே அவர் பாடத் தொடங்கிவிட்டார். 'பால்நிறக் கடவுளும், நீல நிறக் கடவுளும் உடனிருப்பதுபோல் உள்ள நீவிர் இருவரும் இயைந்திருப்பது இனிது. அண்ணனும் தம்பியுமாகிய பலராமனும் கண்ணபிரானும் ஒருங்கு இருப்பது போன்று உளது உமது தோற்றம். இதனினுஞ் சிறந்த காட்சி பிறிதொன்று உண்டோ? நீங்கள் இருவீரும் ஒருவீர் ஒருவீர்க்கு உதவி புரிவீராகுக! நீவிர் இங்ஙனே ஒன்றுபட்டிருப்பின், கடல் சூழ்ந்த பேருலகு நும் கையகப்படுவது மெய்யே யாகும். இப்படி நீவிர் அன்பினல் இயைந்துள்ளதைக்காணும் சிலர் பொருமை கொண்டு, நல்லன சொல்லுவார்போல் சில சொல் சொல்லி நும்மைப் பிரிக்கப் பார்ப்பர். நான் வேண்டுவ தெல்லாம், இன்று போலவே என்

றும் இருங்கள் என்பது. இருப்பீராயின், வெற்றியெல லாம் நும் இருவர்க்கேயாம்; நுங்கள் கொடிகளே பிற நாடு கள் எங்கும் துலங்கும். பிரியன்மின், பிரியன்மின்.'

மற்றுமோர் புலவர், சினந்த தந்தையை எதிர்த்த மக்க ளோடு ஒன்று படுத்தி வைத்தார் என்றும் அறிகிறோம். அப்புலவர் பெயர் எயிற்றியனார்; ஊர் புல்லாற்றூர். கோப் பெருஞ் சோழன் என்னும் அரசன், உறையூரை ஆண்டு வரும் நாளில், ஒரு நாள் அவனுடைய புதல்வர் இருவர் அவனோடு மாறுகொண்டனர். எதிர்த்து நின்ற அவ ரொடு பொரக் கருதி எழுந்தான் சோழ மன்னன். அப் பொழுது அருகே யிருந்த பைந்தமிழ்ப் புலவர், "விறல் கெழு வேந்தே!" என்று விளித்தவுடன், செவி சாய்த்து நின்றான் நிருபன். புலவர் உடனே தமது பொருளுரை யைப் புகலத் தொடங்கினர். அதன் சாரம் வருமாறு: "பற்பல அமருள் வென்று மேம்பட்ட வேந்தே! இப் பொழுது உன்னோடு எதிர்த்து வந்து நிற்போர் உன் பகை ஞரல்லரே. நீயும் அவர்க்குப் பகைஞன் அல்லை. பகைஞ ரைக் கொல்லும் களிற்றையுடைய தலைவ! நீ புகழை இவ் வுலகில் எய்தி, உயர்ந்த உலகை அடைந்த பிறகு, உன் புதல் வர்க்குத் தானே உன் அரசு உரித்தாகும்! இதனை நீயே அறிவையே!"

இப்பொருளுரையைக் கேட்டும், அரசன் ஓர் அடி எடுத்து வைப்பது தோன்றிற்றுப் புலவருக்கு. "இன்னும் கேட்பாயாக, இசையில் விருப்பமுடையோய்! பெரிதும் கேட்பாயாக! புகழில் இச்சையுடையோய்!" என்பன போன்ற மொழிகளைச் சமயமறிந்து சொல்லி, அவர் மேலும் சொல்லலுற்றார்: "புதல்வர் ஆலோசனையின்றி, அறிவு குன்றி எதிர்ப்பட்டுள்ளனர். தோற்றுப்போனால் உன் செல்வத்தைப் பின்னர் அவருக்கு அல்லாமல் வேறு எவருக்குக் கொடுக்கப் போகிறாய்? போரினை விரும்புகின்ற செல்வ! ஒருகால் நீ அவர்க்குத் தோற்றால், உன் பகைவ ரெல்லாம் உன்னை இகழ்ந்து மகிழ்வர். உலகில் பழி

யையே வைத்துச் செல்லவேண்டியிருக்கும். உன் ஆற்ற லில் ஐயமுள்ளேன் என்பதன்று. அவ் வாற்றலை இவ ரிடம் காட்ட வேண்டா என்பதே எனது வேண்டுகோள். உன்னுடைய வீரம் உன்னை விட்டு இப்பொழுது நீங்கி யிருக்கட்டும். உன்னுடைய ஊக்கம் பிறவற்றில் செல்லட் டும். நல்வினைகள் பல செய்வாயாக! வாழிய அரசே!'' நயம்பட உரைக்கப்பட்ட இவ்வுரையையும் மறுத்துப் புதல்வரொடு பொருவதற்கு அரசன் மனம் இயைந்திருக் குமோ? புலவர் உரைக்குங் காலே, வேம்பும் கரும்பும் போல் இடை யிடையே கடுஞ் சொல்லும் புகழ் மொழியும் பெய்து உரைத்த நயம் வியக்கற்பாற்று. அழைக்கும் போதே, அவன் பெருமையையும், வீரத்தையும், வென்றியை யும் உரைத்து அழைத்தார். இடையிடை அவன் ஆற்ற லின் சிறப்பைக் குறிக்கும் சொற்களைக் கூறினர். ''உனக் குத் தெரியாத தன்று'' என்று சொன்னர். புகழ் விருப்பம் உள்ள அவன் பழி தரும் செயல் புரியலாகாது என்பதை வற்புறுத்தினர். புதல்வரை வெறுத்துரைப்பார் போன்று சில சொன்னர். இவை யெல்லாவற்றினும் மிக்கதாக, ''அம ரில் விருப்பமுள்ள செல்வ'' என்றும், ''உன் வீரம் இப் பொழுது உன்னை விட்டு இருக்கட்டும்'' என்றும் அவர் மொழிந்த மொழிகளின் சிறப்பைக் கண்டு நாம் மகிழா திருக்க முடியாது. ஓர் அரசன் முன் நின்று, ''நீ உன் புதல்வர்க்குத் தோற்றால்'' என்ற கூற்றைக் கூறுவது எளி தன்று. அரசன் வெகுளாதிருக்கும் பொருட்டும், வெகுண்டு புதல்வரையே அழித்து விடாதிருக்கும் பொருட் டும், எழுச்சியைத் தடுக்கும் பொருட்டு மன்றே அத்தண் டமிழ்ப் புலவர்,

''அமர்வெஞ் செல்வ! நீ யவர்க்கு உலையின்
இகழுநர் உவப்ப பழியெஞ் சுவையே;
அதனால், ஒழிகதில் அத்தைநின் மறனே''

என இருமருங்கும் சர்க்கரையைக் கூட்டி, இடையே கடுக் காய்த் தூளை வைத்தார்! இங்ஙன மெல்லாம் நன் மருந்து

தர வல்ல நாவலர் பலர் வாழ்ந்த நாடு நம் நாடு. அவர் தம் ஊர், பேர், உபதேசங்களை மறந்துள்ள நாம் இனியாவது விழித்துக் காண்போமாக. அவர் தம் பொன்னுரைகளை யறிந்து வாழ்வம் ஒன்ருகவே! ஒற்றுமை வாழ்க!

---

7. ஐரோப்பியர் வருகை

[மயிலை - சீனி. வேங்கடசாமி]

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே, மேல் நாட்டார் நமது இந்தியா தேசத்துடன், சிறப்பாகத் தென் இந்தியாவுடன், வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரிகிறது. யவனர் (உரோமர், கிரேக்கர்) என்னும் ஐரோப்பிய ஜாதியார், சேர நாட்டின் கடற்கரைப் பட்டினங்களிற் பண்டசாலைகள் அமைத்து, அவற்றில் நமது நாட்டுச் சரக்குகளைச் சேமித்து வைத்துக் கப்பல்கள் மூலமாக ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டு போனார்கள். மதுரை, புகார் (காவிரிப்பூம்பட்டினம்) முதலிய நகரங்களிலும் யவனர் வசித்து வந்ததாகத் தமிழ் நூல்களினால் அறிகிறோம். கி. மு. 22-ல், மதுரையில் அரசாண்டிருந்த பாண்டிய மன்னன், அகஸ்தஸ் ஸீஸர் (Augustus Caesar) என்னும் யவன அரசனிடம் தூதுவர்களை அனுப்பினான் என்று ஸ்த்ராபோ (Strabo) என்னும் மேல் நாட்டாசிரியர் எழுதியிருக்கிறார். தமிழருக்கும் யவனருக்கும் இருந்த இவ் வர்த்தகத் தொடர்பு, கி. பி. 47-முதல் மேன்மேலும் அதிகப்பட்டது. ஏனென்றால், அந்த ஆண்டில் ஹிப்பலஸ் (Hippalus) என்பவர், இந்து சமுத்திரத்தில் வீசுகிற வடகிழக்கு, தென் மேற்குப் பருவக் காற்றைக் கண்டு பிடித்தார். இப் பருவக் காற்று வீசுகிற காலங்களிற் பிரயாணம் செய்வதால் மாலுமிகள் விரைவாகக் கப்பல்களைச் செலுத்திக் குறிப்பிட்ட இடங்களுக்கு ஏறக்குறையக் காலத்திற் செல்

லக் கூடியதாயிருந்தது. ஆகவே, யவன வியாபாரிகள் அதிகமாகத் தமிழ் நாட்டிற்கு வரத் தலைப்பட்டார்கள். இவ் வர்த்தகப் பெருக்கத்தினால் நமது தேசத்தாருக்கு ஏராள மான வருவாய் கிடைத்தது. "இந்தியா தேசம் ஏராள மான செல்வத்தை யவன தேசத்திலிருந்து ஆண்டுதோறும் கவர்ந்து கொள்கிறது" என்று பிளினி என்னும் ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

இந்தத் தமிழர் — யவனர் வியாபாரத் தொடர்பைப் பற்றிப் புறநானூறு, மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய சங்க நூல்களிலும் குறிப்புகள் காணப்படுகின்றன. தமிழ ருக்கும் யவனருக்கும் இருந்த இந்தத் தொடர்பு, வியாபாரத் தோடு மட்டும் நின்றிருந்ததே தவிர, சமயம், கலை, பாஷை முதலியவைகளிற் சிறிதும் இடம் பெறவில்லை. யவனர் நம் முடன் நேர்முகமாகக் கொண்டிருந்த இந்த வியாபாரத் தொடர்பு, கி. பி. ஏழாம் நூற்றாண்டு வரையில் நிலைபெற் றிருந்தது.

ஏழாம் நூற்றாண்டில், அரபி தேசத்து முகம்மதியர்கள் எகிப்து, பாரசீகம் முதலிய நாடுகளை வென்று கைப்பற்றிய பிறகு; யவனர் நமது தேசத்துடன் வைத்திருந்த நேர்முக மான வியாபாரத் தொடர்பு தடைப்பட்டுவிட்டது. ஏழாம் நூற்றாண்டிற்குப் பிறகு, முகம்மதியர் கடல் வழியையும் தரை வழியையும் கைப்பற்றி ஆதிக்கம் பெற்றதோடு, இந்திய வியாபாரத்தையும் கைப்பற்றிக் கொண்டார்கள். இந்தியப் பொருள்களை வாங்கிக்கொண்டு போய் ஐரோப்பிய தேசங் களில் விற்பனை செய்வதாற் பெரும்பொருள் ஊதியங் கிடைப்பதைக் கண்டு, முகம்மதியர், ஐரோப்பியரை இந் தியாவுடன் நேர்முகமாக வியாபாரம் செய்யவொட்டாதபடி தடுத்துவிட்டார்கள். இவ்விதமாகப் பண்டைக் காலத்தில் ஐரோப்பியர் நமது தேசத்துடன் கொண்டிருந்த வியா பாரத் தொடர்பு அற்றுப்போயிற்று.

முகம்மதியர், மலையாளக் கரையிற் பண்டசாலைகளை அமைத்து, மிளகு முதலிய பொருள்களைச் சொற்ப விலைக்கு

ஏராளமாய் வாங்கிச் சேமித்து வைத்து, அவற்றைக் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு அரபிக் கடல் வழியாகச் செங்கடலிற் சென்று, அங்கிருந்து தரை வழியாகச் சூயஸ், கெய்ரோ அலக்ஸாந்திரியா முதலான நகரங்களின் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டு போய், ஒன்றுக்குப் பன் மடங்கு அதிகமாக விலை வைத்துச் சரக்குகளை விற்று, பெரும்பொருள் திரட்டினார்கள். வர்த்தகத் தொழில் செய்யும் ஜாதியார் எப்பொழுதும் செல்வவந்தராயிருப்பது எல்லோரும் அறிந்த உண்மை. இதன்படி, வியாபாரத் தொழிலில் ஈடுபட்ட முகம்மதியர், மேன்மேலும் செல்வம் பெற்றுச் சிறப்படைந்து விளங்கினார்கள். ஐரோப்பியர் இப்போது கைத்தொழில் நாகரிகம் முதலியவற்றிற் சிறப்படைந்திருப்பதுபோல, அக்காலத்திற் சிறப்புப் பெறாமல் தாழ்ந்த நிலையில் இருந்தார்கள். ஆகையால், ஆடை முதலிய பல பொருள்கள் இந்தியா முதலிய கீழைத் தேசங்களிலிருந்தே ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இதனால், இந்த வியாபாரத்தைத் தங்கள் கையில் வைத்திருந்த முகம்மதியர், பெருஞ்செல்வம் சம்பாதித்ததில் அதிசய மொன்றுமில்லை. இவ்வாறு சில நூற்றாண்டுகள் கழிந்தன.

இந்தியச் சரக்குகளை ஐரோப்பிய நாடுகளிற் கொண்டு போய் விற்பதனால் முகம்மதியர் செல்வம் பெற்றுச் சிறப்புடன் வாழ்வதைக் கண்ட ஐரோப்பிய தேசத்தார், தாங்களும் நேர்முகமாக இந்தியாவுடன் வியாபாரம் செய்து பொருள் ஈட்டவேண்டுமென்று ஆவல் கொண்டார்கள். ஆனால், இந்தியாவுக்குச் செல்லும் வழி, முகம்மதியர் ஆதிக்கத்திலிருந்த படியாலும், வேறு ஜாதியார் இவ்வியாபாரத்தைக் கைக்கொள்ளாதபடி அவர்கள் (முகம்மதியர்) வெகு கருத்தாகக் காவல் செய்திருந்தபடியாலும், ஐரோப்பியரின் எண்ணம் கைகூடவில்லை. அக்காலத்தில் பூகோள சாஸ்திரம் தெரியாதபடியால், வேறு மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்லும் வழியையும் ஐரோப்பியர் அறிந்திருக்கவில்லை.

இந்தியா, ஐரோப்பாவுக்குக் கிழக்குப் பக்கத்தில் இருக்கிற தென்பது மட்டும் அவர்களுக்குத் தெரியும்; ஆனால், அங்குச் செல்வதற்கு வேறு வழி தெரியாமல் திகைத்தனர். அக்காலத்தில், ஐரோப்பாக் கண்டத்தில் இந்தியாவைப் பற்றிப் பல கதைகள் வழங்கிவந்தன. இந்தியா தேசம் பூலோக சுவர்க்கம் என்றும், பணம் காய்க்கும் மரங்கள் அங்கே ஏராளமாக வளர்கின்றனவென்றும், தேன் ஆறும், பால் ஆறும் அங்குக் கரை புரண்டோடுகின்றன என்றும் பலவிதமான செய்திகள் உலவிவந்தன. இவ்விதச் செய்திகளைக் கேட்டபோது ஐரோப்பியருக்கு நாவில் நீர் சுரந்தது. தேனாறும் பாலாறும் கரை புரண்டோடும் அந்தப் பூலோக சுவர்க்கத்தை, பணம் காய்க்கும் மரங்கள் வளருகிற ஆச்சரியமான இந்தியா தேசத்தைக் காணவேண்டும் என்றும், அத்தேசத்துடன் நேர்முகமாக வியாபாரத் தொடர்பு பெற்றுப் பொருள் சம்பாதிக்கவேண்டும் என்றும் ஐரோப்பியர் ஆவலோடு விரும்பினார்கள். அக்காலத்தில் ஐரோப்பா முழுதும் இந்தியாவின் பேச்சாகவே இருந்தது. ஆனால், இந்தியாவுக்கு எப்படிப்போவது? இந்தியாவுக்குச் செல்லும் வழியை முகம்மதியர் கைப்பற்றித் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு, வேறு ஜாதியார் அவ்வழியாகச் செல்லாதபடி, கண்ணை இமை காப்பதுபோல் காத்துவருகையில், ஐரோப்பியர் இந்துதேசம் செல்ல நினைத்தது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதுபோல் இருந்தது.

இவ்வாறிருந்து வருகையில், பூகோள சரித்திரத்தைப் பற்றி ஆராய்ந்துவந்த அறிவாளிகள், பூமி அப்பளம்போல் தட்டையாக இருக்கவில்லை என்றும், பந்துபோல் உருண்டை வடிவாக இருக்கிறதென்றும் அறிந்தார்கள். ஆனால், இப் பூகோள சாஸ்திர உண்மையை ஜனங்கள் ஒப்புக்கொள்வதற்கு நெடுநாள் சென்றது. கடைசியாக, போர்ச்சுகல் தேசத்தவராகிய கொலம்பஸ் என்பவர் இப்பூகோள சாஸ்திர உண்மையை அடிப்படையாகக் கொண்டு, இந்தியா தேசத்திற்குச் செல்ல வேறொரு வழியைக் கண்டுபிடிக்கத்

துணிந்தார். எப்படியென்றால், பூமி உருண்டையா யிருப்பதால், ஒருவன் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு மேற்கு முகமாகப் பிரயாணம் செய்துகொண்டே போனால், கடைசியில் அவன் கிழக்குப் பக்கமாகத் தான் புறப்பட்ட இடத்திற்கு வந்து சேர்வான் என்னும் பூகோள சாஸ்திர உண்மையை மனத்திற்கொண்டு, இந்தியா தேசம் ஐரோப்பாவுக்குக் கிழக்கில் இருக்கிறபடியால், ஐரோப்பாவிலிருந்து மேற்குப் பக்கமாய்ப் பிரயாணம்செய்து கொண்டுபோனால், இந்தியா போய்ச் சேரலாம் என்று கொலம்பஸ் என்பவர் நம்பினர்; ஆனால், அவர் சொல்லிய கருத்தை ஒருவரும் ஆதரிக்கவில்லை. கடைசியாக, மிகுந்த சிபாரிசின்மேல், ஸ்பெயின் தேசத்து அரசன் கொலம்பஸுக்கு உதவி செய்யச் சம்மதித்து, சில கப்பல்களையும், மாலுமிகளையும், பிரயாணத்துக்கு வேண்டிய சாமான்களையும் கொடுத்துதவினன். கொலம்பஸ், ஸ்பெயின் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, மேற்குப் பக்கமாய்க் கடலிற் பிரயாணம் செய்துகொண்டு போனர். சில நாட்கள் பிரயாணம் செய்த பிறகு, கொலம்பஸ் மேற்கிந்தியத் தீவுகளையும், புதிய உலகம் என்னும் அமெரிக்காக் கண்டத்தையும் கண்டு பிடித்தார். ஆனால், கொலம்பஸ் அத்தீவுகள் இந்தியா தேசத்தைச் சேர்ந்தவை என்றும், அக்கண்டம் இந்தியா தேசம் என்றும் தவருக நினைத்தார். அவர், தாம் கண்டு பிடித்த பூபாகம் இந்தியா தேசந்தான் என்கிற நம்பிக்கையுடன் இறந்தார்.

ஆனல், உண்மையில் அது இந்தியா தேசம் அன்று. "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்ருகும்" என்றபடி, கொலம்பஸ் இந்தியா தேசத்தைக் கண்டு பிடிக்கும் நோக்கத்தோடு செல்ல, தற்செயலாகப் புதிய பூபாகங்களைக் காணப் பெற்ருர். கொலம்பஸ் புதிய உலகத்தைக் கண்டு பிடித்த செய்தி ஐரோப்பியர்களுக்குப் புதிய உணர்ச்சியை யளித்தது. ஏனைய ஐரோப்பிய ஜாதியாரும் இந்தியா தேசத்துக்குப் புதிய வழியைக் கண்டு பிடிக்க ஊக்கங்கொண்டு முயற்சி செய்தார்கள். இவ்வாறு ஊக்கங்

கொண்டவர்களில் போர்ச்சுகல் தேசத்தரசனும் ஒருவன். எமானுயேல் (Emanuel) என்னும் பெயருள்ள அந்த அரசன் ஆப்பிரிக்காக் கண்டத்தைச் சுற்றிக் கொண்டு, கிழக்கு முகமாகப் பிரயாணம் செய்தால், இந்தியா தேசம் போய்ச் சேரலாம் என்று நம்பிக்கை கொண்டவன். ஆகையால், அவ் வழியாகச் சென்று, இந்தியா தேசத்தைக் கண்டு பிடிக்கும்படி வாஸ்கோ-டா-காமா என்பவரை அனுப்பினன். வாஸ்கொ-டா-காமா போர்ச்சுகல் தேசத்துத் துறைமுகப் பட்டினமாகிய லிஸ்பன் என்னும் பட்டினத்தை விட்டு, 4197ஹு, ஜுலைமீ, 9உ புறப்பட்டுக் கடல் வழியாகச் சென்றபோது, எதிர் காற்றில் அகப்பட்டு அனேக கஷ்ட நஷ்டங்களுக் குட்பட்டார். ஆனாலும், மனந்தளராமல், மேன்மேலும் கப்பலை யோட்டிக்கொண்டு, ஆப்பிரிக்காக் கண்டத்தின் தென் கோடியாகிய நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக் கடந்து, அக் கண்டத்தின் கிழக்குக் கரை யோரமாகப் பிரயாணம் செய்து, கடைசியில் மிலாண்டா (Milanda) என்னும் கடற்கரைப் பட்டினத்தை யடைந்தார். அது பேர்பெற்ற துறைமுகப் பட்டினம். ஆகையால், இந்தியாவிலிருந்து பல கப்பல்கள் அங்கு வந்திருந்தன. வாஸ்கொ-டா-காமா அங்கிருந்து ஒரு முகம்மதிய மாலுமியை, இந்தியா தேசத்திற்கு வழி காட்டும்படி தம்முடன் அழைத்துக் கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு, அந்த முகம்மதிய மாலுமியின் உதவியால், 1497ஹு, மேமீ, 22உ மலையாளக் கரையில் உள்ள கள்ளிக்கோட்டை (Calicut) என்னும் பட்டினத்தை யடைந்தார். முதல் முதல் இந்தியாவுக்கு வந்த கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஐரோப்பியர் இவர்தாம்.

பிறகு வாஸ்கொ-டா-காமா கள்ளிக்கோட்டையை யரசாண்டிருந்த சாமுத்திரி அரசனைக் (Zamorin) கண்டு பேசி, போர்ச்சுகல் தேசத்தார் கள்ளிக்கோட்டையில் வர்த்தகம் செய்ய அவ்வரசனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு, மீண்டும் தம் ஊருக்குச் சென்று, தாம் இந்தியாவைக் கண்டு

பிடித்த சந்தோஷச் செய்தியைத் தம்முடைய அரசனுக்குத் தெரிவித்தார். போர்ச்சுகல் தேசத்தரசன் மிகவும் மகிழ்ச்சி யடைந்து, இந்தியா தேசத்துடன் வர்த்தகம் செய்வதற்காக வும், கூடுமானல் அத் தேசத்தைத் தன் ஆட்சிக்குட் படுத் துவதற்காகவும் சில கப்பல்களை ஆயத்தம் செய்து, பீட்ரோ ஆல்வாரெஸ் காப்ரால் (Pedro Alvarez Cabral) என்பவர் தலைமையிற் பல போர்ச்சுகீசியரை அனுப்பினன். இந்தக் காப்ரால் என்னும் தலைவர் கப்பலைச் செலுத்திக் கொண்டு போகிறபோது, ஆப்பிரிக்காக் கண்டத்தின் கரையோர மாகச் சென்ருல், எதிர் காற்றில் அகப்பட்டு வருந்த வேண்டி யிருக்கும் என்று நினைத்து, அக்கண்டத்துக்கு மேற்கே அதிக தூரமாய்க் கடலிற் போய்க்கொண் டிருக் கையில், தென் அமெரிக்காவில் உள்ள, இப்போது பிரே சில் (Brazil) என்று வழங்கப்படுகிற, செழிப்பான தேசத் தில் தற்செயலாகப் போய்ச் சேர்ந்தார். தாம் போகக் கருதி வந்த இந்தியா தேசம் செல்லாமல், தற்செயலாய் வேறு ஒரு புதிய தேசத்திற் சென்றதை அறிந்து ஆச்சரி யப்பட்டு, அவர் மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு இந்தியா தேசம் வந்து சேர்ந்தார். பிரேசில் தேசத்திலிருந்து இந் தியாவுக்குப் புறப்படும்போது, அங்கிருந்து சில பழச்செடிக ளைக் கொண்டு வந்து இந்தியாவிற் பரவச் செய்தார். அவர் கொண்டு வந்தவை, மிளகாய், முந்திரிக்கோட்டை, கோய்யாப் பழம், அன்னசிப்பழம், சீத்தாப்பழம், பப்பளிப்பழம் முதலியவை. இப்பழச்செடிகள், இவர் கொண்டு வருவதற்கு முன்பு நமது நாட்டிற் கிடையா.

பதினைந்தாம் நூற்றுண்டின் கடைசியில் நமது நாட் டிற்கு வந்த பறங்கியர் (போர்ச்சுகீசியருக்குப் "பறங்கியர்" என்று பெயர்), கொச்சி, கள்ளிக்கோட்டை, கோவா முத லிய கடற்கரைப் பட்டினங்களில் அமர்ந்து, வியாபாரம் செய் யத் தொடங்கினர்கள். இவர்களுக்கு முன் ஏகபோகமாய் வர்த்தகம் செய்திருந்த முகம்மதியருக்குப் பறங்கியர் வந்து வர்த்தகம் செய்வது பிடிக்கவில்லை. இதனல் பறங்கியருக்

கும் முகம்மதியருக்கும் சில சண்டைகள் நடந்தன. அச் சண்டைகளிற் பறங்கியர் வெற்றி பெற்று, முகம்மதியரை யடக்கி, அராபிக் கடலைத் தங்கள் ஆதிக்கத்திற் கொண்டு வந்தார்கள். அது முதல் சுமார் ஒரு நூற்றூண்டு வரையில் பறங்கியர்கள், இந்தியா, இலங்கை முதலிய கீழைத் தேசங் களில் வியாபாரம் செய்துவந்தார்கள். இவர்கள் வர்த்த கம் செய்வதோடு மட்டும் நில்லாமல், கிறிஸ்தவ மதத்தைப் பரவச் செய்யவும் பாடுபட்டார்கள். ஏசுவின் சபைப் பாதிரி மார்களைக் கொண்டு வந்து, பெருந்தொகையான இந்துக் களைக் கிறிஸ்தவராக்கினூர்கள். சவேரியார், தத்துவ போதக சுவாமி, ஜான் டிபிரிட்டோ, வீரமா முனிவர் முதலிய பாதிரி மார் இவர்கள் அழைத்து வந்த ஏசுவின் சபையைச் சேர்ந்த துறவிகளாவர். இதுவுமன்றி, பறங்கியர் தங்கள் வியா பாரப் பட்டினங்களைக் காவல் புரியும் பொருட்டு, பறங்கிப் போர் வீரர்களையும் கொண்டு வந்திருந்தார்கள். இப்போர் வீரர்கள் இந்தியப் பெண்களை மணஞ்செய்து கொள்ளும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். இவ்விதக் கலப்பு மணத்தி னூற் பிறந்த பிள்ளைகள், "துப்பாசி" என்னும் பெயரு டைய புதிய ஜாதியரானூர்கள். இந்தத் துப்பாசிகள் பறங் கிப் பாஷையைப் பேசிவந்தனர்.

இவ்விதமாகப் பறங்கியர் இந்தியாவுக்குப் புது வழி கண்டு பிடித்து, இந்திய தேசத்துடன் வியாபாரம் செய்து, பொருள் திரட்டிச் செல்வந்தராவதைக் கண்டு, ஏனைய ஐரோப்பிய ஜாதியாரும் இந்தியா தேசத்துடன் வியாபாரம் செய்ய ஆவல் அடைந்தனர். அவர்களுள் ஹாலண்டு (Holland) என்னும் நாட்டிலுள்ள டச்சுக்காரரும் இம்முயற்சியில் முனைந்து நின்றூர்கள். இந்த டச்சுக்காரருக்கு ஒல்லாந்தர் என்பதும் பெயர். இந்த ஒல்லாந்தர் இந்தியாவுக்கு வட கிழக்கு வழியொன்றைப் புதிதாகக் கண்டு பிடிக்க முயற்சி செய்தார்கள். கொலம்பஸ் ஐரோப்பாவுக்கு மேற்கு முக மாய் இந்தியாவுக்குப் போக ஒரு வழியைக் கண்டு பிடிக்க முயன்றூரல்லவா ; 'பறங்கியர், ஐரோப்பாவுக்குத் தெற்கு

முகமாய், ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கிழக்கு முகமாகச் சென்று, இந்தியாவுக்கு ஒரு வழியைக் கண்டு பிடித்தார்களே, அதைப்போலவே தாங்களும் ஐரோப்பாவுக்கு வட கிழக்குப் பக்கமாய்ச் சென்று இந்தியாவுக்குப் புது வழி ஒன்றைக் கண்டு பிடிக்கலாமே' என்று ஒல்லாந்தர் நினைத்தார்கள். அப்படி நினைத்தது அக்காலத்தில் பூகோள சாஸ்திரத்தை அவர்கள் சரிவர அறியவில்லை என்பதைத் தெரிவிக்கிறது. இந்த எண்ணத்தோடு அவர்கள் நான்கு கப்பல்களை இந்தியாவுக்கு வட கிழக்குப் பாதையைக் கண்டு பிடிக்க அனுப்பினார்கள். இந்த முயற்சியில் அவர்கள் தோல்வியடைந்தார்கள்; ஆனால், முன்பு அறிந்திராத சில தீவுகளையும், கடல்களையும் கண்டு பிடித்தார்கள். ஒல்லாந்தர், வட கிழக்குப் பக்கமாய்ப் புது வழி கண்டு பிடிக்க முயற்சி செய்த அதே காலத்தில், வேறு நான்கு கப்பல்களைப் பறங்கியர் கண்டு பிடித்த வழியைப் பார்த்து வரும்படி அனுப்பினார்கள்.

இக்கப்பல்கள் கிழக்கிந்திய தீவுகளில் ஒன்றாகிய ஜாவா (சாவகம்) தீவு வரையிற் சென்று திரும்பி வந்தன. அது முதல் ஒல்லாந்தர், இந்தியா தேசத்துடனும், கிழக்கிந்தியத் தீவுகளுடனும் வியாபாரம் செய்யத் தொடங்கினார்கள். இந்த வியாபாரத்தை முதலில் தனிப்பட்ட முறையில் நடத்திவந்தனர். பின்னர், 1602-வருஷம், மார்ச்சு மாதம், 2 ந் தேதி, "**கிழக்கிந்திய வர்த்தகச் சங்கம்**" என்னும் பெயரால் ஒரு சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்த ஒல்லாந்தர் பதினேழாம் நூற்றாண்டின் பிற் பகுதியில், பறங்கியரை, இந்தியா, இலங்கை முதலிய இடங்களிலிருந்து துரத்திவிட்டு, அவர்களிருந்த இடங்களைத் தாங்கள் கைப்பற்றிக்கொண்டு வியாபாரம் செய்துவந்தனர். இவர்களும் யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் இந்துக் கோயில்களை இடித்தும், இந்துக்களைக் கட்டாயப்படுத்திக் கிறிஸ்தவர்களாக்கியும், கிறிஸ்தவர்களுக்கு மட்டும் உத்தியோகங்களைக் கொடுத்தும், வந்தனர். முதலில் வர்த்தகர்களாக வந்த

இவர்கள், பிறகு நாடுகளைப்பிடித்து அரசாள முற்பட்டார்கள். ஆனால், ஆங்கிலேயர் இவர்களை இந்தியாவிலும் இலங்கையிலுமிருந்து துரத்திவிட்டார்கள்.

இந்தியாவுடன் வர்த்தகம்செய்து செல்வந் திரட்ட விரும்பிய மற்றொரு தேசத்தார் ஆங்கிலேயராவர். இவர்களும் ஒல்லாந்தரைப் போலவே, இந்தியாவுக்கு வடகிழக்குப் பாதையொன்றைக் கண்டு பிடிக்க முதலில் முயன்றனர். இவர்கள் சுமார் 50-ஆண்டுகளாக வடகிழக்குப் பாதையைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தும் பயனடையவில்லை. 1568-ம் ஆண்டில், ஸர் பிரான்ஸிஸ் டிரேக் (Sir Francis Drake) என்னும் ஆங்கிலேயர், இந்தியாவிலிருந்து போர்ச்சுகல் தேசத்துக்குச் சென்று கொண்டிருந்த ஒரு பறங்கிக் கப்பலைப் பிடித்துக் கொள்ளையடித்தார். கொள்ளையிடுகையில், ஆப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிக்கொண்டு இந்தியாவுக்குச் செல்லும் வழியைக் குறிப்பிடுகிற படம் ஒன்றைக் கண்டெடுத்தார். அதன் பிறகு, 1594-ல், ஸர் ஜான் லங்காஸ்டர் (Sir John Lancaster) என்னும் ஆங்கிலேயர் நன்னம்பிக்கை முனை வழியாக ஜாவா (சாவகம்) வரையில் யாத்திரை செய்து திரும்பி வந்தார். பின்னர், கி. பி. 1600-ஞு, டிசம்பர்மீ, 31உ, "ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனி" என்னும் வர்த்தகச் சங்கம் நிறுவப்பட்டது. அதுமுதல் ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்து வியாபாரம் செய்யத் தலைப்பட்டனர்.

நமது தேசத்தில் வியாபாரம் செய்ய வந்த இன்னொரு ஐரோப்பிய ஜாதியார், டேன்ஸ் (Danes) என்னும் டேனிஷ் காரர். இவர்கள் டென்மார்க்கு தேசத்தைச் சேர்ந்தவர். 1620-ல் கிழக்கிந்திய வர்த்தகச் சங்கத்தை ஏற்படுத்திக் கொண்டு, நமது தேசத்திலுள்ள தரங்கன்பாடி, பழவேற்காடு, சிராம்பூர் முதலிய இடங்களில் வர்த்தகம் செய்து வந்தனர். ஆனால் இவர்களின் வர்த்தகம் பலப்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டில், தரங்கன்பாடி முதலிய இடங்களை இவர்கள் இங்கிலீஷ்காரருக்கு விற்று விட்டுப்

போய் விட்டார்கள். இவர்களும் கிறிஸ்தவ மதத்தைப் பரவச்செய்ய முயன்று வந்தனர்.

இந்தியாவுடன் வியாபாரம் செய்யக் கடைசியாக முயற்சி செய்தவர்கள் பிரெஞ்சுக்காரர். "பிரெஞ்சுக் கிழக்கிந்திய வர்த்தகச் சங்கம்" 1664-ல் ஏற்படுத்தப்பட்டது. பிரெஞ்சுக்காரர், புதுச்சேரி முதலிய இடங்களில் வர்த்தகம் செய்துவந்தனர். டியுபிலே என்பவர் புதுச்சேரிக்கு அதிகாரியாய் வந்தபோது, இந்தியாவில் பிரெஞ்சு அரசாட்சியை நிலைநாட்ட முயற்சி செய்தார். அவருடைய முயற்சி வெற்றியாகவே யிருந்தது. ஆனால், பிரெஞ்சுக்காரரின் வெற்றியையும், செல்வாக்கையும் தடைப்படுத்தி, அவர்களை இந்தியாவிலிருந்து துரத்திவிட்டு, இங்கிலீஷ் அரசாட்சியை நிலை நாட்டவேண்டும் என்னும் எண்ணத்துடன் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கம்பெனியார் முயற்சி செய்தார்கள். பிறகு, இருதரத்தாருக்கும் பல போர்கள் நிகழ்ந்தன. கடைசியாக, ஆங்கிலேயர் வெற்றி பெற்று, ஆங்கில அரசாட்சியை நிறுவினர். இதற்கு அக்காலத்தில் இந்தியாவின் நிலைமை இடங்கொடுத்தது. பிறகு, இலங்கை முதலிய தேசங்களையும் பிடித்து, ஆங்கிலேயர் அரசாளத் தொடங்கினர்கள்.

வியாபாரத்துக்காக வந்த ஐரோப்பியர்கள், இந்தியரை கிறிஸ்தவ மதத்திற் சேர்க்கவும் முயற்சி செய்து வந்தார்கள்; இந்துக்களைக் கிறிஸ்தவராக்கும் பொருட்டு அனேக பாதிரிமார்களை ஐரோப்பிய தேசங்களிலிருந்து அழைத்துவந்தார்கள். நமது தேசத்துக்கு வந்த பாதிரிமார்கள் கிறிஸ்தவ மதத்தைப் போதிக்க முற்பட்டபோது, அவர்களுக்குப் பாஷைகள் தடையாக நின்றன. ஆகவே, அவர்கள் முதலில் இந்திய பாஷைகளைக் கற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தாங்கள் எந்த நாட்டாருக்கு மத போதனை செய்யக் கருதினர்களோ, அந்த நாட்டுப் பாஷையைக் கற்றுத் தேர்ந்து, அதிற் பேசவும் பிரசங்கம் செய்யவும் முயன்றார்கள். அந்த முறையில் தமிழ் நாட்டிற்கு வந்த பாதிரி

மார்கள், தமிழ் மொழியைக் கற்றுத் தேர்ந்து, தமிழிற் பேசவும், சொற்பொழிவு நிகழ்த்தவும், நூல் இயற்றவும் தொடங்கினர்கள். இவ்வாறு தமிழ் மொழிக்கும் ஐரோப்பியப் பாதிரிமாருக்கும் ஏற்பட்ட தொடர்பினல், தமிழிற் சில மாறுதல்கள் அல்லது முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

தமிழ் மொழிக்கு ஏற்பட்ட மாறுதல் அல்லது அபிவிருத்தி அனைத்தும் பாதிரிமார்களால் உண்டானவையே. இல்லறத்தாராகிய ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களால் தமிழுக்கு அதிகமாக யாதொன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நமது நாட்டில் 19-ம் நூற்ருண்டில் இருந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தர், தங்கள் உத்தியோக முறைக்கு உதவியாக இருப்பதற்காகவும், நமது நாட்டுக் கலையின் போக்கை அறிவதற்காகவும், “**சென்னைக் கல்விச் சங்கம்**” (The Madras College) என்னும் ஒரு சங்கம் ஏற்படுத்திக் கொண்டு, அதன் மூலமாகத் தமிழைக் கற்றுவந்தார்கள். இச்சங்கத்தினல் தமிழ் மொழிக்கு விசேஷமாக யாதொரு அபிவிருத்தியும் உண்டானதாகச் சொல்ல முடியாது. கிறிஸ்தவர்களால் தமிழுக்கு ஏற்பட்ட அபிவிருத்தி எல்லாம் பாதிரிமாரைச் சேர்ந்ததே. பாதிரிமாரும் தமிழுக்காகச் செய்ய வேண்டும் என்னும் கருத்துடன் செய்யவில்லை; தங்கள் மதத்தைப் பரப்புவதற்காகச் செய்த முயற்சியின் பலனே தமிழுக்குச் சில நன்மைகளை அளித்தது. எவ்வாருயினும், அந்த நன்மைகள் ஐரோப்பியப் பாதிரிமார்களால் உண்டானவையே.

—

8. இன்ப வாழ்க்கை

[ஊ. சா. வேங்கடராம ஐயர்]

உலகத்து மக்களாய்ப் பிறந்தார் ஒவ்வொருவரும் விரும்புவது இன்பமாக வாழ்வதையே. அங்ஙனம் இன்பமாக வாழ்வதற்கு வாழ்க்கையிலே இடையூறுகள் உண்டாகாமல் இருத்தல் வேண்டும். இடையூறுகளாகிய சிக்கல்கள் அற்ற வாழ்க்கையே இன்ப வாழ்க்கையாம்.

இன்ப வாழ்க்கையினை உடையவர், இம்மையிலே பலராலும் நன்கு மதிக்கப்பெறுவர் ; மறுமையிலே ஆண்டவனது திருவருளுக்கும் உரியவராவர். இந்த இரண்டும் மிகப் பெரும் பயன்களல்லவா ? இத்தகைய மேலான நன்மைகளைத் தரக்கூடிய இன்ப வாழ்க்கையை அடைவதற்கு ஒரு வழி இருந்தே ஆகவேண்டும். அந்த வழியே வாழ்க்கையின் சிக்கறுக்கும் வழியாகும்.

ஆக்ஸ்பர்ட் என்பது இங்கிலாந்திலுள்ள ஒரு நகரம். அங்கே ஒரு பல்கலைக் கழகம் இருக்கின்றது. அந்தப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தது, பாலியல் என்னும் கல்லூரி. ஒரு காலத்தில் அந்தக் கலாசாலையின் தலைமைப் பேராசிரியராக, சர். பென்ஜமின் ஜோயெட் என்னும் துரைமகனர் இருந்தார். அவர் பெரிதும் கற்றவர் ; நல்லொழுக்கங்கள் நிறைந்தவர் ; மாணுக்கர்களிடத்தில் பேரன்புடன் பழகும் இயல்பினர் ; மாணுக்கர்களது கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியன வளரவேண்டி ஞாயிற்றுக்கிழமை தோறும் சிறப்பாகச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதை வழக்கமாகக் கொண்டவர் ; பல அரிய பொருள்களைப்பற்றி வேண்டிய இடங்களில் விளக்கமாக விரித்தும் சுருக்கியும் கூறும் ஆற்றல் மிக்கவர். இவற்றுல், மாணுக்கர்கள் இவரிடத்திலே பெரிதும் மரியாதையுடன் நடந்து கொள்ளலாயினர். இவர் கூறும் ஒவ்வொரு சொல்லையும் பொன்னே போற் போற்றி இன்புற்றவர் பலர்.

இங்ஙனமாக, இவர் கூறுவனவற்றைப் பேரன்புட னும், ஆர்வத்துடனும் கேட்டு வந்தான் ஒரு நன் மாணுக் கன். அவற்ருல் அவனுக்குப் பல ஐயப்பாடுகள் நீங்க லாயின. என்ருலும், சிற்சில ஐயப்பாடுகள் நீங்காமல் இருந்தன. இந் நிலையிலே, அவனது கலாசாலைப் படிப்பு முடிந்தது. தகுதிச் சீட்டைப் பெற்று வீட்டிற்கு வரவேண் டிய காலம் வந்தது. என்ன செய்வான்! தனக்குற்ற ஐயப்பாடுகளைப் போக்கிக் கொள்ளாமல் வீட்டிற்குப்போக அவன்விரும்பவில்லை. தனக்கு உண்டாகிய ஐயப்பாடு களை நீக்கத் தக்கவர் தனது பேராசிரியரே என்பதுதான் அவனது கருத்து.

உடனே அவன் தனது தலைமைப் பேராசிரியராகிய அப்பெரியாரிடம் சென்ருன்; வணங்கினுன்; "மாண்பு மிக்குடைய ஐயன்மீர், அடியேன் தங்களிடத்தில் பல ஆண் டுகளாகக் கற்றவன்; தங்களுடைய உபதேச மொழிகளைக் கவனமாய்க் கேட்டவன்; அவற்றை அங்ஙனமே கைக் கொள்ள வேண்டும் என்பதிலே பெரு விருப்பம் உள்ள வன்; அத் துறையிலே பழகியும் வருபவன்; பல ஐயப் பாடுகளைப் போக்கிக் கொண்டவன் என்ருலும், அவற்றை முற்றிலும் அப்படியே நினைப்பில் வைத்துக் கொள்ளக் கூடவில்லை. சிற்சில ஐயப்பாடுகளும் நீங்காம லிருக்கின் றன. ஆதலின், தேவரீர் தயை செய்து, அடியேற்கு யாண்டும் நிலைத்து நின்று வாழ்க்கையின் சிக்கறுக்கும் வழியாகச் சிலவற்றைக் கூறி யருளல் வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

வேண்டலும், அப்பேராசிரியர், "நன்மாணவ! என் னிடத்திலே பலர் கற்றிருக்கின்றனர். உன்னை யொத்து அடக்கமும் அறிவும் வாய்ந்தவர் சிலரே. நீயோ விடயங் களை நன்ருய் அறிந்துகொண்டவன்; ஆராய்ந்து பார்ப்ப திலும் திறமை வாய்ந்தவன். அப்படி யிருந்தும் இன்னும் நீ அறிந்து கொள்ள விரும்புகின்ருய். இந்த விருப்பமே மக்களுக்கு வேண்டுவது. 'கற்றது கைம்மண்ணளவு;

கல்லாதது உலகளவு.' நான் என்னுடைய வாழ்க்கையிலே கைக்கொண்டு நடக்க வேண்டிச் சில முடிபுகளை வரையறுத்துக் கொண்டிருக்கின்றேன். அம்முடிபுகள் உன்னுடைய ஐயப்பாடுகளையும் நீக்கக் கூடியன என்பது எனது கருத்து. பொதுவாக, மக்களது வாழ்க்கைக்கு யாண்டும் நிலைத்து நின்று துணைசெய்யக் கூடியனவே அம்முடிபுகள் என்பதும் எனது உறுதியான கொள்கை. ஆதலின், உனது வினவுக்கு விடையாக அந்த முடிபுகளையே உனக்குக் கைக்கொள்ளும் பொருட்டுக் கூறுவேன். 1. சொல்லாதே (Never tell); 2. அஞ்சாதே (Never fear); 3. கன்றுதே (Never fret); 4. தவருதே (Never fail); 5. மாற்ருதே (Never disappoint); 6. தட்டாதே (Never spare); 7. வெகுளாதே (Never quarrel) என்பனவே அம்முடிபுகள். இந்த ஏழு முடிபுகளையும் இனிது ஆராய்ச்சியுடன் கைக்கொள்பவர், தமது வாழ்க்கையின் சிக்கல்களை அறுத்து இன்புறுவர் என்பது எனது நம்பிக்கை. இவற்றைக் கருத்தோடு உணர்ந்து, கைக்கொண்டு, இன்புறுவாயாக" என்று கூறியருளினர்.

கேட்ட அம் மாணக்கன் தனது பேராசிரியரை வணங்கினன்; பிரியா விடை பெற்று வீட்டிற்குப் போனன்; ஆசிரியர் கூறிய அறவுரைகளை ஆழ்ந்து ஆராயலுற்ருன்; பல அருமைப்பாடுகளைக் கண்டான்; ஐயப்பாடுகளினின்றும் நீங்கினன்; அவற்றையே தனது வாழ்க்கைக்குச் சிறந்த மேல் வரிச்சட்டமாக அமைத்துக் கொண்டான்; இன்புற்ருன். அவன் கண்டன:

சொல்லாதே:—மறைக்கத் தக்க செய்திகளையும், பிறர் அறிந்தால் நன்மை நீங்கித் தீமை விளையக்கூடிய செய்திகளையும் சொல்லாதே; அறிவுடையோர் குழுமியிருக்கும் சபையிலே முதன் முதலிலே சொல்லாதே; பிறர் விரும்பாதபொழுது சொல்லாதே; ஆராயாமற் சொல்லாதே; பயனற்ற சொற்களைச் சொல்லாதே; பிறர்க்குத் துன்பத்தை விளைவிக்கும் சொற்களைச் சொல்லாதே; ஆனல்,

'சன சமூகத்திற்கும், நாட்டிற்கும் தவருது நன்மையைச் செய்யக்கூடியது' என்று உண்மையாக நம்பப்பட்ட செய்தியை ஒளிக்காமல் சொல்; உறுதியாகச் சொல்; பலர் முன்னிலையிலும் சொல்; அயலார் எவ்வளவு அறிவற்றவராகக் காணப்பட்டாலும், அவர் கூறுவனவற்றைக் கேள்; இழிந்தனவா யிருப்பினும் கேள்; பயனற்றனவா யிருப்பினும் கேள்; வெறுப்புக் கொள்ளாது கேள்; விருப்புடன் கேள்.

அஞ்சாதே :—உண்மை நெறி யொழுகும் மாந்தர் எவரும், எதன் பொருட்டும் அஞ்சவேண்டியதில்லை; எவரிடத்திலும் அஞ்சவேண்டியதில்லை; எக்காலத்திலும் அஞ்சவேண்டியதில்லை. அச்சம் தன்னை உடையவனைத் தனக்கும் பிறர்க்கும் பயன் படாதவனுகச் செய்துவிடும்; தாழ்வினை அடைவிக்கும். அது கோழைத்தனமுமாகும். கோழைத் தன்மை வாய்ந்தவன், எதனையும் தன்னலத்திற்கே பயன் படுத்திக்கொள்ள முயல்வான்; பிறரையும் தன்னலக்காரராகவே எண்ணுவான்; 'பிறருக்கு உதவிசெய்தல்' என்ற பேச்சைக் கேட்டாலும் அஞ்சி உடல் நடுங்குவான். அவன் இருக்கும் நாடும் இன்புற மாட்டாது. உண்மை இருக்குமிடத்தில் அச்சம் உடனிருக்க அஞ்சும். ஆதலின், ஒவ்வொருவரும் உண்மைநெறியொழுகி, அச்சமின்றி நிமிர்ந்து, வீர புருடராய் வாழவேண்டும். 'அஞ்ச வருவதுமில்லை; அஞ்சுவது யாதொன்றுமில்லை.' அன்றியும் உண்மைக்கு மாருக நடப்பதில் அஞ்சு. தீச்செயல்களைப் புரிவதில் அஞ்சு. விதி விலக்குகளுக்குக் கட்டுபட்டு நடப்பதில் அஞ்சு. இந்த அச்சம் அஞ்சாமையே.

கன்ருதே :—ஒவ்வொருவரும் உலக வாழ்க்கையில் நல்லனவாகவும் தீயனவாகவும் பலவற்றைச் சந்தித்தல் கூடும்; ஆராய்ந்து பார்க்கத் தீயனவே பெரும்பான்மையனவாக இருக்கும். அங்ஙனமே பலவற்றைச் செய்யவும் வேண்டிவரும். அவற்றில் விருப்பு, வெறுப்பு இல்லாமல் இருப்பதே இன்ப முறுதற்கு உற்ற வழியாவது. தவறி நடந்த ஒரு காரியத்தையே எண்ணி எண்ணி மனம் கரைதல் கூடாது.

சென்றவற்றை உன்னிக் கன்றுவது நன்றன்று. அது, மனத்தைப் புண்படுத்தி, இயற்கையான ஊக்கத்தையும், உயர்வையும் கெடுத்துவிடும். ஆசைக்கு அடிமைப்பட்டவன் யாண்டும் மீளா அடிமையாகி விடுவான். ஆசையை அடிமைப் படுத்திக்கொண்டவன் ஆண்டானாகித் திகழ்வான். 'போனது போகட்டும், மனமே, இனிப் புத்தியாய்ப் பிழை தினமே' என்பது மனந்திருத்த முயலுவோர் கைக்கொள்ளக் கூறிய பழமொழி. எங்கே ஊக்கம் இருக்கின்றதோ, அங்கே கன்றுதல் என்னும் இழி குணம் இருக்கமாட்டாது. உயர்வுற விழைய வேண்டியதே மக்களாவார் குறிக்கோளாகும். மனம் உடைந்து போமாறு கன்றுதல் மக்களாவார் செய்யத்தக்கதன்று.

தவறுதே:—வெற்றி, தோல்விகளை எதிர் பார்ப்பது வினை செய்வோர் கடமையன்று. உரிய காரியங்களைச் செய்ய வேண்டியதே அவர் தம் கடமையாவது. பயன் பெறுவதும், பெறுமற் போவதும் மனிதச் செயல்களல்ல. செய்யவேண்டிய முறையிலே சிறிதும் தவறுதலின்றிச் செய்து நிறைவேற்ற வேண்டியதே மனிதச் செயல். ஒரு வினை இனிது நிறைவேறவில்லை என்பதே குறைவாகக் கருதப்படும். பயன் பெறுதது குறையாகக் கருதப்படமாட்டாது; பழிப்புக் கிடமாகாது. முயற்சியின்மையே பழிப்பைத் தருவது. தவறுதல், முயற்சியின் குறைவால், அல்லது இன்மையால் உண்டாவதே. 'முயற்சி மெய்வருந்தக் கூலி தரும்', 'முயலுக, மேலும் முயலுக, முயலுக' என்பன தவறுதவர்கள் கூறும் மகா மந்திரங்கள். ஒவ்வொருவரும் தொடுத்த வினையை இனிது நிறைவேற்ற முயலுவதிலே தவறுதல் கூடாது.

மாற்றுதே:—எவரும் தமது இயற்கை நிலைமையினின்றும் மாறுபடலாகாது. இயற்கை, 'மற்றொன்று சூழினும், தான் முந்துறும்' வன்மை வாய்ந்தது. அங்ஙனமே, பிறர் தம்மை மதிக்குமாறு வைத்துக்கொண்டிருக்கும் அந்த நிலைமையையும் மாற்றிக் கொள்ளலாகாது. எக்காரணங்

கொண்டும், தாம் கைக்கொண்டொழுகும் நற்குண நற் செய்கைகளிலிருந்தும், நற் பழக்க வழக்கங்களி லிருந்தும் தம்மை மாற்றிக் கொள்ளலாகாது. தமது நிலைமையினின்றும் மாறுவது உடனுறையும் ஐம்பெரும் பூதங்களால் நகுதற் பொருட்டாகி இகழப்படும்; மிகச் சிறந்த தோற்றத்தையும் அழித்துவிடும்; அறிந்து செய் யும் குற்றமாகவும் அஃது அறிவுடையோராற் கருதப்படும்.

தட்டாதே:—ஒரு காரியம் செய்து நிறைவேற்றக் கூடியதாக இருக்கலாம்; அதைக் கொண்டு நிறைவேற்றித் தருமாறு பிறராலே கேட்டுக் கொள்ளப்படலாம். அஃது இன்றியமையாததாக இருந்தால், போதிய காலம் கொடுக் கப்படாமல், குறுகிய காலத்திலே நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டாலும் தட்டலாகாது. உடற்றுன் பம், மனத்துன்பங்களுக்கு உட்பட வேண்டியதாயிருந்தா லும் தட்டலாகாது; தாங்கொண வேறு பல இடையூறு களை உண்டுபண்ணுவதாயிருந்தாலும் தட்டலாகாது. அக் கேட்டுக்கொண்டவர் இன்புறும் பொருட்டும், ஆற்றலை வெளிப்படுத்தும் பொருட்டும், அக்காரியத்திலே கண்ணு யிருந்து நிறைவேற்ற வேண்டும். 'நாம் அப்படிச் செய்யா விட்டால் என்ன? வேறு ஒருவர் செய்து விடுகிறுர்' என்று அலட்சியம் பண்ணித் தட்டலாகாது. சுகத்தை வேண்டிப் பல சாக்குப் போக்குகளைச் சொல்லித் தட்டலாகாது. உடற்றுன்பம், பொருள் நஷ்டம் முதலியவற்றைப் பின் னர்ச் சீர்திருத்திக் கொள்ளலாம். காலம் போய்விடும்; காரியம் வராது. ஆதலின், இயன்றதொரு காரியத்தை நிறைவேற்றுவதில் தடை சொல்லலாகாது.

வெகுளாதே:—பிறருடைய மனம், மொழி, செயல் ஆதியவற்றுல் ஒருவருடைய உடல், பொருள், ஆவிகளுக்குக் கஷ்ட நஷ்டங்கள் உண்டாகலாம். அவற்றின் பொருட்டுத் துன்புற்றவர், துன்பிழைத்தோர்க்குத் திரும்பித் தீமைகளைச் செய்யலாகாது; கோபங் கொள்ளலாகாது. ஒருவரைப் பிறகு பார்த்துப் பேசுவதற்குக் கூசுமாறு எவரும் எத்

தனைக் கோபச் செயல்களையும் செய்துவிடலாகாது. அது பாபங்களுக்கெல்லாம் தாய் தந்தையாவது; சேர்ந்தாரைக் கொல்வது. ஒருவரோடொருவர் உறவாடி இன்புறுவதே மாந்தர் கடன். அந்த இன்பம், கோபம் கொள்பவரிடம் உண்டாக மாட்டாது. ஆதலின், எவர்க்கும், எதன் பொருட்டும் தீங்கு செய்யலாகாது; நஷ்டத்தை உண்டுபண்ணலாகாது. அங்ஙனமே எவரிடத்தும் கோபங்கொள்ளலாகாது.

இங்குக்கூறியன, மாணவர்களின் மனத்திலே இனிது பதிவுற்று, யாண்டும் நின்று பயன்படுவது மேலாகும்.

"சொல்லாதே அஞ்சாதே துன்பிலுளங் கன்றாதே
தள்ளாதிஃதென்று தவறாதே—வல்லனபின்
மாற்றாதே தட்டாதே மண்டி வெகுளாதே
ஆற்றலிடை யூறிலதர்."

---

16. நாடகம்

[வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியார்]

பிறரைப் பார்த்து, நடித்தொழுகி உயர்வதென்பது உலக மக்கள் ஒவ்வொருவருக்கும் இயற்கையாய் இருந்து வருகிறது. பிள்ளைகள் முதல் பெரியோர்கள் வரையில் அனைவரும், மொழி வழிகளிலும், பழக்க வழக்கங்களிலும், நடை யுடைகளிலும், ஒருவரைப் பார்த்து மற்றவர் பின் பற்றி நடந்து மேன்மையுற்று வரும் இயல்பினராகவே இருக்கக் காண்கிறோம்.

இளங் குழவி, தன் வீட்டார் பேசும் மொழியையும், அதனைப் பேசும் வழியையும், பழக்க வழக்கங்களையும், நடை யுடைகளையும் பின் பற்றி நடக்க முயன்று, ஆண்டு முதிர்ந்த காலத்துத் தம் வீட்டார் போலவே பேசி யொழுகுவதை நாம் கண்ணாரக் காண்கிறோமல்லவா? சிறுவர்கள் பெரியோர்களைப் பார்த்து எல்லா வகையிலும் அவர்களைப் போலவே நடித்துப் பழகிச் சிறப்படைந்து வருவதும்,

ஆண்டு முதிர்ந்தோர், அறிவுடைச் சான்றோர்களைப் பின் பற்றி நடந்து நலமடைந்து வருவதும், உலகில் நடை பெற லான செயல்களேயாம். இதனாலேயே ஒரு வீட்டாரின் பழக்க வழக்கங்கள் மற்ற வீட்டாருக்குச் சிறிது வேறு பட் டனவாகவும், ஒரு நாட்டாரின் பழக்க வழக்கங்கள் மற்ற நாட்டாருக்குப் பெரிதும் வேறு பட்டனவாகவும் காணப் படுகின்றன.

இங்ஙனம் பிறரைப் பார்த்து நடித் தொழுகுவதில் நலம் விளைவதே யன்றி, தீயோரைப் பின் பற்றி யொழுகின், தீமை விளைவதும் இயல்பேயாகும். ஆயினும், இன்பங் கருதி, உயர்வு விழைவதே மக்கள் இயற்கையாக லின், அந்நெறிச்செல்லும் அறிவுடைப் பெரியோர்களையே பெரும்பாலோர் பின் பற்றி நடித் தொழுகுகின்றனர். இந் நடிப்புப் போலியாயிராது உண்மையா யிருத்தலினு லேயே, இது நாளடைவில் நலம் பயப்பதாய் இருந்து வரு கிறது. இவ்வாறு நடித்தொழுகி முன்னேற்றம் விரும்பும் மக்களுக்கு, நன்னெறி காட்டும் முறையில் நடிக்கப்படுவதே நாடகமாகும்.

மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்குங்கால், இன்னுரையாடி இன்ப மெய்துகின்றனர்; அம் மகிழ்ச்சி அதிகப்படின், பாடிப் பரவச மடைகின்றனர்; பின்னும் மகிழ்ச்சி மிகின், ஆடியும் அகங் களிக்கின்றனர். இங்ஙனம் மகிழ்ச்சிப் பெருக்கில், இன்பந் தோன்றப் பேசியும், பாடியும், ஆடியும் அகமகிழ்வது அவர்கள் இயற்கையாகும். இவ் வியற்கை, மக்களிடத்தே யன்றி, மற்ற விலங்கு, பறவை முதலியவைக ளிடத்திலும் இருப்பதைக் காணலாகும். இவ்வாறு இயற்கையி லெழுந்த உரையாடலும், பாடலும், ஆடலும் ஆகிய இம் மூன்று செயல்களுமே, ஒன்று கலந்து, திருந்தி, இலக்கண வரம்புக்குட்பட்டு, நாடகமென நடை பெறலாயிற்று.

மக்களது உள்ளத்திலெழும் உணர்ச்சிகளையும், எண் ணங்களையும், மன மாறுபாடுகளையும் வெளிப்படுத்துவதற்கு

இரண்டு வழிகள் உள: முதலாவது, சொல்; இரண்டாவது, அவிநயம். சொல்லால் எண்ணங்களைத் தான் வெளிப்படுத்தலாமே யன்றி, உணர்ச்சிகளையும் மன மாறுபாடுகளையும் அவ்வளவு நன்ருய் வெளிப்படுத்த இயலாது. அவிநயம், அவற்றைப் பிறரறியுமாறு நன்கு வெளிப்படுத்த வல்லது. இச்சொல், அவிநயம் ஆகிய இரண்டும், ஆடல் பாடல்களுடன் கலந்து, ஒன்றுக்கொன்று ஏற்றவாறு இயைந்து நாடகத்தில் நிகழும்.

உலக நிகழ்ச்சிகளைத் திருப்பிக் காட்டும் கண்ணுடி, நாடகம் என நவிலலாம். எங்ஙனமெனில், கூறுதும். எல்லோரையும் காணுங்கண், தன்னைத்தான் காண்பதில்லை. யாவருடைய முதுகையும் பார்க்கும் நாம், நமது முதுகைப் பார்த்துக்கொள்ள முடிகிறதில்லை; காண வேண்டுமானல், கண்ணுடி வேண்டியிருக்கிறது. இவ்வாறே நமது வாழ்க்கையிலுள்ள குற்ற நற்றங்களான நிகழ்ச்சிகளை நாம் பெரிதும் அறிவதில்லை. அவற்றை அப்படியே கதை யுருவில் திருப்பிக் காட்டி, நாமறிய உணர்த்தும் கண்ணுடிபோல் நாடகம் நடை பெறுகிறது.

நாடகம் நன்கு நடை பெறுதற்கேற்ற ஒரு திட்டம் வேண்டுமல்லவா? அதுவே நாடக நூல் எழுதவேண்டுமென்னும் எண்ணத்தை எழுப்பியது. இத்தூண்டுதலால் நாடக நூல்கள் பல தோன்றின. நாடக நூல்கள் பல தோன்றவும், அவற்றை ஒழுங்கு படுத்துவதற்கு நாடக இலக்கணம் வகுக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. ஆதலால், நாடக இலக்கணம் தோன்றியது. இங்ஙனம் நாடகம் பற்றிய இலக்கிய இலக்கண நூல்கள் எழுந்து வளர்ந்தன.

உலக வரலாற்றில், கிரேக்க நாட்டிலேயே முதன் முதலில் நாடகம் உருப்பெற்றதென்று உரைப்பர். நமது நாட்டில் சமய சம்பந்தமாகவே தமிழ் நாடகம் தோன்றியது. கோயில் திருவிழாக்களில், அவ்வத் திருவிழாக்கள் பற்றிய கதைகள், நாடகமாக நடித்துக் காட்டப்பட்டன. இவ்வாறு

தோன்றிய தமிழ் நாடகம், நாளடைவில் சீர்திருந்தி, இலக்கண வரம்புகளுடன் நற்கலையாய் மிளிர்ந்தது. இந்நிலையில், இது, அரசர்களாலும், புலவர்களாலும் நன்கு வளர்க்கப்பட்டு வளர்ந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன், தமிழ் நாட்டில் நாடகம் செழித்தோங்கி யிருந்தது என்பதற்குப் பழந்தமிழ் நூல்களில் பல சான்றுகள் காணப்படுகின்றன.

இயல், இசை, நாடகம் என்று தொன்று தொட்டுத் தமிழ் மூவகையாகப் பகுத்து மொழியப்படுகிறது. இயற்றமிழ் நூல்களே இப்பொழுது உள்ளன. இசைத்தமிழ் நூல்களும், நாடகத்தமிழ் நூல்களும் இருந்தன. ஆனால், அவை யாவும் அழிந்தொழிந்தன. பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம் முதலிய இசைத்தமிழ் நூல்களும், முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், கூத்த நூல் முதலிய நாடகத் தமிழ் நூல்களும், பெயரளவிலேயே உள்ளன. இளங்கோவடிகள் இயற்றியருளிய சிலப்பதிகாரம் என்னும் பழைய செந்தமிழ் நூல் ஒன்று மட்டுமே நாடகக் காப்பியம் என்று நவிலப்பட்டு நாம் காண இருக்கிறது. அந்நூலில், நாடகத்தைப்பற்றி அடியார்க்கு நல்லார் என்பவர் வரைந்துள்ள உரையைப் படிப்போர், பழங் காலத்தில் தமிழ் நாடகம் எத்தகைய சீரிய நிலையிலிருந்தது என்பதைத் தெளிவாயுணர்வர். இங்ஙனம் சிறப்புடன் விளங்கிய நாடகத் தமிழ், பிற்காலத்தில், தேய்பிறை யெனச்சுருங்கி வீழ்ச்சியுற்றது. இதற்குக் காரணமென்ன?

"ஒழுக்க நிலை வகுக்கப் புகுந்த ஆரியருஞ் சைனரும், நாடகக் காட்சியால், காமமே, அறிவிலும் மிகப்பெருகுகின்றதென்ற போலிக் கொள்கை யுடையராய்த் தமது நூல்களிற் கடியப்படுவவற்றுள் நாடகத்தையும் சேர்த்துக் கூறினர்; அக்காலத்திருந்த அரசர்களுக்குந் துர்ப்போதனை செய்து, நாடகத் தமிழைத் தலையெழவொட்டாது அடக்கி வந்தனர்" என்று வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் கூறுகின்றார்கள். இதனால், நாடகத்தமிழ், நல்லோர் கை

விட்டு, அல்லோர் கையகப்பட்டுத் தெருக்கூத்தளவில் தாழ்ந்து, இகழ்ச்சிக்குரியதாய் நிலை மாறியது. நிற்க.

வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டு, ஓய்வின்றி யுழைத்துப் பாடுபடும் ஏழைத்தொழிலாளர்களும், படிப் பறியாப் பாமரர்களும், கண்டு, கேட்டுக் களிப்படைந்து, நல் லறிவு கொள்ளும் நன்னோக்கத்துடனேயே நாடகம் நன் முறையில் அமைக்கப் பெறலாயிற்று. இந்நாடகத்தைக் காண யாவரும் விரும்பி வருதற்கேற்ற வகையில், இது இன் பச்சுவையுடன் இயல்வதாயிற்று. இன்பச்சுவையும் உலக நடையை ஒட்டியதேயாம். வாழ்க்கைச் சித்திரங்களும், வரலாற்று நிகழ்ச்சிகளும், புத்துயிர் பெற்றுக் கண்ணுக்கும் செவிக்கும் பெரு விருந்தாகி இன்ப மளிப்பதாயின், நாட கத்தை எவர் விரும்பார்?

நல்லறிவு கொளுத்துவதில், நாடகம் தனி சிறந்து விளங் குதலின், இது மேனாட்டாரால் மிக மேன்மையுடன் கொண் டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலும், நாடகம் நற்கலையா மெனப் போற்றி வளர்க்கப்பட்ட செய்தி முன் கூறப்பட் டது. இயல், இசை ஆகிய இரண்டும், கேள்வி யின்பம் ஒன்று மட்டுமே பயக்கவல்லது; இவ்விரண்டுங்கூடி இய லும் நாடகமோ, கேள்வி யின்பத்தோடு காட்சி யின்பத்தை யும் பயக்கவல்லது. ஆகலின், நாடகம் உயர் கலையாய் மதிக்கப்படுவதில் ஒன்றும் வியப்பில்லை.

நாடகத் தமிழ், **வேத்தியல், பொதுவியல்** என இரு பிரிவின தாகி இயன்று வந்தது. வேத்தியலாவது, அரசர்களும், அவர்களைச் சார்ந்தோர்களும், தனிமையிற் கண்டு, களித்து, இன்புறுதற் பொருட்டு இயல்வதாகும். பொதுவியலாவது, பொது மக்கள் யாவரும் பார்த்து, மகிழ்ந்து இன்புறுதற் பொருட்டுப் பொதுவிடத்தில் இயல்வதாகும். இங்ஙனம் நடைபெறும் நாடகம், ஒன்பான் சுவையுடன் வேறு வேறான பல காட்சிகளையுடையதாயும், பல திற மக்கள் பயில்வதாயும் நிகழும்.

மேனுட்டார், துன்பியல் நாடகம், இன்பியல் நாடகம் என்று நாடகத்தை இருவகையாகப் பிரித்துக் கூறுவர். கதைத் தலைவனும், தலைவியும், பலவித இன்னல்கள் எய்தி, துன்புற்று, முடிவில் அவர்கள் இறந்துவிடுவதாக நாடகம் முற்றினுல், அது, துன்பியல் நாடகம் என்று சொல்லப்படும். அன்றி, அவர்கள் இன்னல்கள் எய்திடினும், இறுதியில் இன்புற்று வாழ்ந்தனர் என்று முடியின், அது இன்பியல் நாடகம் என இயம்பப்படும். பொதுவாய் இவற்றைத் துன்ப முடிவுள்ள நாடகம், இன்ப முடிவுள்ள நாடகம் என்று கூறலாம். இவையிரண்டுங் கலந்து மூன்ருவது வகை நாடகமொன்றும் உண்டென்பர்.

நாடகம், மக்கள் வாழ்க்கையின் சிக்கறுக்க, அல்லது வாழ்க்கையைச் சீர்திருத்தவே தோன்றியதாதலின், இது, உயர்ச்சி கருதும் மக்களுக்குக் கட்டாயமாய் வேண்டியதொரு கலையாகும். இவ்வுண்மையை நன்குணர்ந்த பெரியோர்கள் பலர், பிற்காலத்தில், நாடகக் கலையை நன்கு வளர்க்க முயன்றிருக்கிருர்கள். சீகாழி அருணுசலக் கவிராயர் அவர்கள் இயற்றியுள்ள இராம நாடகமும், குமர குருபர சுவாமிகள் இயற்றியுள்ள மீனுட்சியம்மை குறமும், திரிகூட ராசப்பக் கவிராயரவர்கள் இயற்றியுள்ள குற்ருலக் குறவஞ்சியும், இவைபோல்வன பிறவும், நாடகக் கலைக்கு ஒருவாறு அழகு செய்து விளங்கின்றன. அறிஞர் சுந்தரம் பிள்ளையவர்கள் அகவற்பாவில் அமைத்துள்ள "மனேன்மணீயம்" என்னும் அரிய நாடக நூல், புலவர்களால் பொன்னே போல் போற்றப்படுகிறது. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரவர்கள், "நாடகவியல்" என்னும் நாடக இலக்கண நூலை நன்கு உழைத்து இயற்றியுள்ளார்கள். இக்காலத்தில், இராவ் பகதூர் சம்பந்த முதலியார் அவர்கள், சென்னையில், "சுகுண விலாச சபை" ஏற்படுத்தி, அதைப் பல்லாண்டுகளாய்த் திறம்பட நடத்திவருவதோடு, ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ் நாடக நூல்களை எழுதி வெளியிட்டு நாடகத்திற்குப் புத்துயிரளித்துள்ளார். மற்றும் பல அறிஞர்கள்,

தமிழ் நாடக வளர்ச்சி கருதித் தற்காலத்தில் உழைத்து வருகிறார்கள்.

நாடகத்தின் சிறப்பை நன்கறிந்தே, கல்வித் துறையில் வல்ல பெரியோர்கள், நாடக மேடையும் ஓர் உறுப்பாய் விளங்கும்படி கல்விக் கழகங்களை அமைக்கிறார்கள்; அதில் மாணவர்களைச் சேர்த்துப் பயிற்றி, நடிக்கவும் செய்விக்கிறார்கள். நில நூல் பற்றியும், வரலாற்று நூல் பற்றியும், மற்றுமுள்ள நூல் பற்றியும் படித்தறிவதைவிட, அவற்றை நாடக மேடையில் நடிக்கக் காண்போமானால், அச்செய்திகள் மிக ஆழமாய் உள்ளத்தில் பதிகின்றன. ஆகலின், நாடகம், மாணவர்களுக்கு மிகப் பயனுடையதாமென்பது கூறாமலே விளங்கும். மாணவர்களுக்கு எல்லாக் கல்வியறிவையும் காட்சிகள் மூலமாகவே கற்பிப்பது சிறந்ததாகுமென்றும், இயன்ற வரையில் அங்ஙனமே செய்ய வேண்டுமென்றும் மேனாட்டறிஞர்கள் சிலர் விளம்புகிறார்கள்.

நாடகம், ஒரோ வழித் தீமை விளைப்பது உண்டெனினும், அதற்குக் காரணம் நாடகமன்று; கல்வியறிவில்லா மக்களாலும், ஒழுக்கங் கெட்டவர்களாலும் நாடகம் நடத்தப் படுவதேயாகும். ஆதலால், கல்வியறிவிற் சிறந்தவர்கள், நாடகத்திற் கலந்து நடித்து, அதனை வளர்க்க முற்பட்டார்களாயின், நாடகத் தமிழ், பழைய நன்னிலையை யடைந்து, எளியவர்களுக்கு நன்னெறி காட்டும் நற்கலையாய்த் திகழுமென்பதில் ஐயமுண்டோ?

குறிப்புரை

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

1. உளவாக்கலும் - உண்டாக்குதலும், நிலைபெறுத்தலும் - நிலைபெறச் செய்யலும், நிலைபெறுத்து, பிறவினைப் பகுதி; (நிலை பெறு, தன்வினைப்பகுதி), நீங்கலா (தம்மை விட்டு) நீங்குதல் இல்லாத, அலகு இலா - அளவில்லாத, நீங்கலா அலகிலா என்பவையிரண்டும் விளையாட்டுக்கு அடை. விளையாட்டுடையார் அவர் தலைவர் - விளையாட்டாக உடையவர் எவரோ, அவ்வரே தலைவர்.

2. கந்து - கட்டுத்தறி, உக - முறியச் செய்யும், கட்செவி - பாம்பு, இரதம் - பாதரசம், ஐந்துலோகம் - பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், வேதித்து - பரிசவேதி செய்து (பொன்னாக்கி), சந்ததமும் - எப்பொழுதும், தன் நிகர் இல் - தனக்கு ஒப்பில்லாத, திறம் - வகை, சத்து ஆகி - உண்மையாகி, சித்தம் - மனம், தேசோமயானந்தமே - ஒளிமயமான இன்பவடிவமே.

2. கலைமகள் வாழ்த்து

தூக்கும் - ஆராய்தற்குரிய, பனுவல் - நூல், வாக்கு - கவிதை. வட நூற்கடல் - வடமொழியிலுள்ள நூற் பரப்பு, தேக்கும் - நிறைந்த, செழுந்தமிழ்ச் செல்வம் - வளப்பமுள்ள தமிழ் நூற் பரப்பு, செந்நா, பண்புத்தொகை.

3. தமிழ்த்தாய் வாழ்த்து

1. ஆரும் - நிறைந்துள்ள, எழில் - அழகு, வதனம் - முகம், திகழ் - விளங்குகின்ற, பரதகண்டம் - இந்தியா, பிறை நுதல் - பிறைச்சந்திரனைப் போன்ற நெற்றி; உவமைத் தொகை, தெக்கணம் - Deccan, திரவிட நல் திருநாடு - தமிழ்நாடு, தமிழ் அணங்கு - தமிழ்த்தாய்; உருவகம்.

2. அளித்து - காப்பாற்றி, துடைக்கினும் - அழித்தாலும், தமிழினின்றும் பிறந்த மொழிகள், கன்னடம், தெலுங்கு, மலை

யாளம், துளு, உதரம் - வயிறு, ஆரியம் - சமஸ்கிருதம், சிதையா-அழியாத; ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், வாழ்த்துதும்-வணங்குவோம்; உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று.

II. அறவுரை

1. திருக்குறள்

2. ஆர்வம் - விருப்பம், ஈனும் - தரும், அது - அவ்விருப்ப முடைமை, நாடாச்சிறப்பு - அளவில்லாத சிறப்பு.

3. இனிய - இனிய சொற்கள், இன்னாத - கடுஞ் சொற்கள், காய் கவர்ந்தற்று - காய்களை நுகர்ந்ததனோடு ஒக்கும்.

4. நன்றி - (பிறர் செய்த) உபகாரம், நன்று அன்று - அறமன்று.

5. சமன் செய்து சீர்தூக்கும் - முதலில் சமனாக நின்று பின்னே தன்னிடம் வைத்த பாரத்தை அளவு செய்யும்; கோல் - தராசு, கோடாமை - சாயாமை, சான்றோர் - பெரியோர், அணி - அழகு ஆகும், இச்செய்யுள் உவமையணி.

6. உள் ஆறும் - மனத்தில் (அப்பொழுதே) ஆறிவிடும், வடு - தழும்பு, ஆறிப்போவதனால் தீயினாற் சுட்டதனைப் புண் என்றும், ஆறாது இருத்தலால், நாவினாற் சுட்டதனை வடுவென்றும் கூறினார். இச் செய்யுள் வேற்றுமை அணி.

7. அகழ்வாரை - தோண்டுபவரை; வினையாலணையும் பெயர், இகழ்வார் - அவமதிப்பாரை; தலை - தலைமையான அற மாகும்.

8. பயன் இல் சொல் - பயனை உண்டாக்காத சொற்களை, பாராட்டுவானை - (பல முறையும்) சொல்லுவோனை, மகன் எனல்-மனிதன் என்று சொல்லாதே, மக்கள் பதடி எனல் - மனிதர் களுக்குள்ளே பதர் என்று சொல்லக்கடவாய், மகன் எனல், அல்லீற்று வியங்கோள் எதிர்மறை, பதடி எனல், அல்லீற்று வியங் கோள் உடன்பாடு.

9. தோன்றுக, வியங்கோள் வினைமுற்று. தோன்றாமை, எதிர்மறைத் தொழிற் பெயர்.

---

2. முதுமொழிக்காஞ்சி

சிறந்த பத்து

1. ஆர்கலி - நிறைந்த ஓசையையுடையது; கடல்; வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, சிறந்தன்று - சிறந்தது; உடன்பாட்டு இறந்த கால வினைமுற்று; இதில் அன் சாரியை.

2. காதல் - விருப்பம், கண்ணஞ்சசப்படுதல் - பிறர் அஞ்சி நடக்கத்தக்க நன்கு மதிப்பு. (ஒருவன் தான் பெற்றிருக்கும் மதிப்பினாலே பிறர் அஞ்சி நடத்தல்).

3. மேதை - அறிவு, கற்றது - கற்ற நூல்களின் பொருள்.

4. வண்மை - செல்வம் (அல்லது) ஈகை.

5. மெய் - உடல்; மங்கல வழக்கு.

6. நலன் - அழகு, நாண் - நாணம்; அடாத காரியங்களைச் செய்யக் கூசுதல், நாணு, உகரம் சாரியை.

7. குலன் - குலம்; கடைப்போலி, கற்பு - கல்வி; தொழிற்பெயர்.

8. வழிபடுதல் - வணங்கி நடத்தல்.

9. செற்றார் - கோபித்தவர்; பகைவர் (செற்றம்-கோபம்), செறுத்தல் - தண்டித்தல், தற்செய்கை - தன்னைப் பெருகச் செய்தல்; அதாவது தன்னைப் பகைவரினும் பலமுடையவனாகச் செய்துகொள்ளுதல்.

10. முன் பெருகலின் - செல்வம் முற்காலத்துப் பெருகிப் பின் அழிதலைக் காட்டிலும், சிறுகாமை - (உள்ள அளவில்) குறையாமை.

அறிவுப் பத்து

1. பேர் இல் பிறந்தமை - பெருங்குடியிற் பிறந்ததை, ஈரம் - அன்பு.

3. சோரா - தளராத; ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம்.

4. காட்சி - அறிவு; காண், பகுதி; சி, தொழிற்பெயர் விகுதி.

5. எற்றம் - உய்த்தல்; ஒரு காரியத்தை ஆராய்ந்து முடித்தல், எதிர் கோள் - முற்கொண்டு பாதுகாக்கும் காப்பு.

6. சிறு இல் - சிறுமையுடைய குடி, பெருமிதம் - செருக்கு.

7. குத்திரம் - வஞ்சகம்.

8. சொற்சோர்வு -சொல்ல வேண்டுவதை மறதியால் சொல்லாது விடுதல்.

10. சீர் - புகழ், ஆண்மை - ஆடவர் தன்மை ; வீரம்.

3. திரிகடுகம்

1. தாளாளன் - முயற்சியுடையவன், வேளாளன் - உபகாரத்தை யுடையவன், விருந்து - புதுமை; இங்குப் புதியரைக் குறித்தலால் பண்பாகு பெயர், கோளாளன் - (பொருளை நுட்பமாகக்) கொள்ளவல்லவன், கேள் - சுற்றம்.

2. தருக்கல் - செருக்கடைதல், கொன்னே - வீணே, வெகுளி - கோபம், முன்னிய - நினைத்த, வெஃகும் - விரும்பும்.

3. நிறை நெஞ்சு - (புலன்கள்மேற் போகாது) நிறுத்தப்படும் நெஞ்சு, நல்குரவு - வறுமை, அல்பொருள் - பாவம், மறவனை - கொலைத்தொழில் செய்வோனுக்கு; வேற்றுமை மயக்கம், திறவதில் தீர்ந்த - வேறுபாட்டில் நீங்கி ஒத்த.

4. கயவர் - கீழ்மக்கள், கையிகந்து - கைவிட்டு, நயவரை - அன்புடையவரை, நட்டு - நேசித்துக்கொண்டு, தெள்ளி - ஆராய்ந்து, வடு ஆன - பழிப்பான காரியங்கள், குடிமாசு இலார் - குடிப் பிறப்பிலே குற்றமில்லாதவர்.

5. குப்பை - குவியல், கொழுமுளை - செழித்த ஆரம்பம், வழங்கின் - சொன்னால், செப்பம் - நடுவு நிலைமை, மழை அனையர் - மழைபோல் உபகாரம் செய்வார், தூரா ஆறு - தூராமைக்குச் சாதனங்களாம்.

4. நான்மணிக்கடிகை

1. மண்ணி - கழுவி, அறிப - அறிவார்கள், மா - குதிரை, பண் - சேணம், மாசு - குற்றம், சுட்டு - தீயிற் சுட்டு, கேளிர் - உறவினர், ஆய - உண்டாகிய.

2. அகில்-அகிற்கட்டை, ஒள்-ஒளி, பல் விலைய - மிக்க விலையுள்ள, நல் ஆள்-நற்குண நற்செய்கைகளை ஆளுதலை யுடையவன்.

3. மொய் சிதைக்கும் - வலிமையை அழிக்கும், மேனி - உடலினது நிறம், கலம் - பாத்திரம், குலம் சிதைக்கும் - குலத்தின் பெருமையை அழிக்கும்.

4. மலர் உண்மை - மலர்களினது இருப்பை, நாற்றம் - நறுமணம், மாற்றம்-சொல், வினை நலம் - செய்கையினது நன்மை, அகம் பொதிந்த - தனக்குள் மறைத்துவைத்த, தின்மை - தீமை, முன்னம் - கருத்து, முன் - முன்னே.

5. கண்ணில் - கண்ணைப்போல்; இல், ஐந்தனுருபு; ஒப்புப் பொருளது, உறுப்பு - அவயவம், நுண்ணிய வாய - நுட்பமுள்ளதாகிய, கொண்டான் - கணவன், துன்னிய - நெருங்கிய, ஈன்ருள் - பெற்றவள்; தாய்.

5. சாணக்கிய நீதி

1. கடைத்தலை, இலக்கணப்போலி, நல்குரவு - வறுமை, இடு காடு - பிணம் இடும் காடு; சுடுகாடு; இங்கே சாவைக் குறித்தது, விழா - உற்சவம்; திருமணமு மாகும், பரிவு - அன்பு.

2. பேண - காக்க; வினையெச்சம், உய்யும்படி - பிழைக்கும்படி, வையகம் - பூமி.

3. ஓதும் தொழில் - படிக்குஞ் செயல், ஈதல் - கொடுத்தல், நண்ணும் - பொருந்திய, இருக்கை - இருத்தல்; கைவிகுதி பெற்ற தொழிற்பெயர், நன்று, குறிப்பு வினைமுற்று.

4. செவ்வன் உற-செம்மைபொருந்த, இயம்பற்க - சொல்லாதிருக்கக் கடவாயாக; எதிர்மறை வியங்கோள், பழுது - குற்றம்.

5. நலம் - நன்மை, என்னுது - என்று நினைக்காமல்; வினையெச்சம், செய்க, வியங்கோள் வினைமுற்று.

6. பழமொழி

1. புலம் - அறிவு, தெரிதல் - ஆராய்ந்தறிதல், புனல் - நீர் வளம், ஊர - ஊரை யுடையவனே; விளி, பொதுமக்கள் - சிறப்பில்லாத மக்கள்; மக்களுள் கல்வி அறியுவுடையாரையே அறிவுடையார் சிறப்பாக மதிப்பர், பாம்பின - பாம்பினுடைய; அ, ஆறும் வேற்றுமைப் பன்மை யுருபு.

2. புல் உரை - அற்பமான வார்த்தைகள், காய்ந்து - கோபித்து, எதிர் - எதிர்வார்த்தை, தீம் தேன் - இனிய தேன் கூட்டை, முசு - மந்திகள், குத்தின் - முட்டினல்.

3. பிழைப்பானை - குற்றம் செய்தவனை; வினையாலணையும் பெயர், ஆற்றவும் - பொறுக்கவும், பிழைப்ப - குற்றம் செய்தால்,

இன் இசை, பண்புத் தொகை, யாழின் - வீணையைப் போல; இன், ஐந்தனுருபு ; ஒப்புப் பொருளது, ஆர்க்கும் - ஒலிக்கின்ற.

4. கன்றி - கோபித்து, முதிர்ந்த - வரம்பு கடந்த செயல் களை ; வினையாலணையும் பெயர், கழிய - மிக, படும் - உண்டாகும்.

5. எய்ப்பு உழி - (நமக்கு) தளர்வுவந்த காலத்து, வைப்பு - நிதி ; தொழிலாகு பெயர், உற்ற உழி - (நமக்கு ஓர் இடர்) வந்த பொழுது, பைந்தொடீ - பசுமையான வளையல்களை யணிந்த பெண்ணே ; பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, அச்சு - அச்சம், திரியின் - மாறி நடந்தால், மச்சு - (ஒருவனை ஒருவன்) மச்சின்மீது ஏற்றிவைத்து, ஏணி களைவு - ஏணியை எடுத்து விடும் செய்கையை ஒப்பாகும்.

7. நாலடியார்

1. உறக்கும் துணையது - சுருங்கிய அளவினது, ஈண்டி - முளைத்து வளர்ந்து, இறப்ப - மிகுதியாக, பயந்தால் ஆங்கு - தந் தாற் போல, தக்கார் - தகுதியுடையவர், சிறிது ஆ(க) - சிறியதா கும்படி, போர்த்துவிடும் - மூடிவிடும்.

2. அறிவது - அறிதற்குரிய நூல்களை, அஞ்சுவது - அஞ்ச வேண்டிய தீச்செயல்களை, உறுவது, செய்யத் தக்க அறங்களை, பெறுவதனுல் - பெற்ற பொருள்களால், எஞ்ஞான்றும் - எந் நாளும் ; அறிவது முதலியன சாதியொருமை.

3. நட்டக்கால் - சினேகித்தால், தேற்று-தெளியாத, ஆற் றும் துணையும் - பொறுத்துக் கொள்ளும் அளவும், பொறுக்க - பொறுக்கக் கடவன்; வியங்கோள் வினைமுற்று, தூற்றுதே-பலரறி யச் சொல்லாமல், தூரவிடல் - நீங்கிவிடுக, விடல், அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று.

4. தக்கோர் - மேலோர், கேடு - கெடுதி ; முதல் நிலை திரிந்த தொழிற்பெயர். எண்ணற்க-நினையாதிருப்பாயாக; எதிர் மறை வியங்கோள் வினைமுற்று, ஊன், னகரம் சாரியை, உண்ணுர் கைத்து - உண்ணத் தகாதவர் கைப்பொருளை, இடை மிடைந்த- இடையிற் கலப்புற்ற.

5. வடு - குற்றம், மன்னிய - நிலைபெற்ற, மூன்று - அறம், பொருள், இன்பம், நடுவணது - நடுவிலுள்ளது ; பொருள், இரு தலையும், அறமும், இன்பமும், எய்தும் - அடைவான் ; செய்யும்

என்னும் வாய்பாட்டு வினைமுற்று, உலை - (கொல்லனது) உலை, அடுவது - காய்ச்சுவதனாலுண்டாகும் துன்பம்.

6. கனைகடல் - ஒலிக்கின்ற கடல்; வினைத்தொகை. சேர்ப்ப-கடற்கரையையுடைய பாண்டியனே; ஆடூஉ முன்னிலை, கேண்மை-நட்பு, நுனியில் - நுனியிலிருந்து, தின்றால் அற்று - தின்றாற் போலும், தூரில் - வேரிலிருந்து, தகைதது - தன்மையுடையது. அரோ, அசை, ஈரம் - அன்பு, தொடர்பு - நட்பு.

7. ஒருபுடை - ஒருபக்கத்தை, பாம்பு - இராகு அல்லது கேது என்னும் கோள் (கிரகம்), ஒருபுடை-மற்றொரு பக்கத்தால், அம் கண் மாஞாலம் - அழகிய இடத்தையுடைய பெரிய பூமியை, செல்லாமை - (தமது கடமையைச் செய்ய) இயலாமை; வறுமை, செவ்வன் - நன்றாக, நேர் நிற்பினும் - முன் நின்றாலும், ஒப்புரவிற்கு - உபகாரம் செய்வதற்கு, ஒல்கார் - தளரார்

8. விசும்பு - ஆகாயம், அகல் நிலா - பரவுகின்ற நிலவொளியை ; வினைத்தொகை, பாரிக்கும் - பரப்புகின்ற, திங்கள் - சந்திரன், மறு - களங்கம், ஆற்றும் - பொறுத்திருக்கும், தெருமந்து - உள்ளங் கலங்கி.

9. அங்கணநீர் - சலதாரை நீர், உரவு நீர் - மிக்கநீர்; ஆறு, கடல் முதலியன, தீர்த்தம் ஆம் - பரிசுத்தமான நீராய்விடும், ஒரும் - உணர்கின்ற ; தெரிகின்ற, குலம் மாட்சி - குலத்தின் பெருமை, குன்று போல் - மலைபோல் (எல்லோருக்குந் தெரியும்படி), சார்ந்து - சேர்ந்து.

10. சிதலை - செல் (கறையான்), மதலையாய் - தாங்குவதாகி, வீழ் - விழுது, குதலைமை - அறியாமைக் குற்றம், கெடும்-தோன்றாதாகும்.

III. தொடர்நிலைச்செய்யுள்

1. பாரத வெண்பா.

1. போந்து - சென்று ; 'புகுந்து' என்பதன் மரூஉ, பார் வீரர் - பூமியையாளுகின்ற வீரர்களே ; கௌரவர்களே, பரிசயம் - பழக்கம், ஓர்வீர் — உணர்வீர், அமர்ந்து - விரும்பி ; சேர்ந்து யோசித்து.

2. மேதினி - உலகம், கொற்றம் - வெற்றி, தாமரையாள் கோனே - தாமரை மலரில் வீற்றிருப்பவளாகிய இலக்குமியின் கணவனே, அவரை - துரியோதனாதியரை.

3. பரி - குதிரை, நால் ஒன்று மூன்று - நாலோடு சேர்ந்த மூன்று ; ஏழு, புவனம் - உலகம், புடை - பக்கம், இகலும் - போர் செய்வான், அதிரதர் - முழுத்தேரினர் ; துரோணர் முதலானோர்.

4. ஆசாரியன் - துரோணாசாரியார், வெண்தலையில் ஊண் உகந்த செல்வன் - வெண்மையாகிய (பிரமனது) தலையோட்டில் பிச்சை எடுக்கும் உணவை விரும்பிய செல்வன் ; சிவன், செல்வர்க்கும், உம், உயர்வு சிறப்பு.

5. சாதாரணம் செய்யும் - எளிதாக்குவான், மீதோடி - பகைவர்மேல் விரைந்து சென்று.

6. உய்ய - பிழைக்க, செரு - போர், சிதைக்க வல்லான் - (கன்னனை) அழிக்க வல்லவன்; கவச குண்டலங்கள் கன்னனுடன் பிறந்தவை என்பர்.

7. அரவு உயர்த்த கோமான் - துரியோதனன், தனித்துணைவன் - ஒப்பற்ற நண்பன்; கன்னன், இளையான் - இளைக்கமாட்டான், அபிமன் - அருச்சுனனுக்குச் சுபத்திரையினிடமாகப் பிறந்தவன், மாறு - பகை ; எதிர்.

8. மூதாதை - பீஷ்மர், முனிந்து - கோபித்து, வேத அதிபன் - வேதங்களுக்குத் தலைவன்; கண்ணன், யார்தானும் - எவரேனும், உளரோ, ஓகாரம் எதிர்மறைப் பொருளது, விளம்பு - சொல்.

9. அதுவந்தவா காண்கும் என மாற்றுக, ஆது, சக்கரம். வந்தவா - வந்தவாறு ; று, தொகுத்தல் விகாரம் ; வரும் விதத்தை என்பது பொருள், காண்கும் - காண்போம் ; தன்மைப் பன்மை வினை முற்று, மீதூர்ந்து - மேலிட்டுக் கொண்டு, உந்தை - உன் தலைவன் ; பீஷ்மன் ; மரூஉ, இருந்தேமுக்கு - இருந்த எமக்கு ; வினையாலணையும் பெயர்.

11. பொருகை - போர் செய்தல்; தொழிற் பெயர், உன்னைக்காண், காண், முன்னிலையசை, 'உன்னைத் தூதுவனாக' என்று கூட்டுக.

12. மன் அவை - அரச சபை, மண், பண்பாகு பெயர், பட்ட - பட்டவற்றை ; வினையாலணையும் பெயர். மாதேவி - திரௌபதி. குருக்கள் ஏறு அன்னாய் - குருவமிசத்தில் பிறந்த ஆண் சிங்கத்தைப் போன்றவனே, குணம் - நன்மை, சொல்லாய், உடன்பாட்டு ஏவல் ஒருமை வினைமுற்று.

14. ஆற்றுவரேல் - (பொருதற்கு) வல்லமையுடையராயின், கொள்வதுவும் - நாட்டை அடைவதும், வேந்தர்க்குச் சொல்லியது - அரசர்க்குத் தருமமாகச் சொல்லப்பட்டது ஆகும்.

15. உற்றார் - உறவினர், பேறு - பாக்கியம், வெற்பு - மலை, பனி மருவும்-குளிர்ச்சி பொருந்திய, பூந்தொங்கல் - பூமாலையைத் தரித்த, 'தனிமரம் தோப்பாகாது' என்பது ஒரு பழமொழி.

16. வஞ்சினம் - சபதம், அஞ்ஞான்று - அந்நாளில், பரிபவம் - இழிவு, ஆழியாய் - ஆக்கினை சக்கரத்தை யுடையவனே, ஆய் - ஆராய்ந்துபார்.

17. மானம் - அபிமானம்; தன்மதிப்பு, தம்பிமார் - துரியோதனனுதியர்; மார், பலர் பால் விகுதி, தீமானம் - அவமானம், உகத்தல் - விரும்பி நடக்க; அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று, செரு - போர்.

18. கார் - மேகம், கரத்தானே - கண்ணனே, பாம்பு உயர்த்தோன்-துரியோதனன், ஊர் - ஐந்து ஊர்கள், வேண்டல் - வேண்டுக; அல் ஈற்று வியங்கோள் வினைமுற்று, போதாய் - வருவாய்.

19. அன்னவன் - துரியோதனன், ஐந்து இல்லும் மறுத்தானேல் - (நாட்டையும் ஐந்து ஊரையும் மறுத்தலேயன்றி) ஐந்து வீடுகளையும் கொடுக்க மறுத்தானுகில்; 'அன்னவனும்' என்பதிலுள்ள உம்மையை 'இல்'லுடன் கூட்டுக, பொருபடை - பொருகின்ற சக்கராயுதம்; வினைத் தொகை.

20. பரமன் - சிவபெருமான், பாசுபதம் - பசுபதியின் அத்திரம் (பசுபதி - சிவன்), தனு - வில், குருபதிக்கு - குருபதியினிடத்தில்; வேற்றுமை மயக்கம்.

21. அமர் - போர், தேர் ஆழி - தேர்ச் சக்கரம், 'ஆர்த்து' என்பதை 'ஆர்க்க' எனத் திரிக்க, வடிக்கயிறு - கடிவாளம், மா - குதிரை, மால் - கண்ணன், கூடலார் - பகைவர், கூற்று - எமன், பகுவாய் - பிளவுபட்ட வாய்; வினைத்தொகை. பாடி - படைவீடு, உய்க்கும்படி - செலுத்துந் தரமாகும், கண்ணன் சாரதியாவானேல், அதுவே பகைவரை யழித்தற்குத் தக்கதாகும் என்பது பொருள்.

22. ஊழி முதற்காலம் - யுகம் முடிவிற்கு முன்னதாகிய காலம், உறுத்து - உக்கிரங்கொண்டு, வாழும் - வினை - (தாங்

கள்) வாழுவதகற்கான செயல்கள், ஆடு அமர் - பகைவரைக் கொல்லுதலையுடைய போர்; ஆடு, முதல் நிலை திரிந்த தொழிற் பெயர், வீழ்த்து - வீழ்த்தி, செங்குருதி முன் - செந்நிறமான இரத்தத்தில், செங்குறுதி, பண்புத்தொகை; முன், ஏழனுருபு.

23. இந்திரன் சேய் - அருச்சுனன், இரட்டையர்கள் - நகுல சகாதேவர்கள், புகன்று - விரும்பி, வந்தித்து - வணங்கி, மற்று, அசை.

24. வேண்டி விடுப்ப - (நாம் அவர்களை) விரும்பித் தௌமியனைத் தூதுவிடவும், வெகுளியர் - கோபமுள்ளவர்; குறிப்பு வினையாலணையும் பெயர். நாடு ஆள - நாட்டைப்பெற்று ஆள, தாது - பூந்தாது, தாதாடுமார்பன் - நகுலன்.

25. மணிவண்ணன் - நீல நிறமுடையவன், ஏகும் - (தூதாகச்) செல்லும், கஞ்சமலர் வாரணம் - தாமரைப்பூவைக் கையிற் கொண்ட யானை; கஜேந்திரன், கஜேந்திரன் தாமரை மலரைக் கொய்யும்பொழுது முதலை அதனைக் கௌவிப் பிடிக்க, அஃது, 'ஆதிமூலமே' என்று கதறி யழைக்கத் திருமால்வந்து, முதலையைக்கொன்று, அதனைக் காத்தான் என்பது கதை.

26. தகவு இன்மை - தகுதியில்லாத சொற்கள், வேத அதிபன் என்றது சகதேவனை, விளம்பிக் காண் - சொல்வாய், மன்னர்க்கு - அரசனாகிய தருமபுத்திரனுக்கு, நேர் இளைய மன்னவன் - சகதேவன்.

27. மறம் மன்னர் - பாவகாரியஞ் செய்யும் துரியோதனாதியர், பாரதத்தால் - பாரதப் போரில்; வேற்றுமை மயக்கம்.

28. 'ஆயிரக்கால் தன்னில்' என்பதில் முற்றும்மை தொக்கியுளது, சத்தி - சக்தி, சத்தியவான் - உண்மையுடையவன், தலத்து - இவ்வுலகில், ஆக, வியங்கோள்.

29. மாதேவன் - கண்ணன், அறிய - (சகதேவன்) கண்டறியும் பொருட்டு, புக்கு - உட்புகுந்து; புகு, பகுதி; பகுதி ஒற்றிரட்டித்து இறந்த காலம் காட்டிற்று.

30. போதாய் - வருவாய், ஆருந்தலத்து - (கண்ணன்) பொருந்தியிருந்த இடத்தில்.

31. கதிரோன் - சூரியன், 'சுடர்' என்றது ஈண்டுச் சந்திரனை, சுருதி - வேதம்.

32. அருங்கானம் - (வசித்தற்கு) அரிய காடு, எய்தி -

அடைந்து, முரசு உயர்த்தோன்-முரசு வாத்தியம் எழுதிய கொடியை யுடையவன் ; தருமபுத்திரன், அரவு அணை - பாம்புப் படுக்கை, காசினி - பூமி, மண்ணளந்தாய் - நிலமனைத்தும் ஓரடியால் அளந்தவனே, நல்காய் - அருளாய்.

33. சந்து - சமாதானம், கூட-கிடைக்கும்படி.

34. பங்கயக் கண் - தாமரை போன்ற கண்; உவமைத் தொகை, பாஞ்சாலி - பாஞ்சாலிதேசத்துப் பெண்; திரௌபதி, கயல்கண் - கயல்மீன் பேன்ற கண்; உவமைத் தொகை, முத்தம் - முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகள்; உவமையாகு பெயர், திகழ்ந்து - விளங்கி, நிரை - வரிசை, துளைநிரைக்கை, (புல்லாங்குழலின்) துளைகளில் வரிசையாக வைக்கும் கையில், துளை, 'தொளை' என்பதன் மரூஉ.

35. சந்தாய் - சந்து செய்பவனாகி, நெறி நிற்பாய் - (இவர் சொல்லிய) முறைமையில் நிற்பாய், முற்றுவிப்பான் - முடிப்பவன் ; நிறைவேற்றுபவன், தானே - துரியோதனனே, தந்தை - திருதராட்டிரன், தடக்கை - பெருமை பொருந்திய கை ; உரிச் சொற்றொடர்.

36. ஒள் நுதலாய் - ஒளி பொருந்திய நெற்றியை யுடையவளே ; திரௌபதியே, ஒண்டிறலான் - துரியோதனன், திறல் - வலிமை, சடையாம் - சடையா யிருக்கிற, குழல் - கூந்தல், ஏந்தெழிலார் - மிகுந்த அழகை யுடையவர் ; துரியோதனாதியார்.

37. அண்டர் - தேவர், அச்சுதன் - அழிவில்லாதவன் ; கண்ணன், மண்ட - நெருங்க, ஈண்டன் - இப்பொழுது.

38. அத்திப்பதி - அத்தினாபுரி, அழல் புரையும் வாய்மை - தீயை யொத்த சொற்களையுடைய, அரசன் - துரியோதனன்.

39. சுற்றக் குழாம் - உறவினராகிய கூட்டத்தார், ஏது - (தாம் தூது போவதற்குரிய) காரணம். சேதித்து - எழுதி, மாண்நாகம் ஏந்தினான் - துரியோதனன், கோள் நாக அணை - வலிமையுள்ள பாம்புப் படுக்கை; நாக அணை; அகரம் தொகுத்தல் விகாரம், கோ - தலைவன் ; கண்ணன்.

2. கம்பராமாயணம்

1. புண்டரிகை - செந்தாமரையில் வாழும் இலக்குமி, புண்டரீகம் - தாமரை, இன்னல் - துன்பம், அண்டம் முதல் நாய

கன்-உலகத்திற்கு முதன்மையான தலைவன்; இராமன், ஆவி அனை யாள் - உயிர் போன்றவள்; சீதை, அம்ம, வியப்பிடைச் சொல்.

2. கேட்டி - கேட்பாயாக; முன்னிலை யொருமை ஏவல் வினைமுற்று, முனிந்தருளல் - கோபிக்கவேண்டாம்; எதிர்மறை வியங்கோள் வினைமுற்று, கேளார் - பகைவர், மேலவன் - இராவணன், வேறல் - வெல்லுதல்; வெல்+தல்; காண்டி - காண்பாயாக; முன்னிலை யொருமை ஏவல் வினைமுற்று.

3. நூறி - அழித்து; வினையெச்சம், நெறிந்தகுழல் - சீதை; குழல், ஆகுபெயர்; அண்மை விளி, நெடியோன் - நீண்டவன்; திரிவிக்கிரமன்; இராமன், எதிர் - எதிர்த்து; வினையெச்சம், தொடர்வார்கள், வினையாலணையும் பெயர், விளியாதேன் - அழி வில்லாத யான்; தன்மை யொருமை வினையாலணையும் பெயர்.

4. ஏகுதி - செல்வாய்; முன்னிலை யொருமை ஏவல் வினை முற்று, கொல், வின; அசையுமாகும், இடந்து - பேர்த்து, கைத்தலை - கையினிடம்; தலை, ஏழனுருபு, தடுப்பான் - தடுக்கும் பொருட்டு; பான் ஈற்று வினையெச்சம், கழல் - திருவடி; தானி யாகு பெயர், இது - இலங்கையைப் பேர்த்தெடுத்துச் செல்லும் தொழில், அன்னை, அண்மை விளி.

5. அருந்ததி - வசிட்டன் மனைவி; கற்பிற் சிறந்தவள்; உவமையாகு பெயராய்ச் சீதையைக் குறித்து நின்றது; விளி, அழகன் - இராமன், சிறைவைப்பு - சிறைச்சாலை, வீடு - விடுதலை, இருந்தனள் - இருக்கின்றாள்; காலவழுவமைதி.

6. இந்து நுதல் - சந்திரனைப்போன்ற நெற்றியை யுடையவளே; உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, இவண் - இவ்விடம், இகல் வீரன் - வலிய வீரனாகிய இராமன், அவிய - கெட, நந்தல் - கெடுதல்.

7. விதி - (நான் செய்த) நல்வினையால், வேறு - நன்மை (இராமனிடம் உன்னைக்கொண்டு சேர்த்தலாகிய நன்மை); முதல் நிலை திரிந்த தொழிற்பெயர், வஞ்சி - பூங்கொடி போல்பவளே; உவமையாகு பெயர், கடிது - விரைவாக.

8. ஆற்றல் - வலிமை, ஓர்கின்றது - (நான்) நினைப்பது, பேதைமை - அறியாமை.

9. வேலை - கடல், வெய்யவர் - கொடியவர்கள்; அரக்கர், கோலி - வளைத்துக்கொண்டு, சரம் - அம்பு, ஆல மன்னவர்க்கு

அல்லை எற்கு அல்லை - அரக்கரோடு போராடவும் முடியாமல், என்னைக் காப்பாற்றவும் முடியாமல், தனிமையோய், முன்னிலை யொருமைக் குறிப்பு வினைமுற்று.

10. ஆரியன் - இராமன், மாசு உ(ண்)ணும் - குற்றம் அடையும், பதம் - பக்குவமான சோறு, நாய்களின் - நாய்களைப்போல; இன், ஐந்தனுருபு; ஒப்புப் பொருளது, நீயும், உம், உயர்வு சிறப்பு.

11. பொன் பிறங்கல் - பொன்மலை ; திரிகூட பர்வதம், பொருந்தலர் - பகைவர்; அரக்கர், எற்புமால்வரை - எலும்புகளாலாகிய பெரிய மலை, இல்பிறப்பும் - உயர் குடிப்பிறப்பும், இழுக்கம் - குற்றம்; அம் விகுதி பெற்ற தொழிற்பெயர்.

12. அல்லல் - துன்பம், மாக்கள் - விலங்குகளையொத்த அரக்கர், எல்லை நீத்த - அளவு கடந்த, தூயவன் - பரிசுத்தன்; இராமன், வீசினேன் - (அந்த எண்ணத்தை) நீக்கிவிட்டேன்.

13. அது - (நீ என்னைக் கொண்டுபோக எண்ணிய) அச் செய்கை, வேதநாயகன் - இராமன், மீண்டனை - திரும்பி; முற்றெச்சம், பூவை - நாகணவாய்ப் பறவைபோலப் பேசும் சீதை; உவமையாகு பெயர், கோது இலான் - குற்ற மில்லாதவன் ; அனுமான்.

14. உலகுடை நாயகன் - இராமன், தேவி - சீதை, களித்து உவந்து - மிக்க மகிழ்ச்சி கொண்டு ; ஒரு பொருட் பன்மொழி, சங்கை - ஐயம், இடர் - துன்பம், நன்று நன்று, உவகைபற்றி வந்த அடுக்கு.

15. தெருளும் - தெளிவடையும், மருளும் மன்னன் - (சீதையைப்பற்றிக் கவலைகொண்டு) மயக்க மடைந்திருக்கும் இராமன், இறைஞ்சினன் - வணங்கினன்.

16. ஈண்டு - இவ்விடத்தில்; இலங்கையில், திங்கள் - மாதம், இருப்பல் - இருப்பேன்; தன்மை யொருமை வினைமுற்று.

17. ஆரம் - மாலை, தாரம் - மனைவி, ஈரம் - அன்பு, ‘ தன் ’ என்றது இராமனை, வேண்டு - விரும்பு.

18. ஏத்தும் - (எல்லாரும்) புகழ்ந்து கூறும், இளையவன் - இலக்குவன், மன் - இராமன், ஏன்று - ஏற்று, கோத்த - நேர்ந்த, சிறைவீடு - சிறையினின்றும் விடுதலை செய்தல்.

19. செய்தவம், வினைத்தொகை, தீர்ந்தது - முடிந்துவிடும்; காலவழுவமைதி, யாணர் - புதிதாக வருகின்ற, கடன் - இறுதிக் கடன், செய்கென்று, இதில், அகரம் தொகுத்தல் விகாரம்.

20. மாமியர் மூவர்-கோசலை, கைகேயி, சுமித்திரை, ஆண்டு-அவ்விடத்தில்; இலங்கையில், அறத்தின் நாயகன்-இராமன், பால், ஏழனுருபு, மறவேல், எதிர்மறை யொருமை ஏவல் வினைமுற்று.

21. வந்து - (மிதிலைக்கு) வந்து, கரம்பற்றிய-கைப்பிடித்த; திருமணம் செய்துகொண்ட, வைகல்வாய் - நாளில்; வாய், ஏழனுருபு, இப்பிறவிக்கு - இப்பிறவியில்; வேற்றுமை மயக்கம், தொடேன் - நினையேன், செம்மை + வரம் = செவ்வரம், சாத்துவாய் - சேர்ப்பாய்.

22. இருந்து - (மீட்கப்படாமல்) இருந்து, இனிமை + உயிர் = இன்னுயிர், 'தன்' என்றது இராமனை, தீவினை தீர் வரம் - குற்றமற்ற வரத்தை, தீர்வரம், வினைத்தொகை.

23. உலகம் - உலகத்தவர்; கோசல நாட்டார்; இடவாகு பெயர். அன்னை - கோசலை, அங்கு - நந்திக்கிராமத்தில், ஆற்றுஉறும் - அனுபவித்துவருகிற, அங்கு - அயோத்திக்கு, ஏகுவது - போவது, எய்தும் - வருவான்.

24. பொன்னே - இலக்குமி போன்றவளே, வில்லான்-இராமன், என்னே, வியப்பிடைச்சொல். பிடிப்பானோ, ஓகாரம் எதிர்மறை.

25. புளிக்கும் - வெறுக்கத்தக்க, கண்டகர் - முள்போன்ற கொடியவர்; அரக்கர்; (கண்டகம் - முள்), புண்ணீர் - இரத்தம், குடையும் தோறும் - அழுந்தி முழுகுந்தோறும், ஒளிக்கும் - (அரக்கருக்குப் பயந்து) ஒளிக்கின்றன.

26. கரம் பயில் - கையினால் அடிக்கப்படுகிற, முரசு இனம்-மத்தளங்கள், கறங்க - ஒலிக்க, கை தொடர் நரம்பு - கையினால் மீட்டி வாசிக்கும் யாழ், இமிழ் - ஒலிக்கின்ற, இராவணன் காண அரம்பையர் ஆடும் நடனசாலைகளிலெல்லாம் குரங்குகள் கூத்தாடும் என்க.

27. இருந்தை - கரி, தழல் - தீ, அனகன் - பாவமில்லாதவன்; இராமன், ஊதை - பெருங் காற்று, கனகம் - பொன்; இலங்கையாகிய கனகம் என்க, பொன்மலையாகிய மேருவின் ஒரு சிகரம் இலங்கையாயிற்று என்னும் கதை கவனிக்கத்தக்கது. இச்செய்யுள், முற்றுருவக அணி.

28. வைகுதல் - தங்கியிருத்தல், பின் - (நான் இராமனைப் பார்த்த) பிறகு, ஆண் தகை - ஆண்மைக் குணமுடைய இராமன்;

பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, ஆற்றுமோ - பொறுத்திருப்பானோ; ஒகாரம் வினாவாய் எதிர் மறைப் பொருளைத் தந்தது.

29. மத்துறு தயிர் என - மத்தினால் கடையப்படும் தயிர் போல; இது மனக் கலக்கத்திற்கு உவமை, தத்துறும் - தடுமாறும், தள்ளுறும் - தளர்ச்சி யடைதலால் உண்டாகும்; பிரிவினில் - பிரிவினால்.

30. தரிக்கும் - (உயிர்) வைத்துக்கொண்டிருப்பான், என்றியேல் - என்று நீ சொன்னால், மெய்நிலை - (இராமனுடைய) உடலின் தன்மை, உணர்ந்துழி - உணருமிடத்து, மிடைந்தது - பொருந்திய செயல், கை நிலை நெல்லி அம் கனியில் - உள்ளங் கையிலுள்ள நெல்லிப்பழத்தைப் போல.

31. இந்நகர் - இலங்கை, நடுவண் - நடுவில், நங்கை, பெண்பால் சிறப்புப் பெயர்; அண்மை விளி, கருளன் - கருடன், விண்டு - விஷ்ணு, கண்ணனை - கரியவனாகிய இராமனை, வெரிந் - பிடரி.

32. இளவல் - இளையவனாகிய இலக்குவன், அம்மலை - அழகிய மலை; உதயகிரி, வெங்கதிர் - சூரியன், இறுக்கும் - தங்கும், ஐயம் - (இராமன் வருவானோ வாரானோ என்னும்) சந்தேகம், சங்கை - (இராமன் வெல்லுவானோ வெல்லமாட்டானோ என்னும்) சந்தேகம்.

33. குராவரும் குழலி - குரவமலரின் நறுமணம் வீசும் கூந்தலையுடையவளே, விராவரும் - பொருந்திய, - பராவரும் - பரவி வருகிற, பழி - நிந்தனை, அவன் - இராமன், இவன் - இராவணனுவான், 'இராமன், உன்னைச் சிறை மீட்காவிடின் இராவணனுவான்; இராவணன் இராமனுவான் என்று கொள்க' என்றான் அனுமன்.

34. ஆசு - குற்றம், ஓகை, உவகை என்பதன் மரூஉ, உவகை - மகிழ்ச்சி, புந்தி - புத்தி, உயர்ந்தாள் - உடல்பூரித்து; முற்றெச்சம், தோகை - மயில் போன்ற சீதை; உவமையாகு பெயர்.

35. கிளிக்கு + யார் = கிளிக்கி யார்; யகரம் வர, குற்றியலுகரம் குற்றியலிகரமாயிற்று, ஈகேன் - இடுவேன், கைகயன் மாது - கைகேயி, அந்நாள் - அப்பொழுது, இதனால் இராமன் கைகேயினிடத்து மிக்க அன்புடையவன் என்பது வெளிப்படும்.

36. மலர்க்கை - மலர் போன்ற மெல்லிய கை; உவமைத் தொகை, அன்னது - அச்சூளாமணி, முன்னு - எண்ணி, அடல்-

வலிமை, வீங்கினன் - (உடல்) பூரித்தான், தூங்கு - தங்கியிருந்த, இரிந்தது - கெட்டோடியது.

37. முகில் - மேகம், கோளின் வேந்து - கோள்களுக்குத் தலைவன்; சூரியன், மெல்லியல், அன்மொழித் தொகை, சேந்தது - சிவந்தது. கூந்தல்மேலுள்ள சூளாமணி, மேகத்தின் மேலுள்ள சூரியனை யொத்தது, காந்துகின்றது - ஒளி வீசுகின்றது, மாருதி - அனுமன்.

38. சூடை இன் மணி - உச்சியிற் சூடும் அழகிய மணி; சூடாமணி, தொல் + நாள் = தொன்னாள் - முன்னாளில் (காட்டுக்கு வந்த நாளில்), நாடி - தேடி, நல்கிய - உதவிய, நம்பா - விருப்பமுள்ளவனே, கோடி - கொள்வாய்; கொள் + தி.

39. தூசு - ஆடை, பழுது உருவகை - தீங்கு நேராதபடி, பந்தனை செய்தனன் - முடிந்துகொண்டான், வந்தித்து - துதித்து, மும்மை - மூன்று தடவை, எழுது பாவை - சித்திரத்தில் எழுதிய பிரதிமை போன்ற சீதை; பாவை, உவமையாகு பெயர்.

---

3. திருவிளையாடற் புராணம்

1. உன்ன அரும் - நினைப்பதற்கரிய, மன்னு - நலைபெற்ற, வழுதி - பாண்டியன், மீமிசை-மேல்; ஒருபொருட் பன்மொழி, விடுதலம் - நிலாமுற்றம்.

2. தகவு - தகுதி, மாதேவி-பாண்டியன் மனைவி, மாருதம் - காற்று. வசம் - வழி, பாண்டியன், 'நறுமணம் பூவினால் உண்டாகியதோ, மாதேவியின் கூந்தலுக்கு இயைந்ததோ' என்று ஐயுற்றான்.

3. தேர்ந்து - ஆராய்ந்து, கவிதை - செய்யுள், ஈகுவல் - தருவேன்; தன்மை யொருமை வினைமுற்று.

4. மாயிரு ஞாலம் - பெரிய உலகத்தார்; ஞாலம், இடவாகு பெயர், மாசு இல் ஆசிரியர் - குற்றமில்லாத ஆசிரியர்; சங்கப் புலவர், சீயம் - சிங்கம், தளரம் - முத்து, தூக்கினன் - தொங்க விட்டான்.

5. பீடு - பெருமை, பிஞ்ஞகன் - சிவபெருமான், சமாதி - சங்கற்பம் (ஒரே நினைவு), பார்த்தவன் - அரசன்; பாண்டியன், ஏறி - சென்று.

6. இயைந்த - பொருந்திய கருத்து, ஆவி நன்கு உருது இருப்ப - மனமகிழ்ச்சியடை யாதிருக்க, நாவலர்-புலவர், நானிலம் - நான்கு பகுதிகளையடைய பூமி; முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், தூங்கியது - தொங்கியது.

7. நீங்ககிலாமல் - நீங்காமல் வாழும்; தினந்தோறும் பூசை செய்யயும், வாய்மை - உண்மை, விழுப்பம் - சிறப்பு, தாங்க அரும் - அளவற்ற.

8. தந்தை - சிவமுனி; தருமியின் தந்தை, வான் உலகத்து ஏக, மங்கல வழக்கு, நல்குரவு - வறுமை, கந்தர் - முருகன், மன்றல் - திருமணம்.

9. இனைய - இத்தகைய மொழிகளை.

10. வழுத்திய - சொல்லிய; துதித்த, மறையோன்- தருமி, ஒழித்திடுவான் - நீக்கும்பொருட்டு; வான் ஈற்று வினையெச்சம், உரகம் - பாம்பு, குழை - காதணி, வேட்டு - விரும்பி.

11. பொரு அரும் - ஒப்பில்லாத, கொடுபோய் - கொண்டு போய், வாய்மை உரியவர்-சங்கப்புவவர், நீவி-கிழி, கைக்கொள்- கைக் கொள்வாயாக; ஏவல் வினை, சாற்றிய - சொன்ன, மாற்றம்- சொல், மண் - உலகத்தார்; இடவாகு பெயர்.

12. துன்புறல் - வருத்தமடையாதே; எதிர்மறை வியங்கோள் வினைமுற்று, நீடு அவை - பெரிய சபை, நன்பு - நன்மை, நனி - மிகவும்; உரிச்சொல்.

13. செல்வல் - செல்வேன்; தன்மை யொருமை வினைமுற்று, அறிஞர் - புலவர், வேதியன் - தருமி, பகர-சொல்ல.

14. நவை - குற்றம், நயந்த - விரும்பிய, மெல்லிய சொற்கள் - இனிய, பொருளுக்கியைந்த சொற்கள், கனகம் - பொன், ஆல், அசை.

15. பரிவு - துன்பம், பாவலர் - புலவர், அரவம் - முழக்கம், கோயில் - அரண்மனை.

16. தனம்-செல்வம், கவர்ந்திடுவான் - கொள்ளும் பொருட்டு, நணுக - சேர.

17. பொற்பு - அழகு, அவனை - தருமியை, கீரன் - நக்கீரன்; சங்கப்புலவர் தலைவன், இதை-இக்கவியை, முனிந்தான் - கோபித்தான்.

18. ஒல்லை - விரைவாக, ஆழி-கடல், சூழ் இசை - இசை சூழ்.

19. கற்றுச் சொல்வோர் - கற்றுச் சொல்லிகள் ; மாணவர், இகல் - மாறுபாடு, தேசு - ஒளி, திருமுடிச் சாத்து-தலைப்பாகை, மலர்க்கரம், உவமைத்தொகை, ஆழி-மோதிரம், தேத்து-இடத்து.

20. நான்முகன் - பிரமன், மால் - திருமால், அழல் - நெருப்பு, பிழம்பு - திரட்சி, சிவன் அழற்பிழம்பாய் நின்றது திருவண்ணுமலையில், விண் - ஆகாயம், அண்டம் - உலகம், தமிழ்ச் சங்கம்-தமிழ் ஆராயும் புலவர் கூட்டம், மதுரையில் 1800 ஆண்டுகளுக்கு முன் மூன்ரும் சங்கமாகிய கடைச்சங்கம் இருந்தது.

21. வாளா - சும்மா; காரணமின்றி, யாவன் ஏடா-யாரடா; ஒருமை, சொன்மின் - சொல்லுங்கள் ; தொகுதி நோக்கிக் கூறப் பட்டமையின், பன்மை, முத்தமிழ், இயல், இசை, நாடகம்.

22. பங்கம் - குற்றம், பரமன் - மேலோன்; சிவபெருமான், விளிந்து - நாணமடைந்து, துங்கம் - உயர்வு.

23. இருங் கவிவாணர் - சங்கப் புலவர், நவில் + தி = நவிறி- சொல்லுவாயாக; முன்னிலை யொருமை ஏவல் வினைமுற்று.

24. கற்றை - திரட்சி, குழல் - கூந்தல், ஒக்குமே - பொருந்துமோ, செற்றி - நெருங்கி, அல் + தரு = அற்றரும் - இருளைச் செய்கின்ற.

25. வெய்ய - கொடியோய், கோலம் - அழகு, கவுரி - கௌரி; பார்வதி.

26. கண்ட - படைத்த, ஓதிமம் - அன்ன வடிவெடுத்த பிரமன், விரை - நறுமணம், சடிலம் - சடை, வெருட்டல் - பயமுறுத்தல், மண்டலம் - உலகத்தார்.

27. புரம்-திரிபுரம், கடந்த - வென்ற, சேவகன்-வீரன் ; சிவ பெருமான், காய் தழல், வினைத்தொகை, கனன்று-கோபித்து, ஏ, விரைவுக் குறிப்பு.

28. நினக்கு அஞ்சுவல் - உனக்குப் பயப்படுவேன, திகைத்து - மயக்கமடைந்து, ஒக்குமே - பொருந்துமோ.

29. மடம் - பேதைமை, நாண் - நாணம், சிற்புட்பகேசி - ஞானப்பூங்கோதை; காளத்தியில் உள்ள அம்பிகையின் திருநாமம், மறைகள் நான்கு - இருக்கு, எசுர், சாமம், அதர்வணம்.

30. கேசி - கூந்தலையுடையவள், அன்னம் ஆர் வாவி - அன்னம் நிறைந்துள்ள குளம்.

31. காமன் - மன்மதன், கண்ணன் - நெற்றிக் கண்ணையுடையவன்; சிவன், காலன்-எமன், காலன்-சிவன், பாமறை பாட்டுக்களாயுள்ள வேதம், பொன் தாமரைத்தடம்-பொற்றாமரைக் குளம்.

32. பாந்தள் - பாம்பு, பாவலன் - சிவன், சொக்கன் - அழகன்; சுந்தரேசன், ஏந்து - மிகுந்த, ஏத்தினர் - துதித்தனர், குணலை - ஒருவகைக் கூத்து, முனிவன் - தருமி.

33. போந்து - வந்து; 'புகுந்து' என்பதன் மரூஉ, திரு - இலக்குமி, பரவ - துதிக்க, ஊழி - பல காலம், பழுதறு - குற்றமில்லாத.

---

4. பாகவத புராணம்

1. பருகும் - குடிக்கும் (போக்கும்), சூடு - உச்சிக் கொண்டை, அணை - படுக்கை, துயில் - தூக்கம், கட்செவி-பாம்பு, மாயன் - கண்ணன்.

2. மிசைந்து - உண்டு, இரைக்கும் - ஒலிக்கின்ற, துழாய் - துளசி, முகில் - மேகம்போலும் கருநிறமுடைய கண்ணன், மறையோன் - குசேலன், மனைக்கிழத்தி - மனைவி, பனித்த - நீர் ததும்பிய, பவளவாய் - பவளம்போன்ற வாய்; உவமைத் தொகை.

3. பிறங்கிய - விளங்கிய, பூண் - ஆபரணம், திருமகள் கொழுநன் - இலக்குமியின் கணவனான திருமால் (கண்ணன்), மின் - மின்னலைப்போல், விழுமணி - சிறந்த இரத்தினம், மன் - நிலைபெற்ற, வாரினை வருக-வாரிக்கொண்டு வருவாய், வகுத்தாள் - சொன்னாள்.

4. வடித்த - ஆராய்ந்தெடுத்த, நான்மறை-நான்கு வேதங்கள்; இருக்கு, எசுர், சாமம், அதர்வணம், என் - என்ன, குறுநுதல்-சிறிய நெற்றியையுடைய சுசீலை; பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, அறவர் குசேலர், பாசவல் - செவ்விய அவல், துகில் - துணி, பொதிந்து - மூடிக்கட்டி, நடத்தி - செல்லுவாய், நசை - விருப்பம்.

5. காண்டற்கு - பார்ப்பதற்கு, அரக்கு இதழ் - அரக்கைப் போன்ற உதடு; உவமைத் தொகை, கோயில் மேயினன் - அரண்மனையை யடைந்தான், கோயில், கோவில் என்பதன் இலக்கணப் போலி.

6. நிவந்து - உயர்ந்து, பொன் கடை - அழகிய தலைவாசல், இறந்து - கடந்து, கருமுகில் - கண்ணன்; பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை, அரிவை - பெண்(கள்).

7. காதலன் - அன்புடையவன் ; குசேலன், பைப்பைய - மெல்லமெல்ல; 'பையப்பைய' என்பதன் விகாரம், ஒல்கினன் - தளர்ந்தவனாய்; முற்றெச்சம். முருகு - வாசனை, செங்க(ண்)ணன் - கண்ணன், சேக்கை - படுக்கை, இவண் - இவ்விடம், தழீஇயினன் - தழுவினான்.

8. மாமாது - உருக்குமணி, கவரி - சாமரை, தளிர்க்கை - தளிர்போன்ற கை; உவமைத்தொகை, இரட்ட - வீச, இளைத்தி - மெலிந்திருக்கிறாய்; முன்னிலை யொருமை வினைமுற்று. அளி - வண்டு, செய்ய - சிவந்த, தார் - மாலை.

9. குரவன் - ஆசிரியன் ; சாந்தீபினி முனிவர். புயல் - மழை, அசைந்து - வருந்தி, பொதும்பர் - சோலை, அயர்த்தி - மறந்தாய், அளவளாய் - மனங்கலந்து, உசாவினன் - கேட்டான்.

10. முறுவல் - பல், என் - என்ன, கொடுவந்தனை - கொண்டுவந்தாய். அரக்கு - செந்நிறம், முதலி - முதன்மையானவன்.

11. விழைந்து - விரும்பி, போற்றலன் - போற்றினானில்லை, திரு - செல்வம், செல்க + என ; அகரம் தொகுத்தல் விகாரம், அளித்தும் - கொடுப்போம்; தனித்தன்மைப் பன்மை வினைமுற்று, விரை - வாசனை, துளவினோன் - கண்ணன்.

12. கருஞ்செல்வம் - பெருஞ் செல்வம், மாந்தல் - உண்ணுதிருப்பாயாக; எதிர்மறை வியங்கோள் வினைமுற்று, பூவை-உருக்குமணி; உவமையாகு பெயர்.

13. செந்தாமரையவள்-இலக்குமியாகிய உருக்குமணி, நகைமுகிழ்த்து - சிரித்து, வீறு சால் - பெருமை மிகுந்த.

14. அம்ம - வியப்பிடைச் சொல், உய்ந்தனம் - பிழைத்தோம், மம்மர் - மயக்கம், கூர்தர - மிக, மறக்குவன் - மறப்பான், மும்மை-மூன்று; பண்பாகு பெயர், முளரி-தாமரை; காரண. இடுகுறிப் பெயர், செம்மல்-கண்ணன், நல்கலன் - கொடுத்தானில்லை.

15. கனல - ஒலிக்க, தேறல் - தேன், நாள் மலர் - அன்றலர்ந்த மலர், தொழுதி - தொகுதி, பல்கு - மிகுந்த, படர்ந்தான் - சென்றான்.

16. முகடு - உச்சி, கீண்டு - கிழித்து, அளகை காவலன் - அளகாபுரிக்கு அரசனாகிய குபேரன், நோக்கினன் மயர்ந்தான் - பார்த்து மயங்கினான்.

17. வில் - ஒளி, கவின் - அழகு, நுதல் - நெற்றி, தெரிவையர் - தோழிப் பெண்கள், செறிய - நெருங்க, இலகு - விளங்குகின்ற, பூண் - ஆபரணம், அயிர்த்தான் - சந்தேகித்தான்.

18. பதி - வீடு, நிதி - செல்வம், பிணா - பெண்மான், போதரும் - வருகிற, வதன மதி, உருவகம்.

5. தேம்பாவணி

1. உதிர் செயுங் கனிபோல் - (பதம் அழிந்து) உதிர்ந்த பழத்தைப்போல, உடற்கு - எலிஸபெத்தையின் உடலுக்கு, மோனன் - முனிவனாகிய கருணையன்.

2. மலர்க்கண், உவமைத்தொகை, படலை - மாலை, குவ்வேடு - குவியுந்தாமரை.

3. அளி - வண்டு, மஞ்ஞை - மயில், பூவை - நாகணவாய்ப்புள் (மைனா), வளி - காற்று, புனல் - நீர், உளி - இடம், உம்பர் - வானவர்.

4. பூவே - மண்ணே, புரிவு - நன்றாய், பூஞ்சேக்கை - மலரணை, ஆக்கை - உடல், யாக்கை, மரூஉ; தொழிலாகு பெயர்.

5. நோய் - துயர், நுதலிய - முன் செய்ய நினைத்த, திரைச்சுனை - அலைகளை யுடைய சுனை.

6. அகடு - நடு, விம்ம - ஒல்லென்று ஓடி வரவும், கிளைத்த - வளர்ந்த, வரம்பு - கரை, வைகி - தங்கி, அழன்ற - வெந்த, அகல் கடல், வினைத்தொகை.

7. மண் நரம்பு - ஒப்பனை செய்த வீணையின் நரம்பு, உள் நரம்பு அழுத்த - உள்ளே அச்சம் மிகுந்த, தேம்ப - மெலிய, கால்வான் - கொப்பளித்தாற் போன்ற, பண் நரம்பு - வீணையின் நரம்பு.

8. பெட்பு - ஆசை, இல்லிய - ஒழுகிய, கவிர் - முள் முருக்க மலர், கான்றான் - உமிழ்ந்து சொன்னான்.

9. நேமி - சக்கரம், கார் - மேகம்.

10. மாசு கொள் வெண் நிறத்துகில் என்று கூட்டுக. சூல் சிறை - கருப்பமாகிய சிறை, தாளாள் - பாதத்தாள்; மரி, கிளவி - சொல், பழம் பழி - சன்ம பாவம், களங்கம் - குற்றம்.

11 உலைப்பிடும் - தீய வேதனை செய்யும், அலைவளர் உலகு- கடல் சூழ்ந்த உலகு, அலை, சினை ஆகு பெயர், வயின் - வயிற்றி லிருந்து.

12. வளம் - மாட்சி, உலந்து - (நான்) அழும்படி, கோன் - வெரோதன், அவலித்து - வருந்தும்படி, உய்த்தாள் - கொண்டு வந்து வைத்திருந்தாள்.

13. கொய்த - அறுக்கப்பட்ட, வீ - மலர், நுதி - நுனி, நச்சு - நஞ்சு; வலித்தல் விகாரம், புழை பெரும் வாய், புள்ளில் - பறவைகளைப்போல், கான் - காடு, தேம்ப - தேம்பி அழ, சரிந்தன அசும்பு - சரிந்த வழுக்கு நிலம்

14. உழை - மான், துன்னி - கூடி, தேன் - ஆண் வண்டு, பெண் வண்டு, அழல் - நெருப்பு, பள்ளி - படுக்கை, ஓதிமம் - அன்னம், கொடி - காக்கை, கோறல் - கொலைத்தொழில், உள்ளி - நினைத்து, வரி - புலி.

15. ஊழ்த்து - முறைமைப்படி, வேய் - மூங்கில், நோன்பு - தவம், ஆண்டகை - ஆண்டவன், நுதல்வு அரும் - நினைவில் அடங்காத.

16. செறு - வயல், போக்க நீடு இறைத்து - நெடுநாள் இறைத்து, ஆக்கம்-இலாபம், பெருவீடு - இன்பம்; பேரின்ப வீடு (மோட்சம்)

17. கற்றை - திரட்சி (கதிர்கள்), தனிமதி - நிகரற்ற அறிவு, துய்த்த - அநுபவித்த, துனி - துன்பம், அயர்ந்தது - வருந்தி னது, துணிபு அரு - மனத்துறவு விடாத, முனி மதிகுழவி சோர்ந்து-முதிர்ந்த உணர்வினால் முனியும் இளவயதினால் பாலனு மாய் இருந்த கருணையன் உடலில் சோர்ந்து, துயில்கின்றான் - நித்திரை கொண்டான்.

IV. சிறு நூல்கள்

1. கந்தரந்தாதி

தெளிதரு - ஆராயப்படுகிற, முத்தமிழ் - இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழ், தெய்வப் பலகை - சங்கப் பலகை, தெளி - தெளிந்த, தரு - மரம்; குற்றாலமரம், முத்து - முந்தி யிருந்தருளுகின்ற, 'முந்து' என்பது வலித்தல் விகாரம் பெற்று

நின்றது, அமிழா நித்தர் - அழிவில்லாத நித்தியராகிய பரமசிவன், என் - (காரணம்) என்ன, நாள் - நட்சத்திரம் (போல்), தெளிதரு- பிரகாசிக்கும், ஏய் - ஒத்த, நகை - பல், செல்வி - வள்ளி, தினை - ஒரு தானியம், தெளி - கொழிக்கின்ற, தரு முத்து - கொடுக்கும் முத்தத்தினால், அமிழ் - (ஆனந்தத்தில்) ஆழ்ந்த வராகிய, செவ்வேள் - முருகன், குனித்து - தாழ்த்தி.

2. திருவரங்கக் கலம்பகம்

செல் அரித்த ஓலை - எழுத்தாணியால் எழுதப்பட்ட ஓலை, வேடர், கல்வி யறிவில்லாமையால் இங்ஙனம் இகழ்ந்து கூறினர், பின்னை கேள்வர் - நப்பின்னைப் பிராட்டியின் கணவனான கண்ணன், பாசம் - ஆசை, மறவர் - வீரர், பட்டது - இறந்து போனதை, பதி - இடம், கவிகை - குடை, கவிழ்ந்திருப்பது எனக் காரணப் பெயர், மா - பெரிய, காலும் நாழியும் - மரக்காலும் படியும், சாமரம் - கவரி, குடில் - சிறு வீடு.

3. குற்றாலக் குறவஞ்சி

சூழ - சுற்றிலும், மேதி - எருமை, வாளை - மீன், கூழை - குட்டை, சந்திரசூடர் - சந்திரனைத் தலைபிற் கொண்டுள்ள சிவ பெருமான், தென் ஆரிய நாடு - தெற்குத் திசையிலுள்ள ஆரிய நாடு.

4. நால்வர் நான்மணி மாலை

விளங்கு இழை - விளங்குகின்ற ஆபரணங்களையுடைய உமா தேவி; வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, பகர்ந்த-பங்கிட்டுக் கொண்ட, முக்கண் காரணன் - மூன்று கண் களையுடைய முதற் கடவுள் ; சிவன், ஆரணம் - வேதம், ஆதி- முதற்கடவுள்; சிவன், பரவும் - துதிககின்ற, வாதவூர் அண்ணல் - மாணிக்கவாசகர், இவர் திருவாதவூரில் பீறந்தவர், வாதவூர், மதுரைஜில்லா, மேலூர் தாலுக்காவில் உள்ளது, வாசகம்- திருவாசகம், விழிநீர் - கண்ணீர், பெருக்கி - பெருகவிட்டு ; சொரிந்து, தொடுமணல் கேணியின் - மணலின் கண் தோண்டிய கேணிபோல; இன், ஐந்தனுருபு ; ஒப்புப் பொருளது, சுரந்து - ஊறி, மெய் மயிர் பொடிப்ப - உடம்பில் மயிர் சிலிர்க்க, விதிர் விதிர்ப்பு - நடுநடுக்கம், ஆகுநர் - ஆகுபவர், மன்பதை - மக்கள் பரப்பு.

5. திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்

1. பொன்னி-காவிரி, புனல் - நீர், புடை-பக்கம், பணிலம்-சங்கு, வலம்புரி - வலப்புறமாக முறுக்கியுள்ள சங்கு, கலம்-பாத்திரம்.

2. முகை - மொட்டு, கழை - கரும்பு, நித்திலம் - முத்து, வல்சி - சோறு, கறி திருத்தி - கறி சமைத்து, பரிந்து விரும்பி, அடும் - சமைக்கும். அயிராவதம் - வெள்ளையானை, பாகன் - இந்திரன், சென்னி - தலை, சிறு இல் - சிறு வீடு, சிதையேல் - அழிக்காதே; எதிர்மறை ஏவல் வினைமுற்று, திரை - அலை.

V. பல்வகைப் பொருள்

1. மருத நில வளம்

1. புனல் - நீர், சிறை செய்யும் - தடுத்து அடைக்கும், உழுநர் - உழவர், குழு - கூட்டம், குரவை - பெண்கள் கை கோத்து ஆடும் ஒரு வகைக்கூத்து, கழனி - வயல், வான் -சிறந்த, வித்துநர் - விதைப்போர், ஓதை, சும்மை, ஆர்ப்பு, கலிப்பு, முழக்கு, ஒலியைக் குறிக்கும் சொற்கள், மாது, ஓ, அசைகள்.

2. சிறை - சிறகு, இனம் - கூட்டம், அரும்பு - மொட்டு, வார்தரு - ஒழுகுகிற, தேறல் -தேன், சினை - கிளை, பலவின் பழம்- பலாப்பழம், பழனம் - வயல்.

3. கூன் இரும்பு - வளைந்த இரும்பு ; அரிவாள், குறைத்து- அறுத்து, சும்மை - கட்டு, நிவந்து உயர் - மிக உயர்ந்த; ஒரு பொருட் பன்மொழி, வரை - மலை, தெழித்து - மிதிக்கச் செய்து, வை - வைக்கோல், பண்டி - வண்டி ; திசைச்சொல்.

2. உடல் நல வழிகள்

1. வயிரம் - உறுதி, திடம் - வலிமை, அம்மம்மா, வியப்பிடைச் சொல்.

2. அதிர - (உடல்) அதிரும்படி ; வருந்தும்படி.

3. நேயமுடன் - அன்புடன், ஆய - உண்டாகிய, உறக்கம், தொழிற் பெயர், உரன் - வலிமை.

3. தமிழ் மொழியின் சிறப்பு

1. கண் நுதற் பெருங்கடவுள் - நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான், கழகம் - (மதுரையிலிருந்த முதல் தமிழ்ச்) சங்

கம், பண் - இசை, மண்ணிடை - உலகத்தில், எண் இடைப்பட - எண்ணிக்கையில் அகப்பட்டு, படுமோ, ஓகாரம் எதிர்மறை, தமிழ், இலக்கண வரம்புள்ள மொழி என்பது கருத்து.

2. முருகு - நறுமணம், ஒளிரும் - விளங்கும், வானவர் - தேவர், அம் கொன்றைத்தாரன் - அழகிய கொன்றை மாலையை யுடைய சிவன்.

3. தேங்கு - தங்கியிருக்கிற, கவின் - அழகு, ஆங்கிலத்தில் - ஆங்கிலத்தைப்போல ; இல் ஐந்தனுருபு ; ஒப்புப் பொருளது, அகத்தும் புறத்தும் - அகப்பொருளிலும் புறப்பொருளிலும், காண், முன்னிலை யசை.

4. வனப்பு - அழகு, அளி - கருணை, மாக்கள் - பகுத்தறிவில்லாதவர்கள்; குண்டு நீர் - ஆழமான நீரையுடைய கடல்.

---

4. வருணனை

1. அந்திமாலைச் சிறப்பு

அயர்ந்து - இன்பத்தால் தன்னை மறந்து, பெடை - பெட்டை, பூம்பொதி - பூவினது கட்டு, இருந்தெங்கு - பெரிய தென்னை மரம், அரிக்குரல் - மெல்லிய குரல், அழைஇ, சொல்லிசை யளபெடை, இறுத்தனள் - தங்கினள், மருங்கு - பக்கம்.

2. காற்றுச் சோலையில் உலாவுதல்

பொங்கர் - சோலை, வாவி - குளம், பங்கயம் - தாமரை, பை - பசுமையான, கடி - வாசனை, மயிலை - இருவாட்சி, கொங்கு - தேன், மணம் - வாசனை, தென்றல் - தெற்கிலிருந்து வரும் காற்று, கலைகள் - நூல்கள், தேரும் - ஆராய்கின்ற.

3. காற்றில் மரக்கிளை அசைதல்

சேட்டிகைத் தென்கால் - தூரத்திலிருந்து வரும் தென்றற் காற்று ; சேண் + திகை ; திகை - திசை, மது - தேன், தும்பி - வண்டு, முரல - ஒலிக்க, பாவைமார் - நாட்டியப் பெண்கள்.

5. எழு வள்ளல்கள்

வானம் - மழை, மலைக்கவாஅன் - மலைப்பக்கம், கவாஅன், இசைநிறையளபெடை, கானம் - காடு, மஞ்ஞை - மயில், கலிங்கம் - போர்வை, நல்கிய - கொடுத்த, திறல் - வலிமை, ஆவியர்

பெருமகன் - ஆவியர் குலத்துத் தோன்றிய பெருமை பெற்ற மகன், கல் - மலே, பேகன் - ஒரு வள்ளல்.

சுரும்பு - வண்டு, வீ - பூ, உறைக்கும் -(தேனைத்) துளிக்கின்ற, நாகம்-சுரபுன்னே, முல்லேக்கு-முல்லேக் கொடிக்கு, பிறங்கு-விளங்கு கின்ற, சாரல் - பக்கம், பறம்பு-பறம்புமலே, பாரி - ஒரு வள்ளல்.

கறங்கு - ஒலிக்கின்ற, வால் - வெண்மையான, உளே - பிடரி மயிர், புரவி - குதிரை, மருள - வியக்கும்படி, ஈரம் - அருள், இர வலர்க்கு - யாசகர்கட்கு, ஈந்த - கொடுத்தவனை, அழல்-சினத்தீ, கழல் - உழலுகின்ற, தொடி - ஒருவகை அணி, தடக்கை, உரிச் சொற்ருெடர், காரி - ஒரு வள்ளல்.

ஆல் அமர் செல்வற்கு - ஆலமரத்தின் கீழிருந்த இறைவ னுக்கு, அமர்ந்தனன் கொடுத்த - நெஞ்சு பொருந்திக் கொடுத்த, அமர்ந்தனன், முற்றெச்சம், சாவம் - வில், சாந்து - சந்தனம், புலர்ந்த - காய்ந்த, திணிதோள் - வலிமையுள்ள தோள், ஆர்வம் - விருப்பம், ஆய் - ஒரு வள்ளல்.

மால் - பெரிய, வரை - மலே, கவினிய - அழகு பெற்ற, நெல்லி- கருநெல்லி, அமிழ்து விளே தீம்கனி - அமிர்தத்தின் தன்மை தன் னிடத்தே யுண்டான இனிய பழம், உரவுச்சினம் - வலிமையுடைய கோபம், கனலும் - நின்றெரியும், அரவம் - ஒலி, தானே - சேனே, அதிகன் - ஒரு வள்ளல்.

கரவாது - மறைக்காமல், நட்டோர் - நட்புச் செய்தோர், உவப்ப - மகிழும்படி, நடை பரிகாரம் - நடப்பதற்கு வேண்டிய பொருள்களே, முட்டாது - தட்டுப்படாமல், முனே - பகைப்புலம், வளி துஞ்சு நெடு கோடு-காற்றுத் தங்கும் நீண்ட உச்சி, நளிமலே - நெருங்கிய மலே, நள்ளி - ஒரு வள்ளல்.

நளி சினே - நெருங்கிய கிளே, நறும்போது - வாசனேயுள்ள மலர்கள், நாகு - இளமை, நாகம் - சுரபுன்னே, குறு பொறை - சிறியமலே, கோடியர் - கூத்தாடுவோர், காரிக்குதிரை - காரியென் னும் குதிரை, காரி - ஒருவள்ளல், ஓரிக்குதிரை - ஓரியென்னும் குதிரை, ஓரி - ஒரு வள்ளல், என - என்று (சிறப்பித்துச்) சொல் லும்படி, ஆங்கு - அக்காலத்தில், எழு சமம் கடந்த - (தம்மேல்) வருகின்ற போர்களே வென்ற, எழு உறழ் - கணேயத்தோடு மாறுபடுகின்ற, எழுவர் - ஏழு வள்ளல்கள்.

VI தனிப் பாடல்கள்

1. பூமகள் - இலக்குமி, ஏவுவான் - ஏவுகின்றவன்; வினையாலணையும் பெயர், ஏது உரைக்கும் - என்ன சொல்லுவான், நாமம்- பெயர், சரம் - அம்பு, பிறை சூடும் பெம்மான் - சிவபெருமான், உவந்து உறையும் - மகிழ்ந்து வசிக்கும், சேர்வு - சேர்ந்திருத்தல்; ஊர், திருவேகம்பம் - காஞ்சிபுரம்; திரு + ஏகு + அம்பு + அம் எனப்பிரிந்து வினாக்களுக்கு விடைகளாவதைக் கண்டு கொள்க.

2. சங்கரர் - சிவன், ஆறு - கங்கை, தலை - தலையிலுண்டு, சண்முகன் - ஆறுமுகன்; முருகன், ஆறுதலை - ஆறு தலைகள், ஐங்கரன் - விநாயகன், மாறுதலை - மாறுபட்ட தலை: யானைத்தலை, சங்கைப் பிடித்தோர்க்கு - திருமாலுக்கு, ஆறுதலை - (காவிரி, கொள்ளிடம் ஆகிய இரண்டு) ஆறுகளுக்கிடையில் இருப்பிடம் உண்டு, பித்தா - சிவபெருமானே, படித்தோர் - துதித்தோர், ஆறுதல் (துன்பம்) தணிதல்.

3. முக்காலுக்கு - மூன்று கால்களைக் கொண்டு, ஏகாமுன்- நடவாமுன், முன் நரையில் வீழாமுன் - இனி வரக்கூடியதாகிய நரையுண்டாவதற்கு முன்னால், அக்காலரை - அந்த இயமனை, கால் - காற்று; உயிர், இருமாமுன் - இருமுவதற்கு முன்னால், மாகாணி - பெரிய இடம்; சுடுகாடு, கச்சி - காஞ்சீபுரம், ஒருமாவின்கீழர் - ஒப்பில்லாத மாமரத்தின்கீழ் எழுந்தருளியுள்ள ஏகாம்பரநாதர், இச்செய்யுளில் முக்கால் முதல் ஒருமா வரையிலுள்ள பின்ன எண்களை வைத்துப் பாடியுள்ளது, அறிந்து மகிழ்தற்குரியது.

4. செந்தமிழ்ச் செல்வன் - அகத்தியன், சேடன் - ஆதிசேடன், இசை வல்லோன் - தும்புரு, கந்தன் - முருகன், சொல்லும் - துதிக்கும், வெட்கி - நாணி, அந்தரம் - விண்ணுலகம், வெற்பு - பொதிய மலை, இழி பாதாளம் - ஆழ்ந்த பாதாள வுலகம்; இராமச்சந்திரக் கவிராயரைக் கண்டு, அகத்திய முனிவர் பொதியமலையிலும், ஆதிசேடன் பாதாளத்திலும், தும்புரு விண்ணுலகத்திலும் ஓடி மறைந்தனர் என்று கூறியுள்ளது தற்குறிப்பேற்றம்.

5. வீ - கருடன், மன் - தலைவன், திருமால்; வேதன் - பிரமன், வே + தனக்கு, வே - மூங்கில், வேதனுக்கு - மூங்கிலுக்கு, சிவன் திருநெல்வேலியில் ஒரு மூங்கிலிற் பிறந்தார் என்பது கதை, கா - கற்பகச் சோலை; மன் - தலைவன்; இந்திரன், வீமன் தம்பி-

அருச்சுனன், மா - குதிரை, மன் - தலைவன்; நகுலன், தமையன்-தருமன், காலன்-இயமன், ரா-இராத்திரி, மன்-தலைவன்; சந்திரன், ரா - இராத்திரி; கருமை, வண்ணன் - நிறமுள்ளவன்; மன்மதன்.

6. விரகன் - வல்லமையுடையவன், இமசேது பரியந்தம் - இமயமலை முதல் இராமேசுவரம் வரையில், ஒடு - சீட்டுக்கவி, சேடாதிபன் - ஆதிசேடன், பாடாத கந்தருவம் முதலாயின குதிரைக்கு வெளிப்படை, கந்தருவம், கந்துகம், கோணம், கொக்கு, கோடை, குந்தம், பாடலம், மா, சடிலம், கிள்ளை என்னும் இவை எல்லாம் குதிரை எனப் பொருள் பயக்குமாறு அடைமொழிகள் சேர்த்துச் சொல்லிப் பிறபொருள்களினின்று பிரித்துக் காட்டினர். கந்தருவம் என்பதற்கு இசை என்றும் பொருள், பாடாத கந்தருவம் எனவே இசை அன்று என்பது வெளிப்படையாக விளங்கிக் குதிரையைக் குறித்தது. பிறவும் இவ்வாறே அறிந்து கொள்க.

VII. பொன் மொழிகள்

1. யாதும் - எல்லாம், கேளிர் - சுற்றத்தார், தீது - கேடு, நன்று - நல்லது, வாரா - வரமாட்டா, நோதல் - துன்புறுதல், தணிதல் - தீர்தல், புதுவது அன்று - புதியது அன்று; (கருவில்) தோன்றிய காலமுதலே தொடங்கியுள்ளது, மகிழ்ந்தன்றும் இலம் - மகிழ்ச்சியடைந்தோமில்லை, முனிவு - வெறுப்பு, இன்னாது - துன்பந்தருவது, மின் - மின்னல், வானம் - மழை; இடவாகு பெயர், தலைஇ - பெய்து; சொல்லிசை அளபெடை, ஆனாது-அமையாது, பொருது - அலைத்து, இரங்கும் - ஒலிக்கும், மல்லல் - வளப்பம், வழிப்படூஉம் - வழியே போகும், புணை - தெப்பம், முறை - ஊழ், திறவோர் - நன்மையின் வகைகளை யறிந்தவர், காட்சியில் - நூலால், வியத்தல் - மதித்தல், இகழ்தல் - பழித்தல்.

2. ஆல், அம்ம, அசைகள், அமிழ்தம் - அமிர்தம், இயைவது - (தெய்வத்தாலும் தவத்தாலும்) கூடுவது, தமியர் - தனித்தவராய், துஞ்சலும் - சோம்பியிருத்தலும், கொடுக்குவர் - கொடுப்பர், அயர்வு - மனக்கவலை, நோன்தாள் - வலியமுயற்சி, முயலுநர் - முயல்பவர், உண்மையான் - உண்டாகலால்.

The Liberty Press, G.T., Madras.